# கேள்விகளும் பதில்களும்

நாம் ஜெபத்திற்காகச் சற்று நேரம் நின்ற வண்ணமாய் இருப்போமாக.

அன்புள்ள தேவனே, முதலாவதாக, எங்களுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்காக இன்றிரவு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறபடியால் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அதை விசுவாசிக்கும் ஜனங்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களுக்கு ஒரு தேவன் இருப்பதற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், வெறுமென ஒரு கற்பனையான தெய்வம், ஒரு கற்பனையான விக்கிரகம், ஒரு கற்பனை ஆவி அல்ல; அதைக் குறித்து கற்பனையானது ஒன்றுமில்லை—ஒரு உண்மையான ஜீவனுள்ள தேவன் எங்களோடும் எங்களுக்குள்ளும் ஜீவித்து, எங்கள் மூலமாகக் கிரியை செய்கிறார். தேவனுக்கு ஒரு சிலை எழுப்புவதல்ல, ஆனால் நாங்கள் ஜீவிக்கிற தேவனுடைய சாயல்களாக இருப்பது…பரிசுத்த ஆவியானவர் ஒரு சிலையினூடாகப் பேசவில்லை, ஆனால் ஒரு மீட்கப்பட்ட பாத்திரத்தினூடாகப் பேசுகிறார்—தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். இதற்காக நாங்கள் உமக்கு எவ்வளவாய் நன்றி செலுத்துகிறோம், மகத்தான அக்கினி ஸ்தம்பம் எங்களைப் பின் தொடருகிறது, இல்லை, சரியாகக் கூறினால், நாங்கள் அதைப் பின் தொடருகிறோம், அதே ஆவியின் எல்லா மகத்தான வெளிப்படுத்துதல்களுக்காகவும், அது பூமிக்கு வந்தபோது, அது எப்பொழுதும் செய்யப்பட்ட அதே வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. அது எங்களுக்கு என்னே ஒரு ஆறுதலை அளிக்கிறது!

2 கர்த்தாவே, நாங்கள் அணுகிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், உமது உதவியால் எவ்வாறு சிறந்த கிறிஸ்தவர்களாகவும், வாழ்வியல் தகுதிக்கு மிகவும் பொருத்தமானவர்களாகவும் இருப்பது என்பதை அறிந்துகொள்வதற்காகவும் கற்றுக்கொள்வதற்காகவுமேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் இன்றிரவு நாங்கள் கூடியிருக்கவில்லை. கர்த்தாவே, நீர் எங்களுக்கு உதவி செய்யமாட்டீரா; நீர் எங்களுக்குத் தேவை. இயேசுவின் நாமத்தில். ஆமென். (நீங்கள் அமரலாம்.)

3 ஏறக்குறைய முப்பது அல்லது நாற்பது கேள்விகள் உள்ளன. அவைகளுக்கு நான்—நான் எப்படித்தான் பதிலளிப்பேன் என்று எனக்குத் தெரியவில்லை. அவைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியுமா என்று நான் இந்தப் பிற்பகல் கடினமாக முயற்சித்தேன்,

ஆனால் என்னால் அதைச் செய்ய முடியவில்லை. ஆனால் இந்தக் கேள்விகளுக்கு என்னால் முடிந்தளவு—நான் பதில் அளிக்கப் போகிறேன் என்று நான் கூற விரும்புகிறேன், ஏனென்றால் அவைகள் கிறிஸ்தவர்களுடைய இருதயங்களிலிருந்து வருகிற, அருமையான கேள்விகளாயிருக்கின்றன. மேலும் எனக்குத் தெரிந்த வரையில் அவைகளுக்கு எவ்வளவு விவேகமாகப் பதிலளிக்க வேண்டுமோ, அதே அளவு விவேகத்துடன் பதிலளிக்க நான்—நான் நிச்சயமாக விரும்புகிறேன். மேலும் இன்று காலை இந்தக் கேள்விகளைப் புரிந்துகொள்ளவும், அவர் நமக்கு அளித்த பதில்களுக்காகவும், அவர் நமக்கு உதவிய விதத்திற்காக நான்—நான் கர்த்தருக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

4 இப்பொழுது, நான் இங்கே எல்லாவற்றையும் கலந்து வைத்துவிட்டேன், இன்னும் நூற்று ஐம்பது இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இன்று காலை நாங்கள் சுமார் இருபது வரை வந்தோம் என்று நினைக்கிறேன். அதனால், இப்போது, நாம் தொடங்குவதற்கு முன், *முரசுகள் முழங்க ஒரு சபை ராக் - ரோல் நடனமாடுகிறது* என்ற இந்தக் கட்டுரையை யாராவது பார்க்க விரும்பினால், நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன் இங்குள்ள பிரஸ்பிடேரியன் ஊழியக்காரர் தன்னுடைய சபையோரை ராக் அண்ட் ரோலில் வழிநடத்துகிறார், அந்தச்—அந்தப் புனித சடங்கிற்கான ஒரு நிகழ்ச்சி…நான் இன்னும் ஒரு நிமிடம் பார்க்கட்டும்.

5 "இளம் பருவ அங்கத்தினர்கள் ஜாஸ்—ஜாஸ் இசைக்கு ஆடுகிறார்கள். உணர்ச்சிபூர்வமான நாடகம் நவீன பழமொழியைக் கொண்டு சிலுவை மரணத்தை விவரிக்கிறது, இதிம், ராக்-அண்ட்-ரோல்." இங்குள்ள போதகர் அங்குள்ள வாலிபர்கள் அனைவரையும் வழி நடத்தி, கிறிஸ்துவின் உணர்ச்சிகளின் வழியாகச் சென்று, ராக் அண்டு ரோல் மற்றும் ஜாஸ் போன்ற இசைக்கருவிகளில் சிலுவையில் அறையப்படுதல் போன்ற இசைக்கருவிகளை இசைத்தனர். நல்லது…அது மேரிலாந்தில் உள்ளது. இப்பொழுது, அது ஒரு காரியமல்லவா?

6 அதன்பின்னர், இதோ அந்தப் புகைப்படம்…நான் இந்தக் காலையில் அந்தப் பீட்டில்ஸ் பாடல்களைப் பற்றி உங்களிடம் கூறிக் கொண்டிருந்தேன், *பீட்டில்ஸின் திரும்புதல்,* அங்கே கட்டுரைகள் உள்ளன; நீங்கள் அதைப் பத்திரிக்கையிலிருந்தும் மற்றும் பல்வேறுபட்ட காரியங்களிலிருந்தும் படிக்க வேண்டும். "…அது ஒரு புதிய மார்க்கத்தை நிறுவியிருந்தது." இப்பொழுது, அவர்களுடைய மேலாளர்…நான் இங்கே காகிதத்திலிருந்து ஒரு குறிப்பை வைத்திருக்கிறேன். உங்களுக்கு நேரமில்லை…யாராவது இவைகளைப் படிக்க விரும்பினால், அல்லது என்னால் அவைகளை விளம்பரப் பலகையில் வைக்க முடிந்தால், அப்பொழுது நீங்கள் அவைகளைப் படிக்கலாம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற

அந்த அதிர்ச்சியூட்டும் நேரத்தை நான் உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன். நீங்கள் அதைப் புரிந்து கொள்ளாமலிருக்கலாம், ஆனால் ஜனங்களே, இந்தக் காரியங்கள் என்னவாயிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்! நான் சகோதரன் கேப்ஸிடம் கேட்டிருக்கிறேன், அவர் ஒரு நல்ல கல்வியறிவு பெற்றவர், என்னைக் காட்டிலும் நன்றாகப் படிக்கக் கூடியவர், பீட்டில்ஸ் பத்திரிக்கையின் மேலாளர் எழுதியுள்ள இந்தக் கட்டுரையைப் படிக்கும்படி நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். சகோதரன் கேப்ஸ், இந்த நேரத்தில் உங்களால் அதைச் செய்ய முடியுமா?

7 [அது கூறுகிறது:]

[பீட்டில்ஸ் தங்களைக் குறித்து வியந்துபோய், பதில் ஏதும் அளிக்கவில்லை. “அது நம்பமுடியாதது, முற்றிலும் நம்பமுடியாதது,” பீட்டில்ஸின் பத்திரிக்கை அதிகாரி டெரெக் டெய்லர் கூறுகிறார். “இதோ இந்த நான்கு பையன்கள் லிவர்பூலிலிருந்து வருகிறார்கள். அவர்கள் முரட்டுத்தனமானவர்கள், அவர்கள் ஆபாசமானவர்கள், அவர்கள் இழிவானவர்கள், அவர்கள் உலகத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு புதிய மார்க்கத்தை ஸ்தாபித்தது போன்றே அது உள்ளது. அவர்கள் முற்றிலும் கிறிஸ்துவுக்கு விரோதமானவர்கள். நானும் கிறிஸ்துவிற்கு எதிரானவன் என்றே நான் பொருட்படுத்திக் கூறுகிறேன், ஆனால் அவர்கள் கிறிஸ்துவிற்கு மிகவும் எதிரானவர்களாக இருப்பதால் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறார்கள், அது ஒன்றும் எளிதான காரியம் அல்ல. ஆனால் நான் அவர்களால் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். எல்லோருக்கும் அப்படித்தானே? அவர்களுடைய நேர்மையால் நான் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். அவர்களை அதிகம் விரும்புகிறவர்களே, மிகவும் கொந்தளிக்க வேண்டியவர்களாவர். உதாரணமாக, ஆஸ்திரேலியாவில், நாங்கள் ஒவ்வொரு முறை விமான நிலையத்திற்குச் சென்றடையும்போதும், டி கால் தரையிறங்கியது போலவோ, அல்லது இன்னும் சிறப்பாகச் சொல்வதானால், மேசியாவே தரையிறங்கியது போலவோ இருக்கும். பாதைகளின் இருபுறமும் மக்கள் வரிசையாக நின்றிருந்தனர், ஊனமுற்றோர் தங்கள் கைத்தடிகளைத் தூக்கி எறிந்தனர், பையன்களில் ஒருவனது தொடுதல் தங்களை குணப்படுத்தும் என்பது போல, நோயுற்ற மக்கள் காரை நோக்கி விரைந்து வந்தனர், வயதான பாட்டிமார்கள் தங்கள் பேரக்குழந்தைகளுடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர், நாங்கள் அவர்களைக் கடந்து செல்லும்போது, அவர்களின் முகபாவத்தை என்னால் காண முடிந்தது.]

[“அது யாரோ ஒரு இரட்சகர் வந்துவிட்டது போலவும், இந்த ஜனங்கள் யாவரும் மகிழ்ச்சியாயும், நிம்மதியாயும்,

இப்பொழுது காரியங்கள் எப்படியாவது நன்றாக இருக்கப் போகிறது என்பது போல இருந்தது.”]

[டெய்லர் சிறிது நேரம் நின்று, ஒரு சிகரெட்டை தன்னுடைய வாயில் வைத்தார். “பீட்டில்ஸ் செய்ய வேண்டிய ஒரே ஒரு விஷயம்,” அவர், “ஒரு குணப்படுத்தும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதுதான்” என்றார.]

8 அதைத்தான் அவர் கூறினார் அல்லவா? “அந்நாளில் அநேகர் என்னிடத்தில் வந்து, ‘கர்த்தாவே, நான்...செய்யவில்லையா?’ என்று சொல்வார்கள்” என்றார். பார்த்தீர்களா? இப்பொழுது, நீங்கள் உங்களுடைய நம்பிக்கையைச் சுகமளிக்கும் கூட்டங்களில் வைக்க முடியாது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா? நீங்கள் அதைப் போன்ற எந்த விதமான ஒரு அடையாளத்தின் பேரிலும் உங்களுடைய நம்பிக்கையை வைக்க முடியாது. நீங்கள் உங்களுடைய நம்பிக்கையை வைக்கக்கூடிய ஒரே காரியம் வேதத்திலிருந்து **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதன் பேரில் மாத்திரமேயாகும். இப்பொழுது, சபையே, என் பிள்ளைகளே, உங்களை நான் சரியாக இங்கேயேதான் வைத்திருக்க முயற்சித்திருக்கிறேன். எனக்கு ஏதாவதொன்று சம்பவித்தால், தேவன் என்னை இந்தப் பூமியிலிருந்து வெளியே எடுத்துப் போட்டால், நீங்கள் ஒருபோதும் தவறிப்போகாதீர்கள். உங்கள் முழு இருதயத்தோடு இதை நினைவில் கொள்ளுங்கள்: அந்த வார்த்தையோடு நிலைத்திருங்கள்! நீங்கள் அந்த வார்த்தையை விட்டுவிடாதீர்கள்! அதற்கு முரணான எந்தக் காரியமும், அது என்னவாயிருந்தாலும் கவலைப்படாமல் விட்டுவிடுங்கள். அப்பொழுது அது சரியென்று நீங்கள் அறிவீர்கள். புரிகிறதா?

9 இப்பொழுது ஒரு சுகமளிக்கும் கூட்டம்! தங்கள் ஆபாசத்தினாலும், அழுக்காலும், அசுத்தத்தாலும் தங்கள் சொந்த மேலாளர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய பாவி மனிதர்கள்; ஜனங்கள் தங்களுடைய ஊன்றுகோல்களை வீசி எறிந்துவிட்டு, இந்தப் பையன்களைப் பார்த்துச் சுகமடைகின்றனர். அது மிகவும் அசிங்கமாகவும், அசுத்தமாயும், அந்திக்கிறிஸ்துவாகவும் இருக்கிறதே! நீங்கள் பாருங்கள், அது சாத்தான் ஒரு போலியான பிரச்சாரத்தில் இருக்கிறான். புரிகிறதா? கிறிஸ்து செய்யக்கூடிய எந்தக் காரியத்தையும் அவன் செய்கிறான், ஆனால் அவனால் வார்த்தையை உறுதிப்படுத்த முடியவில்லை. பார்த்தீர்களா? அவன் அதன் பாகத்தை இங்கேயும், அதன் ஒரு பகுதியை இங்கேயும் எடுத்துக் கொள்வான், ஆனால் அவனால் அதை முழுவதுமாக எடுத்துக் கொள்ள முடியாது. பார்த்தீர்களா? அவனால் அதை ஒன்று சேர்க்க முடியாது. எனவே நீங்கள் பாருங்கள், கூடுமானால் அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும், ஏமாற்றி விடும் என்று வேதம் கூறினதில் வியப்பு ஒன்றுமில்லை: அந்திக்கிறிஸ்துவின் ஆவி.

10 இப்பொழுது, இங்கே அவர்களுடைய சொந்த பத்திரிக்கை

மேலாளர், பத்திரிகை முகவர், அவர் அவர்களுக்காக இருக்கிறார், அவர்களில் நம்பிக்கை கொண்டுள்ளார், அவரும் அதேக் காரியத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்று கூறினர், ஏனென்றால் அவர்கள் அவரை ஆதாயப்படுத்திவிட்டனர்.

11 அந்தப் பொல்லாத காரியங்கள், அவைகள்...இப்பொழுது, ஸ்திரீகளே, நான் ஏன் இந்தக் குட்டையான ஆடை அணிவதைக் குறித்து உங்களிடம் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா, முடி வெட்டுதல், குட்டையாக வெட்டுதல் போன்ற காரியங்கள் உள்ளன. அது ஒரு ஆவி. அது ஒரு ஆவி! இதோ அது நம்முடைய முன்னணி பத்திரிக்கைகளிலும், சபையில் உள்ள ராக் அன்ட் ரோல் மற்றும் மற்ற காரியங்களைக் குறித்தும் காண்பிக்கப்படும் ஒவ்வொரு காரியத்திலும் சரியாக உள்ளது. ஏன், அது சரியாகச் சாத்தானுக்கான ஒரு அமைப்பாய் உள்ளது, அவை இன்னமும் சபைகளாகவும், ஸ்தாபனங்களாகவும் இருக்கின்றன.

12 பிள்ளைகளே, உங்களுக்குத் தெரிந்த வேகத்தில் வார்த்தைக்குத் திரும்புங்கள்; அதை விட்டு விலகத் துணியாதீர்கள்! அந்த வார்த்தையோடு நீங்கள் நிலைத்திருங்கள்.

பாருங்கள், எப்படி அந்திக்கிறிஸ்துவின் ஆவி, அது அந்நிய பாஷைகளில் பேசி, அடையாளங்களையும், அற்புதங்களையும் காண்பிக்க முடியும்; அது வியாதியஸ்தரை சுகப்படுத்தக் கூடியது; அது இந்த எல்லாக் காரியங்களையும் செய்ய முடியும். பார்த்தீர்களா? அந்த ஜனங்கள் தாங்கள் தேவனை அணுகிக் கொண்டிருப்பதாகவும், அந்தப் பையன்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் சபையானது வார்த்தையைக் கைவிட்டுவிட்டது.

13 அந்தப் பையன்கள் சபையைச் சேர்ந்தவர்கள். எல்விஸ் பிரெஸ்லி ஒரு பெந்தேகோஸ்தே. பேட் பூன் ஒரு சர்ச் ஆப் கிரைஸ்ட். அந்த ஆட்களைப் பாருங்கள், பெந்தேகோஸ்தே சபையினர், சர்ச் ஆப் கிரைஸ்ட் சபையினர், மற்றும் அது போன்றவர்கள் அனைவரும் தீய ஆவிகளால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்து சபையைச் சேர்ந்த, பொன்னான குரல் கொண்ட ரெட் ஃபோலி, யாராலும் பாட முடியாத அளவுக்குப் பக்திப் பாடல்களைப் பாடுகிறார், அடுத்த குரலில் ராக்-அண்ட்-ரோல் இசையும் இருக்கிறது. அவர்களுடைய கனிகளினால் நீங்கள் அவர்களை அறிவீர்கள். அவர்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் என்று பாருங்கள். எல்விஸ் பிரெஸ்லி அசம்பெலிஸ் ஆப் காட் அங்கத்தினர்கள். அங்குதான் காரியம், அவர்கள் ஒவ்வொருவரும் அதை விரும்பினர், சாத்தான் அதை அவர்களுக்கு அளித்தான்.

14 நண்பர்களே, நீங்கள் பார்க்கவில்லையா எப்படி...அந்த

வார்த்தையை விட்டுவிடாதீர்கள். பாருங்கள், அது உங்களைப் பிடிக்கும் ஒரு ஆவியாகும்.

15 நான் இந்த ஸ்திரீகளிடத்தில் கூறுகிறேன், அவர்கள் இந்த ஆடைகளில் பாலுணர்ச்சியுடன் தங்களைக் காட்டிக்கொள்ளும்போது, விபச்சாரம் செய்ததற்காகத் தேவன் உங்களைப் பதில் கூறச் செய்யப் போகிறார். நீங்கள் சொல்வதைப் போல, நான் தேவனுடைய ஊழியக்காரன், ஒரு தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசித்தால், நான் உங்களுக்குச் சொல்வதைக் கேளுங்கள். பார்த்தீர்களா? உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம், உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால், நான் உங்களைச் செய்யும்படி கூறுகிறதை நீங்கள் அப்படியே செய்யுங்கள். நான் கூறுகிறதற்கு தேவன் என்னைப் பொறுப்பாளியாக்குவார். பார்த்தீர்களா? நீங்கள் உண்மையாகவே கூர்ந்து கவனியுங்கள், அந்தக் காரியங்கள் ஆவிக்குரியவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

16 சாதாரணமாக, ஒருக்கால் அந்த நபர்...*தேவன் தோலினால் மூடப்பட்டிருந்தார்* என்று அண்மையில் நான் பிரசங்கித்தேன், (பாருங்கள், புரிகிறதா?), என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? இப்பொழுது, இதை ஞாபகங் கொள்ளுங்கள், நம்மில் சிலர் இந்தக் காரியங்களை நமக்குக் கூற இந்த மண்டலங்களுக்குள் பிரவேசிக்க இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறோம். பார்த்தீர்களா? அது முன்னறிவு; அது தேவன் பேசுவதையும், காண்பிக்கிறதாயும் உள்ளது. நீங்கள் எந்தக் காரியத்தையும் மாம்சத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கும்போது, ஏன், அவர்கள் குற்றமற்றவர்கள் (இங்கே பாருங்கள்), அருமையான ஜனங்கள், நேர்மையானவர்கள், உங்களிடம் ஒரு பொய்யையும் அல்லது வேறொன்றையும் கூறமாட்டார்கள். ஆனால் முழு காரியமும் பிசாசாய் உள்ளது. மதசம்பந்தமான, ஒரு சுகமளிக்கும் கூட்டத்தைத் துவங்குதல். பார்த்தீர்களா? சரியாக அந்திக்கிறிஸ்து. பார்த்தீர்களா? அங்கே பிரஸ்பிடேரியன் மற்றும் அவை யாவும் உண்டு. நீங்கள் அந்த ஸ்தாபனங்களை, அவர்கள் எப்படி செய்கிறார்கள், அதே காரியத்தில் சரியாகப் பார்க்கிறீர்களா?

17 ஏன், சமீபத்தில் இங்கே இங்கிலாந்திலுள்ள லண்டனில், கிறிஸ்துவைப் போலப் பாவனை செய்ய ஒரு ராக் அண்ட் ரோல் குழுவை அவர்கள் வைத்திருந்தனர், யூதாஸும், மற்றுமுள்ள யாவரும்...அவர்கள் கிறிஸ்துவை "அப்பா-ஓ" என்று அழைத்தனர், பைத்தியக்கார பிள்ளைகள் பேசுகிற அந்த எல்லா வார்த்தைகளையும் பேசுகிறார்கள். பார்த்தீர்களா? வாலிபப் பிள்ளைகள் உலகத்தைக் கைப்பற்றினர். இப்பொழுது, வேதம் முன்னுரைத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்: நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்கள்

(புரிகிறதா?), வாலிபப் பருவத்தினர் உலகத்தைக் கைப்பற்றி, அதைச் செய்துவிட்டனர்.

18 நான் சமீபத்தில் ஒரு இடத்திற்குச் சென்றேன்; அங்கே அந்தப் பழைய, அசுத்தமான தானியங்கி இசைப்பெட்டி போன்ற எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருந்தார்கள். நான் என்னுடைய குடும்பத்தைக் கூட அழைத்துச் செல்ல விரும்பவில்லை. நான் அந்தப் பெண்மணியிடம், "அவைகளின் பதிவுகளுக்கு எவ்வளவு செலவாகும்?" என்று கேட்டேன்.

"ஒன்றுக்கு பத்து சென்டுகள்."

"ஒரு மணி நேரத்தில் அது எவ்வளவு பேர் இசைக்க?" அவள் என்னிடம் சொன்னாள். நான், "இதோ பணம்; அதை அணைத்துவிடு!" என்றேன்.

"பாருங்கள்," அவள், "என்னால் அதைச் செய்ய முடியாது. அந்தச் சிறுவர்கள் அதை இசைக்க இங்கே வருகிறார்கள்" என்றாள்.

19 அப்பொழுது என்னால் அங்கே பணத்தை செலவழிக்க முடியவில்லை; நான் வேறெங்கோ சென்றேன். பார்த்தீர்களா? பாருங்கள், அந்தக் காரியம் உங்களைப் பதட்டமடையச் செய்யும்; அந்தப் பைத்தியக்காரத்தனமான விஷயங்களைக் கேட்ட பிறகு, நீங்கள் கீழே இறங்கிச் சென்று நிறைய மயக்க மருந்துகளை வாங்க வேண்டியிருக்கும். அது ஒரு கிறிஸ்தவனை எரிச்சலடையச் செய்கிறது. அந்தவிதமான காரியத்தை நீங்கள் விரும்பினால், உங்களோடுள்ள கோளாறு என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும், ஏனெனில் உங்களுக்குள் இருப்பது வார்த்தை அல்லாத ஒன்றைப் போஷித்துக் கொண்டிருக்கிறது. அது போஷித்துக் கொண்டிருக்கிறது...

20 இயேசு அதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்வதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது, உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தீர்க்கதரிசிகளில் ஒருவர் அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்வதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நண்பர்களே, நீங்கள் பார்க்கவில்லையா, முழு காரியமும் பிசாசினால் நிறைந்துள்ளது. அவன் எப்படி மார்க்கத்தின் ரூபத்தில் வந்து கிறிஸ்துவைப் போலவே சரியாகச் செய்வான் என்று வேதம் கூறியுள்ளது. பார்த்தீர்களா? ஆனால் நீங்கள் அதைக் கூறக்கூடிய ஒரே வழி, *இந்தச்* சபையில் சேர்ந்துகொள்வது அல்லது *அந்தச்* சபையில் சேர்ந்துகொள்வது அல்ல, வார்த்தையோடு தரித்திருப்பது; அவரே வார்த்தையாயிருக்கிறார்.

21 இப்பொழுது, கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. நாம் நேராகக் கேள்விகளுக்குச் செல்கிறோம். இப்பொழுது, ஏறக்குறைய...ஒரு மணி நேரம் பதினைந்து நிமிடங்கள்வரை...இந்த எல்லா கேள்விகளுக்கும் என்னால் பதிலளிக்க முடியாது. அங்கே அவைகளின் குவியல்களே உள்ளன.

அவை நல்ல கேள்விகள் என்று நான் நினைக்கிறேன். அவைகள் மிகவும் அருமையானவைகள். நான் தொடர்ந்து சென்று அங்கும் இங்கும் ஒன்றைத் தெரிந்து கொள்வேன். இப்பொழுது…அதற்குப் பதில்…

நான்…இன்றிரவு நான் கீழே வந்து, யாராவது அவைகளை படித்து, "ஆம்" அல்லது "இல்லை," "ஆம்" அல்லது "இல்லை" என்று கூறலாம் என்று நினைத்தேன்…அது மக்களுக்கு நியாயம் செய்வதாக இல்லை. அவர்கள் அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்படிக்கே கேட்டனர். நான்—நான் அவ்வாறு செய்யமாட்டேன், ஏனென்றால் என்னால் முடிந்தளவு நான் பதிலளிப்பேன்; என்னால் முடியாததை அடுத்த முறை நான் பதிலளிப்பேன்.

22 இப்பொழுது, நான்—நான்…அடுத்த ஞாயிறு பற்றி எனக்குத் தெரியாது. நான் சொல்கிறேன்; இன்றிலிருந்து புதன்கிழமைக்குள் எப்போதாவது நீ பில்லியைத் தொடர்புகொண்டால்…நாம் போக வேண்டியிருக்கலாம்.

23 இப்பொழுது, இங்கே ஒரு காரியம் உள்ளது. நான் நேர்காணல்களில் மிகவும் பின் தங்கியிருக்கிறேன். பில்லி எனக்கு *அந்த* அளவுக்கு உயரமான நேர்காணல்களின் குவியலைக் காட்டினான், அவற்றில் சில மாதக்கணக்கில் காத்திருந்தன. பாருங்கள், நான் இங்கே இருக்கும்போது, அவற்றில் சிலவற்றைப் பார்த்து, கூட்டத்தின் சிலவற்றைப் பார்த்து, அதை ஒருவிதமாகச் சமப்படுத்த என்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறேன். இந்த வாரம் நான் இல்லாதபோது ஜெபித்து, கர்த்தரிடம், "இவற்றை முடிப்பதா அல்லது—அல்லது நேர்காணல்களில் கலந்துகொள்வதா, நான் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்?" என்று கேட்கப் போகிறேன். நான் நேர்காணல்களை எடுத்துக் கொண்டால், அப்பொழுது நான் ஓடி…ஞாயிற்றுக்கிழமை வீட்டிற்கு வந்து, எங்காவது நேர்காணல் நடத்துவேன், நேர்காணல்களோடு நாள் முழுவதும் செல்ல வேண்டும். நான் அவ்வாறு செய்யவில்லையென்றால், ஏன், நான் மீண்டும் வரும் வரையில் நான் நேர்காணல்களைத் தள்ளி வைக்க வேண்டியதாயிருக்கும். நான் பதிலளிக்கவில்லையென்றால், அப்பொழுது நான் பதிலளிப்பேன்…நான்…பில்லி உங்களுக்கு ஒரு அட்டையை அனுப்புவான்.

24 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; இந்த அருமையான பிள்ளைகள், அவர்கள் எப்படி ஒருவரையொருவர் விரும்புகிறார்கள் என்று உங்களுக்குக் கூறுவது அருமையாயுள்ளது, அவர்கள் ஒருவரிலொருவர் கொண்டுள்ள அன்பையேக் காண முடியும். ஒருவர் மற்றவரிடம் கூறுவார், மற்றொருவர் கூறுவார்…பில்லி கிட்டத்தட்ட நூற்றைம்பது மைல்கள் தூரத்தில் உள்ள ஒரு பிரிவில் ஒருவரை அழைக்கிறான், மற்றவர்கள் மற்றவர்களைத் தொடர்பு கொள்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள்.

அவர்கள் எதையும் இழக்க விரும்புவதில்லை. அவர்கள்…என்ன நடக்கிறது என்பதைக் காண ஒவ்வொரு நிமிடமும் இங்கிருக்க விரும்புகின்றனர்; ஏனென்றால் கர்த்தர் ஏதாவதொன்றைக் கொடுக்க வேண்டுமானால், அதைப் பெற்றுக்கொள்ள அவர்கள் இங்கே இருக்க விரும்புகிறார்கள். நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

25 இப்பொழுது நினைவிருக்கட்டும், அருமையான நண்பர்களே, இந்தக் காலையில் நான் சில கேள்விகளின் பேரில் ஒரு அறிக்கையை அளித்தேன். மேலும், இன்று காலை எனக்குக் கிடைத்த இவற்றில் சில (ஆம்!), மக்கள் அரிசோனாவிற்குக் குடிபெயர்வதைப் பற்றியதாகவே அதிகமாக இருப்பதைக் கவனிக்கிறேன். பார்த்தீர்களா? நான் நினைத்தேன்…நீங்கள் புரிந்து கொள்ளும்படியாக அதைத் தெளிவாக்குவது நலம்.

26 இப்பொழுது, ஜனங்கள் எங்கே வாழ முடியும் என்றும், அவர்களால் என்ன செய்ய முடியும் என்றும் மற்றும்…நான் அவர்களுக்குக் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்க வேண்டாம்—வேண்டாம். இப்பொழுது, என்னுடைய அருமை சகோதரனே, நான் அதைக் கூறவில்லை. நேர்மையான ஜனங்கள் அங்கிருந்து வெளியேற விரும்புகிறார்கள். பாருங்கள், எவரேனும் இடம் பெயர்ந்து செல்ல விரும்பினால், நான் அங்கு இருக்கும் வரையில், நான் நிச்சயமாக மகிழ்ச்சியடைவேன், நான் அங்கே…நான் அங்குள்ளதைக் காட்டிலும் ஏறக்குறைய பத்து மடங்கு அதிகமாக இங்கு இங்கிருக்கிறேன். நான்…இப்பொழுது கிறிஸ்துமஸூக்கு இடையில், நான் அங்கு இருக்க கிட்டத்தட்ட நான்கு நாட்கள் உள்ளன. அதன்பின்னர் உடனடியாக, நான் வெளிநாடுகளுக்கு புறப்பட்டுச் செல்கிறேன். நான் ஒரு—ஒரு எழுப்புதலுக்காக அயல்நாடுகளுக்குச் செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்னர் நான் இங்கே கூடாரத்தில் இருப்பேன், நான் வழக்கமாக இந்த வசந்த காலத்தில் செய்வது போல. அதன்பின்னர் அங்கிருந்து, அரிசோனா முழுவதிலும் எனக்கு ஒரே ஒரு கூட்டம் மாத்திரமே உண்டு, அது ஜனவரி மாதம் பீனிக்ஸில் இரண்டு இரவுகள் கிறிஸ்தவ வர்த்தக புருஷர்களோடு வருகிறது.

பார்த்தீர்களா? எனக்குத் தெரியவில்லை…அங்கே *இருக்கும்* மக்கள், உம், அந்த ஒலிநாடாவைத் அணைத்துவிட முடியுமா? [சகோதரன் பிரான்ஹாம் சபையோரிடம் பேசும்போது ஒலிப்பதிவு கருவியை அணைத்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]

27 இப்பொழுது, நாம் இன்றிரவு இந்தக் கேள்விகளின் பேரில் துவங்கிக்கொண்டிருக்கையில், நான் இங்கு ஒன்றை எடுத்துக் கொள்வேன்…அவைகளை நீங்கள் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? “ஆமென்” என்று கூறுங்கள். [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] இந்த நேரத்தில் அது நமக்கு

நன்மை பயக்கும் என்று நான் நினைக்கிறேன். மேலும் ஓ, நான் நம்புகிறேன், விரைவில்...இன்று காலை இங்கு வருவதற்கு முன்பு, வேதாகமத்திலுள்ள சில—சில உரைகளையும் சில இடங்களையும் பார்த்தபோது, நான் நினைத்தேன், “ஓ, அது எவ்வளவு அற்புதமான காரியமாக இருக்கும்...நாம் கர்த்தருடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் அனைவரையும், யோபு மற்றும் அது போன்றோரையும் மீண்டும் கொண்டு வந்து, அவர்களைப் பற்றித் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்துவது எவ்வளவு அற்புதமான காரியமாக இருக்கும் (அது எவ்வளவு அற்புதமாக இருக்கும், இல்லையா?), அவர்கள் இன்றைய காலகட்டத்துடன் எவ்வாறு சரியாகப் பொருந்துகிறார்கள் (முழு வார்த்தையும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளது), அக்காலத்தின் அழிவுகள் மற்றும் பண்டைய காலங்கள் அனைத்தும் இன்றைய காலகட்டத்துடன் எவ்வாறு பொருந்துகின்றன; பழைய ஏற்பாட்டில் உள்ள அனைத்தும் கர்த்தராகிய இயேசுவின் வருகையைப் பற்றி எவ்வாறு பேசுகின்றன என்பதை உங்களுக்குக் காண்பிப்பதற்காகவே அது அமையும்.”

**279.** இப்பொழுது, நான் இங்கிருந்து இழுத்த முதல் கேள்வி: **சகோதரன் பிரான்ஹாம், ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய தலைமுடியை ஊசியைக் கொண்டு சுருளாக வைத்துக்—வைத்துக் கொள்வது தவறா? மேலும், அவளுடைய கைகளின் நீளம் எவ்வளவு இருக்க வேண்டும்? நன்றி. ஒரு சகோதரி.**

28 இப்போது, அது...அந்தப் பெண்ணுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இப்பொழுது, சகோதரர்களாகிய நம்மில் சிலருக்கு, “ஓ, முட்டாள்தனமான ஸ்திரீ” என்று நாம் நினைக்கலாம். ஆனால்—ஆனால் அது அவளுக்கு முட்டாள்தனமானதல்ல; அவள் அறிந்துகொள்ள விரும்புகிறாள்.

இப்பொழுது, பன்றி வால்கள் போன்று முடியை வைப்பதைக் குறித்தும், அல்லது வேறு ஏதோ காரியமா? நான் வருந்துகிறேன். நான்—நான்...அது...நான் வருந்துகிறேன். ஊசியைக் கொண்டு சுருளச் செய்தல். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஊசி கொத்துக்கள், பன்றி வால்கள்! அநேக ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் அதைத்தான் அணிவார்கள். நீங்கள் நினைவில் கொள்ளுங்கள், விதமான...அது சரியா? அவர்கள் அவைகளை பன்றி வால்கள் என்று அழைத்தனர், ஒருவிதமான சுருள் கீழே தொங்கிக் கொண்டிருக்கிறதா? வேண்டாம், ஊசி சுருள்கள், நண்பர்களே, என்னை மன்னிக்கவும்.

29 “அவள் எவ்வளவு கை நீளமுள்ள சட்டைகளை அணிய வேண்டும்?” அதைக் குறித்த எந்தக் காரியமும் இல்லை என்று நான்—நான் நினைக்கிறேன். எனக்குத் தெரியாது. பார்த்தீர்களா? என்னால் வேதாகமத்தோடு ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியாததை நான்—நான் அதைக் குறித்து அதிகம் கூற விரும்பவில்லை.

30 இப்பொழுது, நான் இதை எனக்காக உங்களிடம் கூறிக்கொண்டிருக்கிறேன், ஏனென்றால் இதை ஆதரிக்க வேதவாக்கியம் என்னிடம் இல்லை. நான் கூறும் ஒரே காரியம் பெண்மணிகள் தங்களுடைய தலைமுடியைக் கத்தரிக்கக் கூடாது என்பதைக் குறித்தேயாகும். அவர்கள் அதை எப்படி அணிய வேண்டும் என்று விரும்புகிறார்கள், அது அவர்களைப் பொறுத்தது. ஊசி சுருட்டைக் குறித்து, உண்மையாகவே, அவைகள் என்னவென்று எனக்குத் தெரியாது, ஒருவேளை, அவர்கள் தங்கள் தலைமுடியில் செருகிக்கொள்ளும் துணி கொக்கிகள் போன்றவையாக இருக்கலாம், அதுதான் எனக்குத் தெரிந்த ஒரே காரியம்…

31 கைச்சட்டைகளின் நீளங்களைப் பற்றி, ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறபடியால், அந்தக் காரியங்களைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்று தேவன் உங்களுக்குக் கூறுவார் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் பார்த்தீர்களா? ஒரு கிறிஸ்தவ நபராக அதை எப்படி செய்ய வேண்டும் என்பதை நீங்கள்—நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். தேவன் ஒரு குறிப்பிட்ட நீளத்தையோ அல்லது வேறெதையோ வெட்டுகிறதில்லை என்று நான் நினைக்கிறேன். நீங்கள் கண்ணியமாகவும், கௌரவமாகவும், சுத்தமாகவும் காணப்பட்டால், அது சரிதான் என்று நான்—நான் நினைக்கிறேன். நீங்கள் அவ்வாறு நினைக்கவில்லையா? பார்த்தீர்களா? இப்பொழுது, அது என்னுடைய கருத்து மாத்திரமேயாகும். இப்பொழுது, இது நான்தான், பாருங்கள், ஏனென்றால் வேதவாக்கியத்தைத் தவிர என்னால் வேறெதையும் ஆதரிக்க முடியாது.

32 உங்களுக்குத் தெரியுமா, தலைமுடிக்கு ஒரு—ஒரு நிறத்தைப் பூசுவதைக் குறித்த கேள்வி இந்தக் காலையில் எழுந்தது என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது, நான்—நான்…அது…அதைக் குறித்து என்னால்—என்னால் ஒன்றுமே கூற முடியாது. எனக்குத் தெரியாது, ஆனால் உங்களுடைய தலைமுடிக்கு நிறம் பூசக் கூடாது என்று கூறுவதற்கு என்னிடம்—என்னிடம்—என்னிடம்—என்னிடம் வேதவாக்கியம் இல்லை. இப்பொழுது, அது—அது…

ஸ்திரீகளாகிய நீங்கள், நீங்கள் அழகாகக் காணப்பட விரும்புகிறீர்கள், நீங்கள் அழகாகக் காணப்பட வேண்டும். சகோதரன் பிரான்ஹாம் பிள்ளைகளாகிய உங்களுக்கு விரோதமாக இல்லை. நீங்கள் என்னுடைய பிள்ளைகள்; நான்—நான்—நான் உங்களை நேசிக்கிறேன், நான்—நான் உங்களைத் திட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. நான்—நான் அதை வெறுமெனச் செய்யமாட்டேன்; நான் உங்களுக்கு உதவி செய்ய மாத்திரமே முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

33 ஆனால் இப்பொழுது, பாருங்கள், நான் கேட்கட்டும்…அந்தக் கேள்விக்கான பதிலாக நான் இதைக் கூறட்டும். இப்பொழுது, நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? இந்த ஒலிநாடாவில் உள்ள உங்களுக்கு,

இதோ, சகோதரிகளே: அதில் ஏதாவது கேள்வி இருக்குமானால், அதைக் செய்ய வேண்டாம். ஆனால் நீங்கள்—நீங்கள் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டு, அதைச் செய்யும்படி வழிநடத்தப்பட்டிருந்தால், அது வேதத்தில் தலையிடாமலும், ஒரு கேள்வியில் குறுக்கிடாத வரையிலும், அது கர்த்தருடைய சித்தம் என்று நீங்கள் பரிபூரண திருப்தியடைந்து, அதன்பின்னர் அதைச் செய்யுங்கள் (புரிகிறதா?), ஏனென்றால் அதைக் குறித்து “இல்லை” (புரிகிறதா?) என்று கூற வேதவாக்கியமே இல்லை. நான்…வேதாகமத்தில் அதைப் போன்ற எந்தக் காரியத்தையும் கூற வேண்டாம்.

34 ஏசாயா 5-ம் அதிகாரத்தை நான் அறிவேன், அது ஸ்திரீகளைக் குறித்து பேசப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன், எப்படி அவர்கள் மாறக்கூடிய ஆடைகளை அணிவார்கள், அதைப் போன்ற ஒவ்வொரு காரியத்தையும்; ஆனால் அது பெருமையாகவும், போலியான விஷயங்களாகவும் இருந்தது. நீங்கள் பெருமைக்காக அதைச் செய்தால், அப்பொழுது அது தவறாகும். பார்த்தீர்களா? தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயங்களை சோதித்துப் பாருங்கள். அதற்கான வேதவாக்கியம் ஏதுமில்லையென்றால், ஆவியானவர் உங்களை வழி நடத்துகிற வழியில், நீங்கள் முன்சென்று அதைச் செய்யுங்கள். ஆனால் இப்பொழுது, நீங்கள் நீண்ட முடியை வைத்திருக்க வேண்டுமா அல்லது குட்டை முடியை வைத்திருக்க வேண்டுமா என்று வரும்பொழுது, நீங்கள் நீண்ட முடியை உடையவர்களாயிருக்கிறீர்கள்; அது வேதம்.

35 இங்கே ஒரு கேள்வி உண்டு; நான்—நான் அதற்கு இப்பொழுதே பதிலளிக்கலாம். அது இங்கே உள்ளே இருக்கிறது; நான் அதை இன்று காலை அல்லது எப்போதோ கண்டேன். “நீங்கள் எப்போதும் பெண்களைப் பற்றி, அவர்கள் தலைமுடியை அலங்கரிக்கக் கூடாது என்று குறையைச் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள், ஆனால் ஆண்களைப் பற்றி ஒருபோதும் எதுவும் சொல்வதில்லை,” என்று கூறினார்.

36 இங்குள்ள ஒரு மனிதன் ஒரு பெண்ணைப் போன்று நீண்ட கூந்தலுடன் தன்னுடைய முதுகில் தொங்கிக் கொண்டிருப்பதை நான் கண்டால், “திருவாளரே, நீங்கள் ஏன் முடிதிருத்தும் கடைக்குச் செல்லக் கூடாது? நீங்கள் ஒரு பெண்மணியைப் போன்று காணப்படுகிறீர்கள்” என்பேன். பார்த்தீர்களா? ஆனால் ஆண்கள் வழக்கமாக அதைச் செய்வதில்லை. பார்த்தீர்களா? புருஷர்களைப் போலல்ல…இப்பொழுது, புருஷர்களின் பிழையற்ற தன்மையினால் அல்ல, அவர்கள் ஸ்திரீகளைப் போன்றே குற்றவாளிகளாயிருக்கிறார்கள்.

மறுபுறம், ஒரு மனிதன் தன் மனைவியை அதைச் செய்ய அனுமதித்தால், அவன் அதைக் குறித்து இரட்டிப்பான குற்றவாளியாயிருக்கிறான், ஏனென்றால் அவன்தான் வீட்டில்

அவ்வாறு கூற வேண்டியவனாய் இருக்க வேண்டும். அந்த மனிதன் தன்னுடைய சொந்த வீட்டைக் கூட ஆளுகை செய்ய முடியாமல் இருந்தால்; தேவனுடைய வீட்டில் அவனால் எப்படி ஆளுகை செய்ய முடியும்? பார்த்தீர்களா?

37 நாம் இங்கு வந்துள்ள எங்களுடைய பெண் குழுவினருக்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். நான் இதை மரியாதையுடனும், அன்புடனும் கூறுகிறேன், இப்பொழுது, இது உண்மையென்று தேவன் அறிந்திருக்கிறார். எனக்குத்—எனக்குத் தெற்கில் முன்பு பிரசங்கியாரான ஒரு நண்பர் இருந்தார், அவர் நான் எப்போதும் கண்டதிலேயே மிகவும் சுத்தமாகக் காணப்பட்ட சபைகளில் ஒன்றை நடத்தி வந்தார். ஸ்திரீகள் எங்கேயிருந்தாலும், நான் எப்போதும் கண்டதிலேயே மிக அழகான ஸ்திரீகள் அங்கே பரிசுத்தமாக, தேவபக்தியுள்ளவர்களாக, நீண்ட தலைமுடியுடன் அமர்ந்திருந்தனர். அந்தச் சபைக்குச் செல்வதை நான் எப்பொழுதும் பாராட்டுகிறேன். கர்த்தராகிய இயேசு இன்றைக்கு இங்கே அந்த நூறு மைல்கள் தூரமுள்ள ஒரு சபையை எனக்கு அளித்திருக்கிறார்: என்னுடைய ஸ்திரீகள்.

38 நீங்கள் மோசமாக இருக்க வேண்டும் என்று நான் உங்களைத் திட்டிக் கொண்டிருக்கவில்லை; நான் உங்களுக்காக மாத்திரமே மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். சாத்தான் எங்கும் நுழைவதை நான் விரும்பவில்லை. பார்த்தீர்களா? நீங்கள் பின்னோக்கி அல்ல, மேல்நோக்கிச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எந்தவொரு மயக்கும் சொற்களை, அல்லது அது போன்ற வேறொன்றாலோ, அல்லது "ஓ, அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே..." என்று சொல்வதாலோ, யாரும் உங்களை ஒருபோதும் ஏமாற்ற அனுமதிக்காதீர்கள், பார்த்தீர்களா? இப்படித்தான் சாத்தான் ஏவாளுக்கு வேதத்தை விளக்கினான். பார்த்தீர்களா? நீங்கள் வார்த்தை கூறுகிறதை அப்படியே விசுவாசிக்கிறீர்கள். சரி.

**280. மிக அவசரம். சகோதரன் பிரான்ஹாம், நேரம் முடிவடைந்து, நித்தியத்தில் உதயமாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து, விவாகம் செய்யத் திட்டமிடும் தம்பதிகளுக்கு உங்களுடைய ஆலோசனை என்னவாக இருக்கும்?**

39 போய் விவாகம் செய்துகொள்ளுங்கள். பார்த்தீர்களா? நீங்கள் இங்கே பூமியில் இன்னும் நூறு ஆண்டுகள் ஜீவிக்கப் போகிறீர்கள் என்பதைப் போன்றே தொடர்ந்து செல்லுங்கள். அப்படியே தொடர்ந்து செல்லுங்கள்; உங்கள் இருதயங்களை கிறிஸ்துவின் பேரில் வைத்திருங்கள், உங்கள் இருதயங்களை இந்த உலகத்தின் காரியங்களில் வைக்காமல், கிறிஸ்துவின் பேரில் வைத்திருங்கள். பார்த்தீர்களா? பிள்ளைகளை, தொடர்ந்து செல்லுங்கள்; திருமணம் செய்துகொள்ளுங்கள். உங்களுடைய திருமணங்களில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**281. அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், நான் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று வார்த்தை கூறுகிறது. இது—இது ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியைக் குறிக்கிறதா, அல்லது நான் வரத்தை... நிச்சயமான...நான் ஞானஸ்நானத்தோடு ஒரு திட்டவட்டமான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அது பொருட்படுத்துகிறதா? நான் ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று ஆர்வங்கொண்டிருக்கிறேன். நான் இந்தக் கேள்வியை உங்களிடம் நீண்ட காலமாகக் கேட்க விரும்பியதால், இந்த நீண்ட குறிப்பைத் தயவுசெய்து மன்னிக்கவும். உங்களுக்கு நன்றி.** அந்த நபர் தன்னுடைய பெயரைக் கையொப்பமிட்டுள்ளார். அவர்கள் வெளியூர் ஜனங்கள்.

40 இப்போது, அது ஒரு நல்ல கேள்வி. இப்பொழுது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஒரு நபர் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு திட்டவட்டமான அனுபவமாய் உள்ளது. இப்பொழுது இதை ஒரு நிமிடம் நான் தெளிவாக்க விரும்புகிறேன். பார்த்தீர்களா? இப்பொழுது, அநேக ஜனங்கள் இந்தக் கருத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்...அது திரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். மேலும் ஒருவேளை இங்கே சபையினருக்கும், கேட்டுக்கொண்டிருக்கும் சபையிடம் ஒரு கேள்வி எழலாம். இப்பொழுது, பரிசுத்த ஆவியின் ஆரம்ப அத்தாட்சி அந்நிய பாஷைகளில் பேசுவதை நான் விசுவாசிக்காததைக் குறித்து பேசுகிறேன் (நான்—நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை) அது தவறு என்று தேவனுடைய உதவியோடு என்னால் அதை வேதாகமத்தில் நிரூபிக்க முடியும் என்று நான் நம்புகிறேன் (புரிகிறதா?), ஏனென்றால் அந்நிய பாஷைகளில் பேசுதல் பரிசுத்த ஆவியின் வரமாயிருக்கிறது. எத்தனை பேருக்கு அது தெரியும்? தெய்வீக சுகமளித்தல் என்பது பரிசுத்த ஆவியின் ஒரு வரமாயிருக்கிறது, இங்கே பீட்டில்ஸ் இசைக்குழுவினர் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பார்த்தீர்களா?

41 சாத்தானால் அந்த வரங்களில் எதையாகிலும் பாவனை செய்ய முடியும். சூனியக்காரிகள், மந்திரவாதிகள் அந்நிய பாஷைகளில் பேசி அதற்கு அர்த்தம் உரைக்க முடியும். காட்டில் அநேக சமயங்களில் ஒரு மந்திரவாதி அந்நிய பாஷையில் பேசுவான், ஒரு மனித மண்டை ஓட்டின் இரத்தத்தைக் குடித்து, அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் உரைக்கிறான்.

42 அரிசோனாவில் அவர்கள் சோள நடனத்தின் பண்டைய நடனத்தை நடக்கும்போது, இந்தியர்கள் தங்களுடைய தானியத்திற்காக மழையை அனுப்பும்படி தேவனிடம் ஜெபிக்க முயற்ச்சித்துக் கொண்டிருக்கும்போது, அவர்கள் இந்தக் பெரிய

பாம்புகளை அவர்கள் சுற்றிக் கொள்கின்றனர். அவர்கள் அதைத் சோள நடனம் என்று அழைக்கிறார்கள். அவர்கள் சோளத்தின் குஞ்சத்தை எடுத்து, அதை அவர்களைச் சுற்றிலும் போட்டு, ஒரு சிறு மேகத்தை உண்டாக்கி, அவர்கள் நடனமாடுகிறார்கள். சூனியக்காரன் தன்னுடைய தலையில் கொம்புகளோடு, எருமையின் கொம்புகளோடு வெளியே வருகிறான். அவர்கள் இந்தப் பெரிய பாம்புகளைச் சுற்றிக்கொண்டு நடனமாடி, மந்திரவாதிகளும், குழாயில் புகைப்பவர்களும், அந்த இடத்தைச் சுற்றிலுமுள்ள காரியங்களும்…அந்த நேரத்தில் ஒரு வெள்ளை மனிதனை அவர்கள் சுற்றி வர அனுமதிக்கமாட்டார்கள், ஆனால் நான் அவர்களைத் தொலை தூர கண்ணாடியில் கவனித்து வந்திருக்கிறேன், மேலும் அவர்களுடைய நடன நிகழ்ச்சிகளுக்குச் சென்ற இந்திய நண்பர்களும் எனக்கு உண்டு; நிச்சயமாக, அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள். அவர்கள் இந்தப் பாம்புகளைப் பிடித்து இந்தச் சோள நடனமாடுகிறார்கள். மேலும் அந்த மந்திரவாதி வெளியே வருகிறான், கத்திகளால் தன்னை வெட்டிக்கொள்கிறான், மற்ற எல்லாவற்றையும் செய்கிறான், முடிவில் அவர்கள் ஆவிக்குள்ளாகி, அந்நிய பாஷைகளில் பேசி அதற்கு அர்த்தம் உரைக்கின்றனர்.

43 நான்…இன்னும் மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்குள் உங்களை அழைத்துச் செல்ல முடியும், அங்கே அசுத்த ஆவியினால் இயக்கப்படும் ஒருவன் மேசையின் மீது ஒரு பென்சிலை வைத்துவிட்டு, ஆழ்நிலை தியானத்திற்கும் மற்றும் பலவிதமான செயல்களுக்கும் உள்ளாகி, தன் கைகளை அசைப்பான்; அந்தப் பென்சிலை உயர்த்தி, அந்நிய பாஷைகளில் எழுதும்போது, மந்திரவாதி நின்று, அது என்ன கூறுகிறதென்று உங்களுக்குச் சொல்வான்.

44 இப்பொழுது, அது பரிசுத்த ஆவியின் அத்தாட்சி அல்ல. பார்த்தீர்களா? நீங்கள் அதன் பேரில் சார்ந்திருக்க முடியாது. நீங்கள் ஆவியின் கனியின் மேல் சார்ந்திருக்க முடியாது, ஏனென்றால் ஆவியின் முதல் கனி அன்பாயிருக்கிறது. எனக்குத் தெரிந்த எல்லோரைக் காட்டிலும் கிறிஸ்தவ விஞ்ஞானம் அதிக அன்பைப் பிரயோகிக்கின்றது, இயேசு கிறிஸ்து தெய்வீகத்தன்மை கொண்டவர் என்று கூட அவர்கள் மறுக்கின்றனர். பார்த்தீர்களா? எனக்குத் தெரிந்த ஒரேயொரு பரிசுத்த ஆவியின் அத்தாட்சி மாத்திரமே உண்டு, அதுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்தக் காலத்தின் வார்த்தையில் உள்ள அசலான விசுவாசமாயுள்ளது!

45 இப்பொழுது, அந்த யூதர்கள் வந்தார்கள்; சீஷர்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் அவர்கள் அதிகமான மார்க்கத்தை உடையவர்களாயிருந்தனர். சீஷர்களைக் காட்டிலும் அவர்கள் வேதத்தில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட மனிதர்களாய் இருந்தனர், ஏனென்றால் அவர்கள் மீனவர்களாயும், வரி வசூலிப்பவர்கள் போன்றவர்களாய் இருந்தனர். அவர்கள் செய்து கொண்டிருந்த

காரியங்களில் அவர்கள் உண்மையான விசுவாசத்தையும், அசலான விசுவாசத்தையும் உடையவர்களாயிருந்தனர். இப்பொழுது, இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள்; இதைத் தவறவிடாதீர்கள்! பார்த்தீர்களா? அது ஆவியின் கனிகளாய், தயவாயும், கனிவாயும், அந்த ஆசாரியர்களில் எவருமே இயேசு கிறிஸ்துவையே மிஞ்சிவிடக்கூடியவர்களாக இருந்தார்கள் என்று நான் யூகிக்கிறேன். அவர் கயிறுகளைப் பின்னியவராகக் ஆலயத்திற்குச் சென்று, அவர்களைக் கோபத்துடன் நோக்கிப் பார்த்து, அவர்களுடைய மேசைகளைக் கவிழ்த்து, அவர்களை அந்த இடத்திலிருந்து விரட்டியடித்தார். அது சரியா? அவர் கோபத்தோடு அவர்களை நோக்கிப் பார்த்ததாக வேதம் கூறியுள்ளது. வேதம் அதைக் கூறியுள்ளது. அது முற்றிலும் உண்மை.

46 எனவே பாருங்கள், அந்த ஆசாரியர்கள் கனிவான, சாந்தமான, புரிந்துகொள்ளும் மனிதர்களாய் இருந்தனர். அது ஆவியின் கனிகளுக்கு வரும்போது, இயேசு எப்போதும் காட்டாத அளவுக்கு அவர்களால் ஆவியின் கனிகளைக் காண்பிக்க முடிந்தது. அது வேத சாஸ்திரம் என்று வரும்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை... அவர் வெளிவந்த ஒரு பள்ளி இருப்பதை. “இந்த மனிதன் எப்பொழுது வந்தார்? அவர் எங்கிருந்து வந்தார்? அவர் வைத்திருக்கும் ஐக்கிய அட்டை என்ன? அவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்? அவர் எங்கிருந்து வருகிறார் என்று நமக்குத் தெரியாது. அவர் முறைதவறிப் பிறந்த ஒரு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட ஒருவர். ஏன், இன்னும் ஒரு சில நிமிடங்களில் நாம் அவரை இங்கே தாழ்த்தி, நியாயப்பிரமாணத்தின் மூலம் உங்களுக்குக் காண்பிக்கலாம்...” அந்தக் காரியம் வந்தபோது, அவர்கள் செய்ததையே செய்ய அவர்களுக்கு ஒரு உரிமை இருந்தது. ஏன்? ஏனென்றால் அவரே அந்த வேளைக்கான வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை என்பதை அவர்கள் கண்டு கொள்ளத் தவறினர். அவர்கள் அதை அடையாளம் கண்டு கொண்ட ஒரே வழி, இயேசு அவர்கள் இருதயங்களில் என்ன இருக்கிறது, அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைச் சொல்ல முடிவதன் மூலம் வார்த்தையை நிறைவேற்றியபோது...அவர் தேவனுடைய வார்த்தையின்படியான ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார். அவர் கூறினது நிறைவேறினது, ஒவ்வொரு வார்த்தையும், வார்த்தைக்கு வார்த்தை.

47 அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாய், ஊழியக்காரனாயிருந்தார், தீர்க்கதரிசியாகிய தேவனாய் இருந்தார். இல்லை...அதற்கு முன்னர் அது தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தது, இது தேவனே தீர்க்கதரிசி, தேவனுடைய தீர்க்கதரிசி அல்ல. அவர்கள் மல்கியா, எரேமியா, ஏசாயா, எலியா மற்றும் அவ்வாறானவர்கள், ஆனால் இது தேவனே தீர்க்கதரிசி, தேவனுடைய தீர்க்கதரிசி அல்ல. இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

அவருடைய ஜீவியத்தை பாகங்களில் சித்தரித்த எல்லா

தீர்க்கதரிசிகளும் தங்களுடைய பங்கை வகித்தனர், ஆனால் எல்லா தீர்க்கதரிசிகளின் பரிபூரணமும் அவருக்குள் இருந்தது. தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய வார்த்தை அவர்களிடம் வந்தது, தீர்க்கதரிசிகள், ஆனால் இது வார்த்தையும் தீர்க்கதரிசியும், ஒரே நபராயிருந்தது. பார்த்தீர்களா?

48 இப்பொழுது, இப்பொழுது, ஒரு மனிதன் கிறிஸ்துவை அவர் இருக்கிறவிதமாகவே ஏற்றுக்கொள்ளும்போது, அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது...புரிகிறதா? இப்பொழுது, அவர்களில் சிலர், "சரி, நான் ஒரு லூத்தரன்" என்கிறார்கள். பாருங்கள், அதற்கு எதிராக ஒன்றுமில்லை, ஆனால் கழுகுகள் அதன் பேரில் போஷிப்பதில்லை. பார்த்தீர்களா? அதுவரைக்கும் இருந்தது; அதுவே அந்த நாளின் புதிய ஆகாரமாயிருந்தது.

"நான் ஒரு வெஸ்லியன்." அதெல்லாம் சரிதான், ஆனால் நீங்கள் கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். பார்த்தீர்களா?

இப்பொழுது, அந்த ஜனங்கள், "ஏன், ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன்" என்றனர்.

அந்தத் தீர்க்கதரிசி, "தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்" என்றார். பார்த்தீர்களா?

"நாங்கள் *இதைச்* சேர்ந்தவர்கள். நாங்கள் *அதைச்* சேர்ந்தவர்கள்" என்றனர்.

அது ஒன்றுமற்றது...அவன், "நீங்கள் சர்ப்பங்களின் சந்ததி, கோபாக்கினைக்கு தப்பித்துக் கொள்ள உங்களை எச்சரித்தது யார்? 'ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பனாயிருக்கிறான்,' என்று கூறத் துவங்காதீர்கள், தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்" என்றான். பார்த்தீர்களா?

49 எனவே நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஒரு வேத சாஸ்திரி என்பதற்கு அதனோடு எந்தச் சம்மந்தமும் இல்லை. சாந்தமாகவும், கனிவாகவும் இருப்பதற்கு அதனோடு எந்தச் சம்மந்தமும் இல்லை. அவரை வித்தியாசப்படுத்தியது எது? அவர் மாம்சமான வார்த்தையாயிருந்தார், மோசேயின் நாளுக்கான வார்த்தை அல்ல, மோசே அந்த நாளின் வார்த்தை; நோவாவின் நாட்களுக்கான வார்த்தை அல்ல, நோவா அந்த நாளுக்கான வார்த்தையாயிருந்தான்; அந்த நாளல்ல...எலியாவின் நாளுக்கான வார்த்தை, எலியா அந்த நாளுக்கான வார்த்தையாயிருந்தான்; ஆனால் அவர் நிகழ்கால வார்த்தையாயிருந்தார், அவர்கள் கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

50 அதே காரியம் மீண்டும் நிகழ்கிறது! அதுவே பரிசுத்த ஆவியின் அத்தாட்சி, தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தும்போது, நீங்கள் அதைக் கண்டு, **கர்த்தர் உரைக்கிறதாவது**, அதை

ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்பதோ, நீங்கள் என்னவாயிருந்தீர்கள் என்பதோ அல்லது அதைக் குறித்து ஒன்றுமேயல்ல, இப்பொழுது தேவன் உங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பதே அது. அதற்கான அத்தாட்சி உள்ளது.

51 இயேசு கூறினார்...அவர் பரிசுத்த ஆவியின் அத்தாட்சியை, யோவான் 14-ல் நமக்கு அளிக்கிறார். அவர், “நான் உங்களுக்கு அநேக காரியங்களைக் கூற வேண்டியதாயிருக்கிறது. அதைக் கூற எனக்கு நேரமில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவர் உங்களுக்குச் சொல்லுவார், நான் உங்களுக்குக் கூறின காரியங்களை உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருவார், வரப்போகிற காரியங்களையும் உங்களுக்குக் காண்பிப்பார்” என்றார். உங்களுக்குப் புரியவில்லையா? அதற்கு அத்தாட்சி உள்ளது. அது முன்கூட்டியே சொல்லுவதும்... அது எழுதப்பட்ட வார்த்தையின் தெய்வீக வியாக்கியானத்தை வெளிப்படுத்துவதாகவும், கொண்டிருப்பதாகவும். இப்பொழுது, அது ஒரு தீர்க்கதரிசியின் அத்தாட்சியல்லவா?

52 வேதத்தில் ஒரு ஞானதிருஷ்டிக்காரன் என்றால், அது பரிபூரணமாக, சரியாக, முன்னுரைக்கக் கூடிய ஒரு மனிதன், யாரோ ஒருவர் அவர்மீது கைகளை வைப்பது அல்ல, அது ஒரு வரமாகும். ஒரு தீர்க்கதரிசி முன்குறிக்கப்பட்டு ஒரு தீர்க்கதரிசியாகப் பிறக்கிறான். பார்த்தீர்களா? வாழ்நாள் முழுவதும் அது ஒரு தீர்க்கதரிசியாயிருந்தது, அதுவே ஒரு உத்தியோகம். அங்குதான் ஜனங்கள்...

53 இங்கே அநேக கேள்விகள் உள்ளன: “சரி, மணவாட்டி...?” “*இது*...?” “சபை மற்றும்...” பாருங்கள்? அவைகள் என்னவென்று உங்களால்—உங்களால் பிரிக்க முடியாது. மணவாட்டி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவள். சபையானது கடந்து செல்கிறது... அதுதான் அது, “விருப்பமுள்ளவன் வரக்கடவன்” என்று கூறுகிறது. ஆனால் மணவாட்டியோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவள்.

54 தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஐந்து உத்தியோகங்கள் உள்ளன. “ஏனென்றால் தேவன் சபையில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்களை ஏற்படுத்தினார்.” தேவன் அதைச் செய்தார். மனிதனுக்கு உதவிக்காரர்கள், இன்னும் மற்ற ஒவ்வொரு காரியமும் உண்டு, ஆனால் நீங்கள் பாருங்கள், ஆனால் தேவன் சபையைச் சீர் பொருந்தும் பொருட்டு சபையில் ஏற்படுத்தினார்; அதைப் பிரிக்க முடியாது.

55 இப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் வரும்போது, இந்த வார்த்தை சரியாயிருக்கிறது என்பதற்கு (புரிகிறதா?) அது உங்களுக்கு ஒரு சாட்சியாயிருக்கிறது, இன்றைக்கான வார்த்தை, லூத்தருக்கான வார்த்தை அல்ல, வார்த்தை, மோசேக்கான வார்த்தை

அல்ல. அது சத்தியம் என்று நாங்கள் சாட்சி பகருகிறோம், ஆனால் அது வேறொரு நாளாயுள்ளது.

56 இப்பொழுது, இயேசு வந்து, "இப்பொழுது, மோசே வந்து உங்கள் எல்லோரையும் எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தது போல, நான் உங்களை வேறு எங்காவது அழைத்துச் செல்ல வந்துள்ளேன்" என்று கூற முடியுமா? அவர், "நாம் சென்று ஒரு பேழையைக் கட்டுவோம். நான்—நான் தேவனாகிய கர்த்தர், நான்—நான் இப்பொழுது உலகத்தை மிதக்கவிடப் போகிறேன். நான் உலகத்தை மூழ்கடித்துவிடப் போகிறேன்" என்றால் என்னவாகும்? ஏன், அவர் வெளியே…பாருங்கள், அவர் அந்த விதமாக வருவார் என்று வேதம் ஒருபோதும் கூறவில்லை. பார்த்தீர்களா? அவர் மேசியாவாக இருந்திருக்க மாட்டார். அவர் எவ்வளவுதான் பேழையைக் கட்டியிருந்தாலும், அல்லது அவர் என்ன செய்திருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. அவர் இன்னமும்…அவர் மேசியாவிற்கு தகுதி பெற்றிருக்கமாட்டார். அல்லேலூயா! அங்குதான் காரியம்! அது ஒரு தகுதி! ஆம், ஐயா!

57 முதலாம் கொரிந்தியர் 13 இதைக் கூறுகிறது: "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்." எனவே இந்தச் சிறு காரியங்கள் யாவும் ஒரு குழந்தையைப் போல மேலும் கீழும் குதித்து, அந்நிய பாஷைகளில் பேச முயற்சித்தல், இந்த மற்ற எல்லாக் காரியங்கள் யாவும், நிறைவானது…இன்றைக்கு நாம் தேவனுடைய உதவியினால் வார்த்தையின் பரிபூரண வியாக்கியானத்தை தெய்வீக ரூபகாரப்படுத்துதலைப் பெற்றுள்ளோம்! அப்படியானால் குறைவானது ஒழிந்துபோம். "நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்." ஆமென்! நான் பிரசங்கத்திற்குச் செல்கிறேன், அதனால் இந்தக் காரியங்களுக்கு வர முடிவதில்லை.

**282. சகோதரன் பிரான்ஹாம்…**(நான் அதை முடித்துவிட்டேனா? பரிசுத்த…அபிஷேகத்தைக் குறித்து நான் பேசினேனா, ஆம், அது அதைக் குறித்ததாயிருந்தது, அது அவ்வாறில்லையா? சரி. என்னை மன்னிக்கவும், நான் சரியாகப் பதிலளிக்கவில்லையென்றால், என்னை மன்னிக்கவும். நான்…இவை மிகவும் அற்புதமான கேள்விகள். சகோதரனே, நீங்கள் ஒரு கேள்வியின் பேரில் ஒரு இரவு முழுவதும் தரித்திருந்து, அதன்பின்னர் அதைத் தொடக்கூட முடியாது.) **நான் உங்களைத் தேவனுடைய ஊழியக்காரன் என்ற முறையில் பாராட்டுகிறேன், விசுவாசி…நான் சத்தியத்தின் செய்தியை விசுவாசிக்கிறேன். என்னுடைய மனைவியோ…இந்தச் செய்தியைக் குறித்து எந்தக் காரியத்தைக் கூறினாலும்…நான் எந்தக் காரியத்தைக் கூறினாலும் எந்த ஒலிநாடாவையும் கேட்கமாட்டாள். நான் என்னுடைய**

**வேலையிலும் கூட மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். என்னுடைய மனைவியும் கூட விசுவாசித்து என்னுடைய பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சகோதரன் பிரான்ஹாம், நான் தேவனுடைய நண்பனாக இருக்க விரும்புகிறேன்...நான் என்னுடைய ஜீவியத்திற்கான தேவனுடைய சித்தத்தில் கண்டறியப்பட விரும்புகிறேன். நான் அவருடைய ஊழியக்காரனாக இருக்க விரும்புகிறேன்.** (அந்த நபர் **"முடிந்துவிட்டது"** என்று கையொப்பமிடுகிறார். ஒரு நிமிடம் பொறுங்கள்.) **நான் சிறுவனாயிருந்தபோது, நான் ஒரு பிரசங்கியாக வேண்டும் என்று ஒவ்வொருவரிடமும் கூறினேன். நான் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நான் அறியேன். நான் கர்த்தருக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். கர்த்தருக்குள் உங்களுடையவன்.**

58 இப்பொழுது ஒரு நல்ல கேள்வி. அந்த மனிதன் உத்தமமாக இருக்கிறார். அவருடைய மனைவி, அவருடைய ஒரு பாகமாக இருக்கிற அவருடைய துணை...நான் இங்கே அதனோடு ஒன்றை சேர்க்கலாமா? என் சகோதரர்களே, நான் இதைக் கர்த்தருடைய நாமத்தில் கூறுகிறேன். இந்நாட்களில் ஒன்றில், கர்த்தருக்கு சித்தமானால், நான் தொடர்ந்து சென்று *விவாகமும் விவாகரத்தும்* என்ற அந்த ஒலிநாடாவை பதிவு செய்து (புரிகிறதா?) அதை இங்கே கூடாரத்திற்கு கொண்டு வருவேன் என்று நினைக்கிறேன். அது பிரித்தால், அது பிரிந்து போகட்டும். ஆனால் அது கர்த்தருடைய வார்த்தை என்று நாம் நிரூபிக்கப் போகிறோம்.

59 என் சகோதரர்களே, பாருங்கள். இதைக் கவனியுங்கள். இந்தப் பூமியில் அநேக சமயங்களில் நீங்கள் தவறான துணையை பெற்றுக் கொள்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? சில அழகான ஜோடி பழுப்பு, அல்லது நீலம் அல்லது சாம்பல் நிற கண்கள் நீங்கள்—அதாவது நீங்கள் செவிகொடுத்து கேட்கக் கூடாத ஒரு நிலைக்கு உங்களைக் கவர்ச்சிக்கிறது. அநேக மனிதர் அதை உணருகின்றனர்.

60 விவாகம் செய்துகொள்ளும் ஒரு மனிதன் முதலில் அதை ஜெபத்தோடு அணுக வேண்டும். வெளிப்புறத்தில் அழகாக இருப்பதன் மூலம் நீங்கள் ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்ளக் கூடாது, ஆனால் உட்புறத்திலோ அழகானவள், உங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு தாயாக இருக்கப் போகிறவள்.

61 பிரசங்க பீடத்தில் ஒரு ஊழியக்காரர் இதைக் கூறுவது மிகவும் மோசமாகத் தொனிக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் மேற்கில் மாடுகளை வாங்குகிறவர்களோடு செல்வது வழக்கம். நாங்கள் இனப்பெருக்கக் கால்நடைகளை வாங்குவோம், அவர்கள் ஒரு மந்தையைத் தொடங்க விரும்புவார்கள். நான் ஏலத்தில் எடுத்தவர்களையும், அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களையும், அந்த வாங்குபவர்களையும் கவனித்தபோது...

அங்கே நான் நிறைய கற்றுக்கொண்டேன். நான் வழக்கமாக ஒரு வயோதிக நபருடன் செல்வதுண்டு, இங்கே என்னோடு சபைக்கு அவர் வருவதுண்டு, நான் அவரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தினேன், துவக்கத்திலேயே ஒரு முழுமையான நாத்திகனாயிருந்த, திரு. ஜீவரெஸ். கொலராடோவிலிருந்து ஒரு மேய்ப்பனாயிருந்த அவரை உங்களில் அநேகருக்கு நினைவிருக்கும். நாங்கள் செல்ல, அவர்கள் ஒரு பசு மாடு... வருவார்கள்.

நான் ஒரு சிறிய இனவிருத்திக் கன்றுக்குட்டி பதினோராயிரம் டாலர்களுக்கு விற்கப்படுவதைக் கண்டேன்; அவள் இன்னும் இனப்பெருக்கம் செய்யப்படவில்லை. மேலும் நான் கூறினேன்... அப்பொழுது ஜெஃப், "என்னிடம் பணம் இருந்தால், நான் அதை அந்தக் கன்றுக்குட்டிக்கு முதலீடு செய்வேன்" என்றார்.

மேலும் நான், "இப்பொழுது, அவர் ஒரு பண்ணையாளர்; அவர் தன்னுடைய வேலையைப் புரிந்து கொள்கிறார்" என்று நினைத்தேன். நான், "ஜெஃப், நீங்கள் ஏன்...அவளுக்கு என்ன தகுதி இருக்கிறது? அவள் ஒரு ஹெர்ஃபோர்ட். சற்று முன்னர் அந்தக் கன்றுக்குட்டி முந்நூறு டாலர்களுக்கு விற்கப்பட்டது, அது எனக்கு, ஒரு பெரிய கன்றுக்குட்டியைப் போன்று காணப்பட்டது" என்றேன்.

62 அவர், "பில்லி, பார், கால்நடைகளை வாங்குவதில் நீ புரிந்து கொள்ளாத ஒரு காரியம் உண்டு" என்றார். மேலும், "நீங்கள் உங்களுடைய பாதையில் பிரசங்கத்தை பற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்றார். ஆனால், "நீர் கால்நடைகளைப் புரிந்து கொள்ளுகிறதில்லை" என்றார். அவர், "இப்பொழுது, அங்கே அந்தக் கன்றுக்குட்டியைப் பாருங்கள்" என்றார். நாங்கள் அங்கு நடந்து சென்றோம். "அவளுடைய கண்களை வெறித்துப் பார்ப்பதைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஆம்" என்றேன்.

மேலும், "அவளுடைய பிள்ளைகளும், அவளுடைய பேரப்பிள்ளைகளும், அவளுடைய பேரப்பிள்ளைகளும், கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் இன்னமும் அந்த மூர்க்கத்தனமான பார்வையை உடையவர்களாயிருப்பார்கள்" என்றார். மேலும், "அவர்கள் தங்களையே ஏழ்மையாக்கிக் கொள்வார்கள். அவைகள் தங்களுடைய கன்றுக்குட்டிகளுக்கு தாயாகவே இருக்காது" என்றார். மேலும், "நீர் அவர்களை ஒருபோதும் கொழுக்க வைக்க முடியாது; அவைகளை ஒருபோதும் மாட்டிறைச்சிக்கு உபயோகிக்க முடியாது" என்றார். அவர், "விற்கப்பட்ட இந்தச் சிறிய கன்றைப் பாருங்கள். அவள் எவ்வளவு சாந்தமாகக் காணப்படுகிறாள் என்று பாருங்கள். அவளுடைய முகத்தில் அந்த அமைதியான தோற்றத்தையும், அந்தக் கனிவான தோற்றத்தையும், அவளுடைய கண்களை முறைத்துப் பார்க்காமலிருந்ததையும் பாருங்கள்" என்றார். "அது

தன்னுடைய கன்றுக்கு ஒரு உண்மையான பாலூட்டியாக இருக்கும்; அவளுடைய கன்றின் கன்றின் கன்றுக்குட்டி அந்தவிதமாகவே தொடர்ந்து இருக்கும்" என்றார். மேலும், "அவைகள் யாவும் தாய்மார்களாயிருக்கும், அவர்களால் அந்தக் கன்றுக்குட்டிக்கு சரியான இனவிருத்தி செய்யும் காளையைப் பெற்றுக் கொடுக்க முடிந்தால், (புரிகிறதா?), அது அவர்களுடைய பிள்ளைகளை உருவாக்கும். ஆனால் ஒரு மனிதன் கால்நடைகளை விலைக்கு வாங்க முயற்ச்சித்தால், அந்த முறைத்துப் பார்க்கும் பார்வை எப்பொழுதுமே ஒரு ஏழை கால்நடை மந்தையையே உருவாக்கும்" என்று கூறினார்.

நான், "ஆம், ஐயா! உங்களுக்கு நன்றி" என்றேன்.

63 அதேக் காரியம் பெண்களுக்கும் பொருந்தும். அவர்களில் முகத்தில் வண்ணம் பூசி, வெறித்த கண்களுடன் உள்ள ஒருத்தியை எடுத்துக்கொள்ளுங்கள், ஏதோ ஒரு மிருகம் போலத் தோற்றமளிக்கும் அவள், ஒரு மனிதப் பிறவியிலிருந்து தன்னை உருமாற்றிக்கொள்ள முயற்சிக்கிறாள், அவளால் ஒருபோதும் எதையும் சாதிக்க முடியாது. அவள் எல்லா நேரத்திலும் ஓடிக்கொண்டேயிருப்பாள். கிறிஸ்தவ மார்க்கம் வெளிப்புறத்தில் அழகல்ல, அது உட்புறத்தில் உள்ளது: சமாதானம், அமைதி, ஒரு சமாதானமான, அமைதியான ஆவியில் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர், அது கர்த்தருக்கு முன்பாக ஒரு மகத்தான கிரயமாயுள்ளது. அதைத்தான் நாம் ஸ்திரீகளிடத்திலும், புருஷனிலும், அது யாராயிருந்தாலும் பார்க்க விரும்புகிறோம். இப்பொழுது...

### 283. சகோதரன் பிரான்ஹாம்: கேள்விகள்: ஒரு கிறிஸ்தவ பெண்மணி கழுத்தணிகள் அல்லது முத்து போன்ற எளிமையான நகைகளை அணிய வேண்டுமா?

64 சரி, சகோதரியே, இது உங்களுக்கு நிறைய அர்த்தப்படுத்துகிறது என்பதை நான் அறிவேன், நான் உங்களுக்கு உண்மையைக் கூறுவேன் என்று நீங்கள் உங்களுடைய நம்பிக்கையை வைப்பது எனக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இப்பொழுது நினைவிருக்கட்டும், வேதம், "நீங்கள் விலையேறப்பெற்ற இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும், எல்லாவிதமான ஆபரணங்களினாலும் அலங்கரித்துக் கொள்ளாதிருங்கள், ஆனால் அது ஒரு சமாதானத்தின் அலங்காரமாக இருக்கட்டும், அமைதியும், சாந்தமுமான ஆவியுமான (நான் அதை மேற்கோள் காட்டினேன்) அது கர்த்தருக்கு முன்பாக ஒரு பெரிய கிரயமாயுள்ளது" என்று கூறியுள்ளது.

65 இப்பொழுது, நான் அதைக் கொண்டு பொருட்படுத்திக் கூறவில்லை, சகோதரியே, உங்களுக்கு ஒரு ஊசி இருந்தால்... இப்பொழுது, இது நான், கர்த்தர் அல்ல. நீங்கள் அணிந்து கொள்ள

விரும்பிய ஒரு ஊசியை நீங்கள் வைத்திருந்தால், அல்லது உங்களுடைய கணவர் உங்களுக்கு ஒரு சிறிய கழுத்தணியைக் கொடுத்தால், அல்லது ஒருக்கால் உங்களுடைய…நீங்கள் அணிந்துள்ள அதைப் போன்ற ஒன்றை, இப்பொழுது, எனக்கு, அது மோசமானதாக நான் கருதவில்லை. இப்பொழுது, அது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இப்போது நினைவில் கொள்ளுங்கள், நான் என் நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறுகிறேன்; அது என்னுடைய கருத்து. ஆனால் அது அதற்கான அணுகுமுறை என்று நான் நினைக்கிறேன்; அந்தவிதமாகவே நீங்கள் அதைச் செய்கிறீர்கள். பார்த்தீர்களா? அது அதற்குப் பின்னால் உள்ள நோக்கம். அது உங்களைப் பற்றிக் கொள்வதை நீங்கள் காணும்போது, அந்தக் காரியத்தை அப்படியே விட்டுவிடுங்கள். ஆனால் நீங்கள் உங்களுடைய கலியாண மோதிரத்தை அணிந்திருந்தால்…

66 இப்பொழுது, நசரேய ஜனங்களாகிய உங்களை நான் அறிவேன், வழக்கமாக ஒரு கலியாண மோதிரத்தை அணிந்துள்ள ஒரு ஸ்திரீக்கு கூட நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டீர்கள். பார்த்தீர்களா? அது அவசியம் என்று நான்—நான் நம்பவில்லை. வேதாகமத்தில் அவர்கள் கலியாண மோதிரங்களை அணிந்திருந்தனர், அது ஒரு தலைமாலை என்று மாத்திரமே அவர்கள் அழைத்தனர், அதை அவர்கள் தலையைச் சுற்றி, அதில் ஒன்பது வெள்ளிக்காசுகள் அணிந்திருந்தனர். ஆனால் நான்…அவர்கள் விவாகமானவர்கள் என்பதைக் காண்பிக்கும்படியாக. இப்பொழுது, அது சரியென்று நான் நினைக்கிறேன்.

67 ஸ்திரீகள் தங்களை கண்ணியமாகவும், சுத்தமாகவும், பெண்மணியைப் போலவும் காட்டிக்கொள்ள விரும்பினால், ஏன், அதில் எனக்கு ஒரு காரியமும் இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆனால் நீங்கள் அதை ஒரு சிறு பெருமையாகக் கருதிக் கொள்ளும்போது, அப்பொழுது நீங்கள் தவறாக இருக்கிறீர்கள். அது உங்களுடைய மனப்பான்மையாகும்.

68 பெண்களே, சமீப காலம்வரை இங்கு “அவதூறான பாவாடைகள்” என்று அழைக்கப்பட்டவை இருந்தது நினைவிருக்கிறதா? அவைகள் மீண்டும் வெளியே வந்து கொண்டிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன், அல்லது அவைகள் இன்னும் மோசமாகிவிட்டன. ஆம்…அவைகள் “அவதூறுகள்” என்பதற்குப் பதிலாக “அவதூறானவைகளாக” இருக்கின்றன. ஆனால், சமீபத்தில் கூட அவர்களிடம் ஒரு நாடகம் இருந்தது…அவர்களிடம் பெண்கள், இளம் பெண்கள் இருந்தனர்…நிச்சயமாகவே, வயோதிகர்களும் கூட அதைச் செய்வார்கள், ஏனென்றால் அவர்கள் யாவரும் வாலிபமாக இருக்க விரும்புகின்றனர். சகோதரிகளாகிய உங்களை நான் பொருட்படுத்திக் கூறவில்லை, நான் உலகப் பெண்களைக் குறித்துக் கூறுகிறேன். அவர்கள் தங்களுடைய—தங்களுடைய பாவாடையை

ஒவ்வொரு முறையும் ஏறக்குறைய ஒன்றரை அடி உயரத்திற்கு வெட்டிக் கொள்வார்கள், அப்போது, உள்ளுக்குள் ஏதேனும் ஒரு ஆடை அணிவது அழகாகத் தெரியும். அவர்கள் ஒரு அடி எடுத்து வைக்கும்போது, அது இந்தச் சரிகையோடுள்ள உள்ளாடையை காண்பிக்கும், மற்றும் மடிப்புகள், அல்லது அதில் என்ன இருந்ததோ அது. அது, உங்களுக்குத் தெரியுமல்லவா…

69 ஒரு—ஒரு பெண் என்னிடம் வந்தாள், அவள் ஒரு டன்கார்ட் பெண்ணாயிருந்தாள், அவள் பரிசுத்த ஆவியைப் அப்போதுதான் பெற்றிருந்தாள். அவள் அசெம்பளீஸ் ஆஃப் காட் என்ற அமைப்பைச் சேர்ந்தவள், அது இந்தியானாவிலுள்ள ஃபோர்ட் வெய்ன் என்ற இடத்தில் இருந்தது, அங்கே எனக்குத் திருமணம் நடந்தது. அவள் ஒரு அருமையான சிறு பெண்மணி, என்னிடம் வந்து, "சகோதரன் பிரான்ஹாம், நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்று கூறினாள்.

நான், "சரி, சகோதரியே, அது என்ன?" என்று கேட்டேன்.

அவள், "ஒரு கிறிஸ்தவப் பெண் ஒரு அவதூறான பாவாடையை அணிவது தவறு என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

நான், "சகோதரியே, இந்த ஒரு காரியத்தை என்னால்—என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு 'அவதூறான பாவாடை' என்றால் என்ன?" என்று கேட்டேன். அது என்னவென்று அவள் என்னிடம் கூறினாள். நான்…

அவள், "அது கீழ்பாவாடையைக் காண்பிக்கிறது" என்றாள்.

70 மேலும் நான், "ஒரு ஸ்திரீ தன்னுடைய ஆடைகளை ஒரு மனிதனுக்குக் காண்பிக்க அவளை விரும்பச் செய்யும்படியான அவளுக்குள் என்ன—என்ன உள்ளது? ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கு அப்படியொரு காரியத்தைச் செய்ய என்ன…என்ன—என்ன உரிமை இருக்கிறது? ஒரு கிறிஸ்தவர் உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?" என்று கேட்டேன்.

71 இப்பொழுது, பாருங்கள், ஒரு மனிதன், அது ஒரு சரீரத்திற்கு வரும்போது, அவனுக்கு அதிக காரியமில்லை. அவன், அரை நிர்வாணமாகச் சென்றால், அதில்—அதில் எந்த அவதூறும் இருக்காது. மனிதனுக்காகப் ஆதரவளித்துக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள்…உங்களுக்குத் தெரியுமல்லவா—சட்டையைக் கழற்றிவிட்டு, கால்சட்டை அல்லது அது போன்ற வேறு உடையில் இருக்கும் ஒரு ஆணைக் கண்டு எந்த மாதிரியான பெண்தான் ஈர்க்கப்படுவாள்? அந்தப் பெரிய, பழைய, திடகாத்திரமாகத் தோற்றமளிக்கும் காரியம், அது அலங்கோலமாகவும் நோய்வாய்ப்பட்டதாகவும் இருக்கிறது, நான்…பயங்கரம். இந்த மனிதர்களைப் பாருங்கள்…பாருங்கள், அப்படிப்பட்ட ஒரு காரியத்தைப் பார்ப்பது ஒரு ஸ்திரீக்கு வாந்தியெடுக்கச் செய்யும் என்று நான் நினைக்கிறேன். அவள்…ஆனால் இப்பொழுது, நீங்கள்

ஒரு பெண்ணை எடுத்து, அந்தவிதமாக அவளை வைத்தால், அது ஒரு வித்தியாசமான ஆலயம். உங்களுக்குப் புரிகிறதா? சரி.

72 ஆனால் நான் ஒரு கழுத்தணியைப் பொறுத்தமட்டில், அல்லது...இப்பொழுது, நீங்கள் இங்கே கீழே உள்ள பத்து சென்ட் கடையினூடாக ஒரு காந்தத்தை உங்கள்மீது ஏற்றிச் சென்றது போன்றே உங்களை நீங்களே ஏற்றிக் கொண்டு, நான்—நான் நினைக்கிறேன்...அதை மன்னிக்கவும், நான் அதை அந்தவிதமாகக் கூற வேண்டும் என்று கருதவில்லை, ஆனால் அது—அது தவறானது.

73 எனக்கு எதிராக முதன் முறையாக ஏதாவது காரியம் என்னைத் திருப்பின...அமெரிக்காவைக் குறித்து என்னை வெட்கப்படச் செய்திருந்தால்...நான் ஒரு நாள் சுவிட்சர்லாந்தில் இருந்தேன், நானும் சகோதரர் ஆர்கன்பிரைட்டும் லோசானுக்கு வெகு தொலைவில் கீழே ஒரு நல்ல இடத்தில், அங்கே நமக்கு ஒரு பெரிய, தரமான இறைச்சித் துண்டு கிடைக்கும், அது சுற்றளவில் *இவ்வளவு* பெரியதாகவும், சுமார் முக்கால் பவுண்டு எடை கொண்டதாகவும் இருக்கும் என்பதை கண்டுபிடித்தோம், அமெரிக்க பணத்தில் கிட்டத்தட்ட முப்பது செண்டுகள் என்று, நான் நினைக்கிறேன். ஓ, நாம் ராஜாக்களைப் போல வாழ்ந்து கொண்டிருந்தோம்! ஒவ்வொரு நாளும் நாங்கள் அங்குச் செல்வோம். அங்கே அவர்கள் எல்லோரும் திராட்சரசம் குடிக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்; அவர்களுடைய தண்ணீர் பயனற்றதாக இருக்கிறது. நான் அந்த மதுவை அருந்தமாட்டேன், அதனால் மருந்துக் கடையிலிருந்து காய்ச்சி வடித்த நீர் இருந்த...ஒரு சிறிய குடுவையை வாங்கிக்கொண்டேன். நான் சென்ற இடமெல்லாம் அந்தக் கூஜாவை எடுத்துச் சென்றேன். ஒவ்வொருவரும், “அந்தப் பையன் தன்னுடைய சொந்த தயாரிப்புப் பானத்தை வைத்திருக்கிறான்” என்று நினைத்தார்கள் என்று நான் யூகிக்கிறேன். அதனால் அது என் கையில் இருந்தது. நாங்கள் அந்த இடத்திற்குச் சென்றோம், அங்கு எல்லோரும் இந்த இறைச்சித் துண்டுகளை விற்றுக்கொண்டிருந்தார்கள், ஒரு நாள் *குமாரி அமெரிக்கா* என்ற பெண்மணி காரோட்டி வந்தாள். சுமார் 28 மாதிரிச் செவி காரில், மடியில் ஒரு பூடில் நாய் அமர்ந்திருந்தது, அதை உள்ளே கொண்டு வந்தார்கள், அவளுக்குப் போதும் என்றாகிவிட்டது...அந்த இரண்டு பெண்களிடமும் ஏராளமான பத்து சென்ட் கடையில் வாங்கிய மிகப் பெரிய, நீளமான நகைகளும், தொங்கிய காதணிகளும், வர்ணமும் ஏராளமாக இருந்தன; அவர்கள் இருவருக்கும் என் வயதிற்குச் சமமாக ஐம்பது வயது ஆகியிருந்தது. அவர்களுக்குப் பதினைந்து வயது இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனால் அவர்கள் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் வாழ்க்கை எனும் சாலையில், தாங்கள் முன்பு எப்படி இருந்தார்கள் என்பதைப் பின்நோக்கிப் பார்த்து, பின்புறக் கண்ணாடி வழியாக ஓட்ட முயற்சிக்கிறார்கள்.

74 இப்பொழுது, கிறிஸ்தவர்கள் அதைச் செய்வதில்லை.

ஒரு கிறிஸ்தவன் அவன் தான் முன்பு இருந்ததைப் போன்று இருக்க முயலுவதில்லை; அவன் எங்கே இருந்திருக்கிறான் என்பதை அவன் பார்த்துக் கொண்டிருக்கவில்லை, அவன் எங்கே போய்க் கொண்டிருக்கிறான் என்பதை அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். பாருங்கள், பார்த்தீர்களா? அப்பொழுது நீங்கள் என்னவாயிருந்தீர்கள் என்பதற்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டாம்; நீங்கள் அதை ஜீவித்துவிட்டீர்கள். நீங்கள் அதற்கு ஒருபோதும் திரும்பவேமாட்டீர்கள்; அது கடந்த காலத்தில் உள்ளது. பின்பக்கக் கண்ணாடியினூடாகப் பார்த்து வாழ்க்கையின் பாதையை ஓட்டிச் செல்லும் எந்த மனிதனும் விபத்துக்குள்ளாவான்; இதேபோல நீங்களும் இந்தக் கிறிஸ்தவப் பயணத்தில் இருப்பீர்கள். நீங்கள் என்னவாயிருந்தீர்கள் என்பதை பின்னோக்கிப் பார்க்காமல், நீங்கள் என்னவாயிருக்கப் போகிறீர்கள் என்பதைப் பாருங்கள். பவுல், "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று கூறினான்.

75 இப்பொழுது, ஆனால் அது உங்களை வெட்கப்படச் செய்தது. அவர்கள் இந்தச் சிறிய, நாற்றமெடுக்கும் நாயை அங்கே கொண்டு வந்து மேசையின் மேல் வைத்தார்கள்! இப்பொழுது, அது எவரையும் வாந்தி எடுக்கச் செய்யும்! அங்கே அந்த நாயுடன் விளையாடி, தங்கள் கரங்களினால் அதை அங்கே அமர்த்தி, பிறகு அதே கைகளால் சாப்பிடப் போகிறார்கள்! அப்போது அந்த உணவு பரிமாறுபவர் அங்கே வந்து, ஏதோ உளறினார். டாக்டர் குகன்புல் என்னோடு இருந்தார்; அவர் சிரிக்கத் தொடங்கி, தன்னுடைய தலையைத் திருப்பிக் கொண்டார்.

நான், "என்ன—என்ன கூறினான்?" என்று கேட்டேன்.

மேலும், "உணவு பரிமாறுபவர், 'அதை அகற்றி விடுங்கள்!' என்று கூறினார்" என்றார்.

அவர்கள், "இல்லை, அவள் ஒரு அமெரிக்கர்; அவளை விட்டு விடு" என்றனர். வேறு வார்த்தைகளில் கூறினால், "அவளுக்கு இதைவிட நன்றாகத் தெரியாது." பார்த்தீர்களா?

76 நான் ரோமாபுரியில் உள்ள சான்ட் ஆஞ்சலோவிடம் (இப்பொழுது இதை நினைத்துப் பாருங்கள்.) இத்தாலியில் உள்ள ரோமாபுரியிலுள்ள வாடிகனுக்கு நான் வந்தபோது, சாண்ட்ஏஞ்சலோவில் அவர்களிடம் ஒரு அறிவிப்புப் பலகை இருந்தது: "அமெரிக்கப் பெண்களுக்கு: இந்தப் பாதாள அறைக்குள் நுழைவதற்கு முன், இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உடைகளை அணியுங்கள்," கத்தோலிக்கத் திருச்சபை. பார்த்தீர்களா?

**284.** கேள்வி: **சகோதரன் பிரான்ஹாம், பூமி வெடித்து எரியும்போது மணவாட்டி எங்கே இருப்பாள்? இஸ்ரவேல் புத்திரர்**

**கோசேனில் வாதைகள் விழுந்தபோது இருந்தது போன்ற ஒரு இடத்தில் அது இருக்குமா? இது நிகழும்போது மணவாட்டி பூமியில் இருப்பாளா? அப்படியானால், எங்கே? எடுத்துக் கொள்ளப்படுதலின் நேரத்தில் மணவாட்டி ஒரே இடத்தில் இருப்பார்களா?**

77 மணவாட்டி, பூமி வெடிக்கும்போது…எடுத்துக் கொள்ளப்படுதலின் நேரமானது மரித்தோரின் விழித்தெழுதலாகவும், ஜீவனுள்ளோர் ஒன்று கூடுதலாகவும் இருக்கும். ஏனெனில்… உயிரோடு இருப்பவர்களுடன், எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்வதற்காக. இப்பொழுது, ஆனால் மணவாட்டி…இப்பொழுது, பாருங்கள், அவைகளில் ஒன்று ஆயிர வருட அரசாட்சிக்கு முன்னர் இங்கே எடுத்துக் கொள்ளப்படுதலாகும். ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகும், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பிற்குப் பிறகும் பூமியானது எரியும்போதுமே. பார்த்தீர்களா? சாத்தான் பிரியமான நகரத்தைச் சுற்றி வரும்போது, பரிசுத்தவான்கள் பூமியின் பரப்பெங்கும் பாளயமிறங்கியிருப்பார்கள், தேவன் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் பொழிந்து அவர்களை அழிப்பார். சரி. இப்போது, அதுதான் வேதவாக்கியம்.

**285. சகோதரன் பிரான்ஹாம் அவர்களே, ஒரு ஸ்திரீ தன்னுடைய கணவனுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கு, உங்களின் ஆராதனைகளில் ஒன்றிற்குக் கூட வராத, வரவும் விரும்பாத ஒரு பாவியான கணவன் இருந்து… மற்றும் செய்யமாட்டாள்…அவன் தன் மனைவி முடி வெட்டிக்கொள்வது, அரைக்கால் சட்டை அணிவது, தேவபக்தியற்ற இடங்களுக்குச் செல்வது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்பினால், அந்தப் பெண் இந்த விதத்தில் அந்த மனிதனுக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டுமா? தயவு செய்து இதை இன்னும் தெளிவாக விளக்குங்கள், ஏனெனில் இது அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வியாகும்.**

78 இல்லை, சகோதரியே, நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நபருக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டியதில்லை. உண்மையாகவே இல்லை. இந்தக் காரணத்தினால் நீங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தேவனைப் பற்றிக்கொள்ளுங்கள். இப்பொழுது, காரியம்…நீங்கள் விரும்பினால்…அந்த மனிதன் உங்களுடன் வாழ விரும்பினால், நீங்கள்…ஒரு கிறிஸ்தவராக நிலைத்திருங்கள்…ஆனால் அவன் உங்களைக் குட்டைக்கால் சட்டைகளை அணியச் செய்யவும், உங்களுடைய தலைமுடியைக் கத்தரித்து, இந்த மற்ற எல்லாக் காரியங்களையும், தேவபக்தியற்ற இடங்களுக்குச் செல்லவும் செய்யப்போவதாக இருந்தால், நீங்கள் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்.

அப்படிப்பட்ட ஒரு நபருக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்கவில்லை. "ஆனால், அவளும் அவனும் ஒன்றாக வாசம் செய்யப் பிரியப்படும் வரை (அது உங்களுக்கு நினைவிருக்கிறதா?), அவர்கள்..." என்று வேதாகமம் கூறுகிறது.

இப்பொழுது, இவைகள், நான் வேதவாக்கியங்களை கீழே எழுதிவைக்கவில்லை, ஏனென்றால் நான் அவைகளை சில நிமிடங்களுக்கு முன்பு (உங்களுக்குப் புரிகிறதா?) எடுத்தேன். நான் இப்பொழுது ஒன்றை எடுத்துக் கொள்கிறேன் பிறகு எனக்கு நேரமில்லை...

79 ஆனால் பவுல், அவர்கள்...அவிசுவாசியான கணவனுக்கு அவிசுவாசமுள்ள...இல்லை விசுவாசிக்கும் மனைவி அல்லது மற்றவைகள் இருக்கும் வரை, தேவனுக்கு முரணாக இல்லாதவரை, விசுவாசமுள்ள மனைவி விசுவாசமுள்ள கணவனோடு தரித்திருக்கட்டும். அவன் அவளோடு வாசம் செய்யப் பிரியமானால்..."தேனே, போ, நீ சபைக்குச் செல்ல விரும்பினால், பரவாயில்லை; ஆனால் நான் போகமாட்டேன். எனக்கு அதில் நம்பிக்கையில்லை; அதனோடு எந்தச் சம்மந்தமும் வைத்துக் கொள்ள வேண்டாம். ஆனால் நீ தொடர்ந்து செல்; அது பரவாயில்லை." ஆனால் அவன், "நீ அதைச் செய்யக் கூடாது" என்று கூறும்போது, இப்போது அது வேறு காரியமாகிறது. அப்படியானால் நீங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களல்ல; நீங்கள் ஒவ்வொரு காரியத்தையும் தேவனுக்காகப் பிரிக்கிறீர்கள்.

**286. சகோதரர் பிரன்ஹாம்,** (பார்ப்போம்.)**...விவாகரத்து பெற்ற துணைவர் ஒருவர் உயிருடன் இருக்கும்போது, செய்தியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பே மறுமணம் செய்துகொண்டால், அவர் ஊழியம் செய்வது சரியா?**

80 சரி, நீங்கள் அதைக் குறித்துக்கொள்ள விரும்பினால், முதலாம் தீமோத்தேயு 3:2-லும், தீத்து 1 முதல் 6 வரையிலும் (நான் அதைக் குறித்து வைத்திருக்கிறேன்), இந்தக் கேள்விக்காக நீங்கள் அதைப் படிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பார்த்தீர்களா? ஒரு மனிதன்—ஒரு மனிதன் ஒரு பேராயர் அல்லது ஒரு பிரசங்கி பதவியை (சபையில் வேறொரு காரியத்தை) விரும்பினால், அவனுக்கு ஒரே ஒரு மனைவி மாத்திரமே இருக்க வேண்டும். அது உண்மையே! ஒரு ஊழியக்காரர். இப்பொழுது, அது முதலாம் தீமோத்தேயு 3:2, மற்றும் தீத்து 1 முதல் 6. இப்பொழுது, தீத்து 1 முதல் 6, ஆம்! சரி. இப்பொழுது, தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்காரனாயிருக்கிற அந்த மனிதன் ஒரே மனைவியை உடையவனாயிருப்பான் என்று வேதம் கூறியுள்ளதைக் கவனியுங்கள். இப்பொழுது.

**287. அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேவன் என்னைச் சந்தித்து,**

**அன்பின் வரத்தைச் சுகப்படுத்தி, அல்லது அன்பின் வரம் என்னவாயிருந்தது என்பதை வெளிப்படுத்தினார், அன்றிலிருந்து நான் திரும்பி வர வேண்டும் என்பதற்காகவே... என் ஜெபமும் அவ்வாறே உள்ளது. நான் மரிப்பதற்கு முன்பு அதைப் பெற்றுக் கொள்வேனா? என் கணவர் வார்த்தையைக் கேட்பாரா, நான் என்ன செய்ய வேண்டும்?**

81 அது அதிக கேள்விக்குரியதாய் உள்ளது. இப்பொழுது, அவள் கூறினாள்...இப்பொழுது, அது இங்கே என்ன, அல்லது யார்...அவள், "என் கணவர்," எனவே இதைக் கூறினது அந்தப் பெண்மணியாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது, அவள் தன்னுடைய முதல் அன்பை இழந்துவிட்டாள். பார்த்தீர்களா? அவள்—அவள் ஆவியில் குளிர்ந்து போனாள். இப்பொழுது, சகோதரியே, நீங்கள் இன்னமும் சபைக்கு வந்து சரியானதைச் செய்கிற காரணத்தால், நீங்கள் உங்களுடைய இரட்சிப்பை இழந்துபோகவில்லை, ஆனால் நீங்கள் உங்களுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்துவிட்டீர்கள். தாவீது ஒரு சமயம் கர்த்தரிடம், "கர்த்தாவே, என்னுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் திரும்பத் தாரும்" என்று கதறினான். நீங்கள் இன்னமும் ஒரு கிறிஸ்தவராகவே இருக்கிறீர்கள், ஆனால் நான்...நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ, சகோதரியே, உங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு காரியத்தையும் விட்டுவிட்டு, தேவனைத் தேடி, ஜெபியுங்கள்.

82 "என் கணவர் வார்த்தையைக் கேட்பாரா, நான் என்ன செய்ய வேண்டும்?" நான் இந்தக் காலையில் கூறினதுபோல, அப்படியே உப்பாக இருங்கள்: "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்." உன்னுடைய கற்புள்ள வாழ்க்கையை உன்னுடைய கணவன் கவனிப்பான், ஒரு அவிசுவாசியாகிய கணவன் விசுவாசமுள்ள மனைவியினால் கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்கப்படுவான். கர்த்தரைத் தேடுங்கள், தாழ்மையாய் தரித்திருந்து, எல்லா நேரத்திலும் ஜெபித்து, தேவனுக்கு துதியை செலுத்தி, உங்களுடைய கணவன் உங்களுடன் அந்தவிதமாக வாழ மனப்பூர்வமாயிருக்கும் வரையில், அவரிடத்தில் தயவாய் இருங்கள்.

**288. ஞாயிறு ஆராதனைகளுக்கு: ஒரு ஸ்திரீ ஒரு தவறைச் செய்தால்...**(இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள்; நான் இதை முதலில் எனக்குள் வாசிப்பது நல்லது. நீங்கள் பார்த்தீர்களா? "...ஒரு விவாகமான ஒரு மனிதனிடத்தில், மனந்திரும்பி மற்றும் அதற்கேற்ப அதைச் சரி செய்கிறாள்... அவள் செய்ய வேண்டுமா...மனைவியும் புருஷனும் சம்மந்தப்பட்டிருக்க வேண்டுமா, இந்த மனைவிக்கு ஒன்றுமே தெரியாவிட்டாலும் கூட..." சரி. இதெல்லாம் சரிதான்.) **ஒரு—ஒரு விவாகமான மனிதனோடு ஒரு பெண் தவறு செய்தால், வேதவாக்கியங்களின்படி மனந்திரும்பி தன்**

**கணவனோடு சரிபடுத்திக் கொண்டு, மனைவிக்கு அதைக் குறித்து ஒன்றுமே தெரியாவிட்டாலும், அவள் சம்பந்தப்பட்ட மனிதனுடைய மனைவியிடம் செல்ல வேண்டுமா; அல்லது அதை முதலில் அவளிடம் கூற வேண்டியது மனிதனின் கடமையா; அல்லது அவள் புண்படுத்தப்பட வேண்டுமா? இந்த ஈடுசெய்தல் முடிந்துவிட்ட பிறகும், அதில் நட்பும் சம்பந்தப்பட்டிருக்கும்போதும், நம்மால் எந்த அளவிற்குச் செல்ல முடியும்?**

83 பாருங்கள், என்னுடைய அருமையான சகோதரி, நீங்கள் செய்திருக்கிற ஒரே ஒரு காரியம் மாத்திரமே சரியானதாக இருக்கிறது. நீங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள் என்று நான் யூகிக்கிறேன், அல்லது உங்களுக்குத் தெரிந்த யாராவது ஒரு தவறான செயலில் ஈடுபட்டிருந்தனர், நீங்கள் வேறொரு பெண்ணின் துணையை அழைத்துச் சென்று, ஒரு சமூக செயல்பாட்டில் ஈடுபட்டிருந்தீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தபோது, நீங்கள் உங்களுடைய கிருபையிலிருந்து விழுந்துவிட்டீர்கள். அதன்பின்னர் நீங்கள் மனந்திரும்பினீர்கள், நீங்கள் இந்த மனிதனிடத்திற்கு திரும்பிச் சென்று அதைச் சரிப்படுத்தும் வரையில் உங்களால் மனந்திரும்ப முடியாது. நீங்கள் உன்னுடைய கணவனை அழைத்துக் கொண்டு அந்த மனிதனிடம் செல்ல வேண்டும், நீங்கள் அதைச் செய்தாய். அந்தக் காரியத்தைத்தான் நீ செய்திருக்க வேண்டும்; அதுவே வேதவசனம், அதை நீ செய்திருக்க வேண்டும்.

84 அண்மையில் இங்கே லூயிவில்லிலிருந்து ஒரு பெண்மணி என்னிடம் வந்தாள், அவள் ஒரு வாலிபப் பெண்ணாக இருந்தபோது, அவள் ஒரு மனிதனோடு ஓடி, பின்னர் அவள்...அவள் தவறு செய்துகொண்டிருந்தாள் என்பதை அவள் அறிந்திருந்தாள். அவள் அந்த நகரத்தை விட்டு, தூரத்தில் உள்ள வேறொரு பட்டணத்திற்குச் சென்று, தன்னுடைய பெயரை மாற்றிக்கொண்டு, சில ஜனங்களோடு வாழ்ந்தாள். இந்த மனிதன் அவளைப் பின்தொடர்ந்து சென்று, அவன் அங்குச் சென்றபோது, அவளைப் பற்றிய ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக அவளிடம் கூறினான். அவள் இன்னும் அவனுக்கு முறைசாரா மனைவியாகவே இருக்க வேண்டியிருக்கும், இல்லையென்றால் அவன் சொல்லிவிடுவான். (அவள் அங்கு இருந்தபோது, அவள் ஒரு அருமையான கிறிஸ்தவ மனிதனை மணந்து கொண்டாள்.) அவள் அவ்வாறு செய்யவில்லையென்றால், அவன் முழு காரியத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்தி விடுவேன் என்றும், அவளை மிரட்டினான்; ஆகையால், ஆரம்பத்திலேயே தன் இயல்பை வெளிப்படுத்தாமல், அவள் இருவரோடும் சேர்ந்து வாழ வேண்டியதாயிருந்தது, அவள் தவறு செய்திருந்தாள். அவள் ஒரு குழந்தையைப் பெற்றிருந்தாள், இப்பொழுது, அந்தப் பெண்ணுக்கு ஏறக்குறைய பதினெட்டு வயது இருக்கும், அவர்களில் யார் உண்மையான அவளுடைய தந்தை என்று தெரியவில்லை.

இப்பொழுது, அவள் மாதவிடாய் நிற்கும் பருவத்திற்கு வருகிறாள், அது அவளைப் பாதித்துள்ளது. இப்போது, அவள் என்ன செய்ய முடியும்? நான், “ஒன்றுதான்…” என்றேன்.

அவள், “நான் என் கணவரிடம் கூறினால், அவர் என்னை விட்டுப் போய்விடுவார்; நான்…என் மகள் அதை அறிந்திருந்தால், அவள் தற்கொலை செய்து கொள்வாள்” என்றாள்.

85 மேலும் நான், “நீ இதை உன்னுடைய இருதயத்தில் பற்றிக்கொண்டால், நீ நரகத்திற்குப் போவாய். இப்பொழுது சரி, உன் இஷ்டம்” என்றேன். நீங்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம், உங்களுடைய ஜீவியத்தைச் சுத்தம் செய்வதேயாகும். அது முற்றிலும் உண்மை. நேர்மையாயிருங்கள்.

86 நீங்கள் அநேக சமயங்களில் தரிசனங்களில், ஸ்திரீகளும், புருஷர்களுமாக ஜனங்கள் எப்படி வருகிறார்கள் என்பதை அறிவீர்கள்; பரிசுத்த ஆவியானவர் அவர்கள் வாழ்க்கையில் செய்த காரியங்களை தோண்டி எடுக்கிறார் (நீங்கள் அதைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள், நீங்கள் அதைக் கண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். புரிகிறதா?), அவர்கள் அதற்குச் செய்ய வேண்டிய காரியங்களை அவர்களிடம் கூறுவார்.

அவர்கள், “சரி, நான்—நான் அதை ஏற்கனவே கர்த்தரோடு சரிப்படுத்திக் கொண்டேன்” என்கின்றனர். ஆனால் நீங்கள் அதை உங்களுடைய கணவனுக்கு அல்லது உங்களுடைய மனைவியிடம் போய் அவர்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அது உண்மை. நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும்.

87 இப்பொழுது, இந்த நபர், அவள் தான் குற்றவாளியாயிருந்தாள், அவள் அதைச் செய்திருக்கிறாள்; அவள் தன்னுடைய கணவனிடம் சென்றாள். இப்பொழுது, சகோதரியே, நீங்கள் உங்களைத் தெளிவுபடுத்திவிட்டீர்கள், ஏனென்றால் இடையில்…நீங்கள்—நீங்கள் உங்களுடைய கணவருக்கு எதிராக விபச்சாரம் செய்தீர்கள். நீங்கள் உங்களுடைய கணவரிடம் சென்று, உங்களுடைய கணவரிடம் உங்களைத் தெளிவுபடுத்திவிட்டீர்கள், அதன்பின்னர் நீங்கள் அந்த மனிதனிடமும், கணவனிடமும் சென்று, அங்கே உங்களைத் தெளிவுபடுத்திக் கொள்கிறீர்கள். நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள். உங்களுடைய கணவர் தொடர்ந்து உங்களுடன் வாழ விரும்பினால், அது அவரைப் பொறுத்தது. அவர் அதை இப்பொழுது செய்ய வேண்டியதில்லை, ஆனால் அவர்—ஆனால் அவர் உங்களோடு வாழ விரும்பி, உங்களை மன்னித்தால், அப்பொழுது நீங்கள் மறுபடியும் அப்படிப்பட்ட ஒரு காரியத்தில் குற்றமுள்ளவராயிருக்காதபடிக்கு போதுமான பெண்மணியாக இருப்பீர்கள். ஆனால் அவர் உங்களை மன்னிக்கவில்லையென்றால், அப்பொழுது அது அவருடைய—அது அவருடைய சொந்த விருப்பம். அவரால் உங்களைத் தள்ளிவிட முடியும். முற்றிலும் சரி.

88 ஆனால் இப்பொழுது, நீங்கள் உறவு கொண்டிருந்த அந்த மனிதன், இப்பொழுது, அவர் தன்னுடைய மனைவியிடம் சென்று, தன்னுடைய மனைவியை அழைத்துக்கொண்டு உங்களிடம் திரும்பி வர வேண்டும். நீங்கள் உங்களுடைய பங்கைச் செய்துவிட்டீர்கள், இப்பொழுது தன்னுடைய பங்கை அவர் செய்ய வேண்டிய நேரம். பார்த்தீர்களா? இரண்டாம் தரப்பு…

89 இந்த ஸ்திரீ அந்த மனிதனோடு உறவு கொண்டாள், அவள் தன்னுடைய கணவனை அழைத்துச் சென்றாள், அதை அறிக்கை செய்து, அந்த மனிதனிடம் சென்று, அதை அறிக்கை செய்து, அதைச் சரிபடுத்திக் கொண்டாள். இப்பொழுது, அடுத்த மனிதனும் கூட விவாகமான ஒரு மனிதனாயிருந்தான்; இப்பொழுது, அவன் தன்னுடைய மனைவியிடம் சென்று, மனைவியை அழைத்துக்கொண்டு, இந்த மனைவியிடம் திரும்பி வர வேண்டும். அப்படியானால் பரவாயில்லை. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? அது அப்பொழுதே சரியாக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு வெளியே, நீங்கள் இன்னமும் குற்றவாளியாயிருப்பீர்கள், உங்களுடைய இருதயத்தில் நீங்கள் ஆக்கினைக்குட்படுத்தப்படுவீர்கள்.

90 முதலாம் உலகப் போருக்குப் பின்னர் அதை உடையவளாயிருந்த ஒரு பெண்ணை நான் சந்தித்தேன். அதற்கு அவள், “ஓ, சகோதரன் பிரான்ஹாம்” என்றாள். அவள் நூற்றுக்கணக்கான டாலர்களை மனநல மருத்துவர்களுக்காகச் செலவழித்தாள். நான் அங்கே அமர்ந்து அந்த அறையில் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். மேடா அவளை அங்கே கொண்டு வந்தாள். அவள் அப்படித் தன் கைகளில் ஒரு கைக்குட்டையைப் பிழிந்து கொண்டே அமர்ந்திருந்தாள், “உலகம் வெடிக்கப் போகிறதை நான் உணருகிறேன், நான்…” என்றாள். இந்த விதமாக எல்லாமே.

நான் தொடர்ந்து அங்கேயே அமர்ந்திருந்தேன். நான், “இப்பொழுது, ஏதோ ஒன்றைக் குறித்து…உங்கள் வாழ்க்கையில் எங்கோ ஏதோ ஒரு காரியம் உங்களுக்கு உண்டா?” என்று கேட்டேன்.

“இல்லை, நான் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியர்.”

நான், “சரி” என்றேன். அங்கே சற்று நேரம் அமர்ந்து கவனித்தேன். நான், “நான் ஒரு சிறிய பச்சை நிற காரைக் காண்கிறேன், நீங்கள் ஒரு பொன்னிற முடி கொண்ட மனிதனுடன் இருக்கிறீர்கள், மேலும் ஒரு ரயில் கிட்டத்தட்ட அந்தக் காரை மோதியது” என்றேன்.

…?…அவள், “நீங்கள் அதை யாரிடமும் சொல்லாதீர்கள்!” என்றாள்.

அதற்கு நான், “அந்த நேரத்தில் உங்களுடைய கணவர் இராணுவத்தில் இருந்தார்” என்றேன்.

அவள் அழத் துவங்கி, துள்ளிக்குதித்து எழுந்து, “நீங்கள் அதை யாரிடமும் கூறாதீர்கள்” என்றாள். பார்த்தீர்களா? அது அவளுடைய ஆழ் மனதில் ஆழமாகக் கீழே இருந்தது. அவள், “நான் அதை நீண்ட காலத்திற்கு முன்பே தேவனிடத்தில் அறிக்கை செய்திருக்கிறேன்” என்றாள்.

91 நான், “ஆனால் ஒரு நிமிடம் பொறும். நீங்கள் தேவனுக்கு விரோதமாக ஒரு தவறும் செய்யவில்லை. உங்களுடைய விவாக உறுதிமொழிக்கு எதிராக நீங்கள் ஒரு தவறு செய்துள்ளீர்கள். நீங்கள் முதலில் உங்களுடைய கணவரிடம் திரும்பிச் சென்று அதைச் சரிபடுத்திக்கொள்ள வேண்டும்” என்றேன்.

அவள், “அவன் என்னை விட்டுப் போய்விடுவார்” என்றாள்.

நான், “தேவன் உங்களை எப்படியோ விட்டுவிட்டார். ஆகையால் இப்பொழுது, எந்த ஒருவர் உங்களை விட்டுச் செல்ல நீ விரும்புகிறாய்?” என்று கேட்டேன். நான், “அவரிடம் போங்கள்” என்றேன்.

அதற்கு அவள், “ஓ, நான்—நான்…அவர் *இதைச்* செய்வார், எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு” என்றாள்.

அதற்கு நான், “சரி, நான் உங்களுக்கு இவ்வளவுதான் கூற முடியும். மனநல மருத்துவர் அதை உன்னிடத்திலிருந்து ஒருபோதும் வெளிக்கொணரவில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கிறார்; என் ஜீவியத்தில் நான் உங்களை ஒரு போதும் கண்டதேயில்லை” என்றேன்.

அவள், “அது முற்றிலும் உண்மையே!” என்றாள். “பாருங்கள், என்னால்—என்னால் அதை அவரிடத்தில் கூற முடியாது” என்றாள்.

நான், “பாருங்கள், நான்…நான் உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி” என்றேன். மற்ற அறைக்குச் சென்றேன், அவள் மீண்டும் அங்கே உள்ளே வந்தாள்.

மேடா, “அவள் நீங்கள் மீண்டும் உள்ளே இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள்,” என்றாள்.

நான் அங்குச் சென்றேன்; நான், “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டேன்.

மேலும் அவள், “சகோதரன் பிரான்ஹாம், என்னால் அதை என்னுடைய கணவரிடம் கூற முடியாது!” என்றாள்.

அதற்கு நான், “உங்களுடைய கணவர் ஒரு கறுப்புத் தலைமுடியையுடையவர்” என்றேன்.

“ஆம்!”

அப்பொழுது நான், "அவர் அதே காரியத்தை உங்களிடத்தில் அறிக்கை செய்ய வேண்டும்" என்றேன்.

அதற்கு அவள், "ஓ, என் கணவர் அல்ல!" என்றாள்.

நான், "நீ போய் அவனை அழைத்துக்கொண்டு இங்கே வருவது நல்லது" என்றேன். நான், "ஒரு *குறிப்பிட்ட* வகை வாகன நிறுவனத்தின் அலுவலகத்தில் பணிபுரியும், இளஞ்சிவப்பு நிற ஆடை அணியும் ஒரு *குறிப்பிட்ட* பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

அவள், "நிச்சயமாக!" என்றாள்.

அதற்கு நான், "அவர்கள் அவளை ஒரு *குறிப்பிட்ட* பெயரால் அழைக்கவில்லையா?" என்று கேட்டேன்.

"ஆம்!"

நான், "இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர்கள் ஒரு பீச் மரத்தின் அடியில்...*இன்னின்ன* உரிம எண் கொண்ட ஒரு சிறிய பழுப்பு நிற செவ்ரோலெட் காரில் அமர்ந்து, அதே தவறைப் புரிந்தனர்" என்றேன்.

அவள், "என்னுடைய கணவன் அல்ல!" என்றாள்.

நான், "சரி, நீங்கள் போய் அவரை அழைத்துக்கொண்டு இங்கே வாருங்கள்" என்றேன்.

அவள் புறப்பட்டுச் சென்றாள். ஒரு சில நிமிடங்கள், இதோ அவர்கள் திரும்பி வருகிறார்கள். அவர், "அது உண்மைதான்!" என்றார்.

நான் கூறினேன்—நான், "உங்களுக்குப் புரிகிறதா? இப்பொழுது போய்த் தேவனிடத்தில் சொல்லுங்கள்!" என்றேன்.

92 ஆனால் முதலாவதாக, நீங்கள் பீடத்தண்டை வரும்போது, அது அவசியம் என்பதை நினைவில் கொள்ளும்போது, முதலில் சென்று அதைச் சரிபடுத்திக் கொள்ளுங்கள். இங்குள்ள இந்த மற்ற சாரார் தன்னுடைய மனைவியிடம் குற்றத்தைச் சொல்லாதவரையில்...இந்த மனைவி தன்னை தெளிவாக்கிக் கொண்டாள். இப்பொழுது அது அவளையும் அவளுடைய கணவனையும் பொறுத்ததாயுள்ளது. ஆனால் இந்த மற்ற மனிதனும் அவனுடைய மனைவியும் அதில் தெளிவாக வர வேண்டும். உங்களால் முடியாது...நீங்கள் என்ன செய்தாலும், நீங்கள் அதைச் சுத்தமாகக் கழுவும் வரை, நீங்கள் உயிரோடிருக்கும் வரை அது உங்களைத் துன்புறுத்தும். அதைச் செய்ய ஒரே ஒரு வழிதான் உண்டு: அதை அறிக்கை செய்யுங்கள். அது உங்களைத் தோலை உரிக்க வேண்டியிருந்தாலும், எப்படியும் அதைச் செய்யுங்கள். உண்மையைக் கூறுங்கள், அப்பொழுது நீங்கள் அதைச் சரியாகப் புரிந்து கொண்டீர்கள். ஆமென்!

93 ஒலிநாடாவில், "அது தவறு" என்று கூறுவதை என்னால் ஏராளமாகக் கேட்க முடிகிறது. ஆனால் நீங்கள் ஒரு முறை அதை முயற்சித்து, அது இல்லையா என்று பாருங்கள். சரி.

**289. ஞாயிறு காலைக்கான கேள்வி:** (மன்னிக்கவும், இது இந்த நேரத்தில், ஆனால்...) **பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் போதே அல்லது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதில் ஒரு வித்தியாசம் உண்டா? ஒரு நபர் அந்நிய பாஷைகளில் பேசுகிறாரா? எப்பொழுதும் இல்லையென்றாலும், என்ன வெளிப்படுத்துதல் அறியப்படுகிறது?**

94 பாருங்கள், ஒரு தாய் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அதை அறியாமலிருப்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அதை அறியாதிருக்க அவள் சுயநினைவை இழந்திருக்க வேண்டும். நீங்கள் அதை அறியாமல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியாது. உங்களுக்குள்ளாக ஏதோ காரியம் சம்பவிக்கிறது. பார்த்தீர்களா? உங்களை மாற்றுகிற ஏதோ ஒரு காரியம் உண்டு. உங்கள் முழு அமைப்பும், உங்கள் முழு ஆவிக்குரிய அமைப்பும் மீண்டும் புதிதாக்கப்பட்டு, நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறீர்கள், வேதாகமம் அதைக் கூறுவது போல, கிறிஸ்துவுக்குள் ஒரு *புதிய சிருஷ்டி*. அது உங்களுக்குத் தெரியும்.

95 இப்பொழுது, நீங்கள், “சகோதரன் பிரான்ஹாம், அப்படியானால் ஒரு மனிதன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள அந்நிய பாஷைகளில் பேச வேண்டும் என்று நீங்கள் விசுவாசிப்பதில்லை” என்று கூறுகிறீர்கள். அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறான் என்பதை நிரூபிக்க அல்ல.

96 என்னுடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினனும் அந்நிய பாஷைகளில் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், மேலும்... நீங்கள் தேவனிடத்தில் வேண்டிக் கொள்வீர்களேயானால், தேவன் அதை உங்களுக்கு அருளுவார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லட்டும்; பரிசுத்த ஆவியைப் பெற்றிராத அந்நிய பாஷைகளில் பேசுகிற ஏராளமான ஜனங்களை நான் அறிவேன். தன்னிடமும் தன் சபையினரிடமும் நேர்மையாக இருக்கும் எந்த ஊழியக்காரரும், அதே உண்மையைத்தான் தனது சபையினரிடமும் கூறுவார். பிசாசு அதைப் பாவனை செய்ய முடியும்.

97 பவுல், “நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்கு பலியாகக் கொடுத்தாலும், நான் வார்த்தையின் இரகசியங்களையெல்லாம் புரிந்து கொண்டாலும், எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், இவை அனைத்தையும் செய்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. என்னால் மலைகளையும் மற்ற காரியங்களையும் அசைக்க முடியும் என்ற விசுவாசம் எனக்கு உண்டு; நான் இன்னமும் ஒன்றுமில்லை” என்றான். அதன்பின்னர் அவன், “நிறைவானது

வரும்போது குறைவானது ஒழிந்துபோம்,” அல்லது, “நிறைவானது வெளிப்படும்போது” என்றான்.

இப்பொழுது, நான் அதன் பேரில் ஒரு கேள்வியைப் பெற்றுள்ளேன். முத்திரைகள் திறக்கப்பட்டபோது என்ன சம்பவித்தது என்பதைக் குறித்து, இன்றிரவு நான் அதற்கு வருவேன் என்று நம்புகிறேன். மேலும் இந்தக் கேள்விக்கு அது உங்களைச் சரியாகச் சென்றடையும் என்று நான் நினைக்கிறேன்.

**290.** கேள்வி: **சகோதரன் பிரான்ஹாம், நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்னால் மீண்டு வர முடியாத ஏதோ காரியம் என்மேல் நிலைகொண்டுள்ளது. கடந்த இலையுதிர் காலத்தில், நான் வெள்ளை மணலில் இழக்கப்பட்டதாகச் சொப்பனம் கண்டேன். இருட்டிக் கொண்டிருந்தது; என்னால் என்னுடைய வழியைக் கண்டறிய முடியவில்லை. கடந்த இலையுதிர் காலம் முதற்கொண்டு இந்தச் சொப்பனம் என்னோடு இருந்து வருகிறது. இப்பொழுது, நான் இருளில் தடவிக்கொண்டிருக்கிறவனைப் போல இருக்கிறேன். என்னுடைய மகனும் (எ-ர்-வ்-...), எர்வினும், மனைவியும் என்னுடைய சொப்பனத்தில் சேர்க்கப்பட்டனர். இப்பொழுது, அவர்களும் கூட இருளில் இருக்கிறார்கள். நாங்கள் பதறலில் இருக்கிறோம்—நாங்கள் பதறலில் இருக்கிறோம். இப்பொழுது நம்முடைய இருதயங்களில் என்ன—என்ன இருக்கிறது என்பதை தேவன் உங்களுக்குக் காண்பிப்பார் என்று நான் நம்புகிறேன்.** (திருமதி...ஓ, சரி.) **நாங்கள் தவறான இடங்களில் அல்லது பாவம் செய்து கொண்டிருந்தால், அதை எங்களிடம் கூறுங்கள். நாங்கள் சரியாக இருக்க விரும்புகிறோம்.**

98 அந்தப் பெண்மணியை எனக்குத் தெரியாது, ஆனால் பெண்மணியே, நீங்கள் இங்கிருந்தால், இங்கே உங்களுடைய தொல்லை உள்ளது என்பதையே நான் உணருகிறேன். நீங்கள் ஏதோ ஒரு காரியம் உங்களுக்குச் சம்பவிக்க அனுமதித்திருக்கிறீர்கள், அது உங்களைப் பதட்டமடையச் செய்தது, ஏனென்றால் *வெள்ளை மணலில்* இருப்பது “தூய்மையையும், நீதியையும்” குறிக்கிறது. நீங்கள் சாத்தான் உங்கள்மேல் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கிறீர்கள். உங்களுடைய சொப்பனம் தவறொன்றுமில்லை என்பதை நிரூபித்துள்ளது. நீங்கள் பதற்றமடைகிறீர்கள், இதைச் செய்வதன் மூலமும், இதை நினைப்பதன் மூலமும், நீங்கள் உங்களுடைய குடும்பத்தில் உள்ள மற்றவர்களையும் பதட்டமடையச் செய்கிறீர்கள். அதைச் செய்வதை நிறுத்துங்கள்; தேவன் உங்களுக்கு அளித்துள்ள உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் வெள்ளை *மணலில்* இருக்கிறீர்கள் என்ற வியாக்கியானத்தின் மூலம் உங்களுடைய சொப்பனம் நிரூபிக்கிறது. எல்லாம் சரியாயிருக்கிறது. அது உங்களுக்கு, நீங்கள்தான் பதற்றமாக இருக்கிறீர்கள்.

99 நீங்கள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினரைப் பதற்றமடையச்

செய்துவிட்டால், அது அடுத்த அங்கத்தினருக்கும், அடுத்த அங்கத்தினருக்கும் செல்கிறது, முதல் காரியம் நீங்கள் யாவரும் வம்பு செய்து கொண்டு போய்க் கொண்டிருக்கிறீர்கள். குடும்பத்தின் ஒரு அங்கத்தினன் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து ஒருவிதமாக வருத்தமடைகிறான், அது மற்றவரை நிலைகுலையச் செய்கிறது, மற்றவரை நிலைகுலையச் செய்கிறது, மற்றவரை நிலைகுலையச் செய்கிறது, முதலாவதாக முழு குடும்பமும் நிலைகுலைந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது சாத்தான். அதன்பின்னர் குடும்பத்தில் ஒரு அங்கத்தினன் களிகூர்ந்தால், மற்றவர்களும் அதனோடு களிகூரட்டும். எனவே குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அதைச் செய்ய முயற்சிக்கின்றனர்.

100 பிள்ளைகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய தகப்பனாருக்கும், அம்மாவிற்கும் உதவி செய்ய முயலுங்கள். அம்மா, நீங்கள்...அப்பா, நீங்கள் பிள்ளைகளுக்கு உதவி செய்ய முயற்சி செய்யுங்கள். அந்த இருண்ட, அவிசுவாச ஆவி உங்களைச் சுற்றி வர அனுமதிக்க வேண்டாம். நீங்கள் கிறிஸ்தவர்கள். நீங்கள் தேவனுடைய ஆவியினால் பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் பூமியின் உப்பாயிருக்கிறீர்கள். உங்களுக்குத் தேவனால் அளிக்கப்பட்ட உரிமைகள் உள்ளன. வேதம், “புகழ் எதுவோ, புண்ணியம் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்” என்று கூறியுள்ளது. தவறான காரியத்தைக் குறித்து நினைக்க வேண்டாம்.

சகோதரியே, அருமையான சகோதரியே, அதுதான் உங்களுடைய தொல்லை என்று நான் நினைக்கிறேன்.

என்னால் அதைக் குறித்து நீண்ட நேரம் சிந்திக்க முடியும், ஆனால் நான் வாக்களித்தபடி, இருபது நிமிடங்கள்...நான் இவைகளில் பலவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்...அது இல்லையென்றால், அதை மீண்டும் மேசையின் மேல் வையுங்கள், நான் அதை மீண்டும் பெற்றுக்கொள்வேன்.

**291. சிலர் சகோதரன் பிரான்ஹாம் மனுஷகுமாரன் என்று கூறுகிறார்கள். அக்கினி ஸ்தம்பம் மனுஷகுமாரன் என்று நான் நினைத்தேன். நான் தவறாகப் புரிந்து கொண்டேனா?**

101 பாருங்கள், அது ஒரு நல்ல கேள்வி, மிகவும் நல்லது. ஆனால் நான் மனுஷகுமாரன் அல்ல, ஒரு மனுஷகுமாரன். ஒரு கணிசமான வித்தியாசம் உண்டு. இயேசு கிறிஸ்து மனுஷ குமாரனாகவும், தேவனுடைய குமாரனாகவும், மனுஷ குமாரனாகவும், தாவீதின் குமாரனாகவும் இருந்தார்.

102 இப்பொழுது, அந்தக் கேள்வி இந்த நபரிடம் கேட்கப்பட்டிருக்கலாம் அல்லது கூறப்பட்டிருக்கலாம், ஏனென்றால் ஜனங்கள் என்னை ஒரு ஞானதிருஷ்டிக்காரனாகவே கருதுகின்றனர், அது நான் ஒருபோதும்...அதன் பேரில் என்னைக் கடிந்து கொள்ள செய்யும் ஒரு கேள்வி எனக்கு இங்கே உள்ளது. பார்த்தீர்களா?

ஆனால் நான்—நான்—நான்…நீங்கள்—நீங்கள்…நான் இந்தக் கேள்விகளை வாசிக்கும்போது, நான் ஏன் இவ்விதமாகப் பதிலளிக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். நான் ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய நிச்சயமாக வழிநடத்தப்படும் வரை (புரிகிறதா?), அதன்பின்னர் நான் கூற வேண்டியதை நான்—நான் கூறுவேன். ஆனால் அந்த நேரம் வந்திருக்கவில்லை.

103 எனவே நான் அபிஷேகம் பண்ணப்பட்ட மனுஷகுமாரன் அல்ல. நான் அவருடைய தீர்க்கதரிசி என்று உரிமை கோரவில்லை. பலமுறை நான் அதைச் கூறவே இல்லை என்று நினைத்தபோதெல்லாம் கூறிவிட்டேன், அதை ஒலிநாடாவில் நானே கவனித்திருக்கிறேன். ஆனால் நான் அதைச் சில சமயங்களில் கூறுகிறேன், ஏனென்றால் நீங்கள் அதைச் வார்த்தைகளின்படி கொடுக்க விரும்பினால், ஆங்கிலத்தில் *தீர்க்கதரிசி* என்றால் வெறுமனே "ஒரு பிரசங்கி" என்றுதான் அர்த்தம். எவருமே அதை அறிவீர்கள்; அகராதியைப் எடுத்துப் பாருங்கள். பார்த்தீர்களா? ஆங்கில அகராதியின்படி *தீர்க்கதரிசி* என்றால் "ஒரு பிரசங்கியார்" என்பதாகும். ஆனால் எபிரெய மொழியிலோ அல்லது கிரேக்க மொழியிலோ, ஒரு *தீர்க்கதரிசி* என்பது "ஒரு ஞானதிருஷ்டிக்காரன், காரியங்களை முன்னறிந்து, அவற்றை முன்னறிவிப்பவர்" என்பதாகும். ஆனால் ஆங்கில வியாக்கியானத்தின் கீழ் ஒரு *தீர்க்கதரிசி* என்பது "ஒரு ஞானதிருஷ்டிக்காரன்" என்பதாகும்.

104 அதனால் நான் என்னை உங்கள் சகோதரன் என்பதைத் தவிர வேறு எப்படியும் என்னை அழைத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் உங்களுடைய சகோதரன், நீங்கள் என்னைச் சகோதரன் பில் அல்லது சகோதரன் பிரான்ஹாம் அல்லது நீங்கள் அதைக் குறித்து எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள். அது—அது—அது அருமையானது, அது—அது அருமையானது. நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்கள், அதை உங்களுக்குள்ளே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் புரிகிறதா?

105 இப்பொழுது, அந்த மற்றொரு கேள்வி என்னவாயிருந்தது? நான் இவற்றில் மிகவும் காயப்பட்டு, அந்தக் காரியங்கள் என்னவாயிருந்தன என்பதை நான் மறந்துவிட்டேன். அவைகளில் ஒன்று, "நான் மனுஷகுமாரனாயிருந்தேனா?" என்பதாகும்… இதோ அதை நான் நம்புகிறேன். "…மனுஷகுமாரன் அல்லது மனுஷகுமாரன் அக்கினி ஸ்தம்பமா?" இல்லை! அக்கினி ஸ்தம்பமே அபிஷேகமாயுள்ளது.

106 அக்கினி ஸ்தம்பம்…இப்பொழுது, இது வேத சாஸ்திரிகளாகிய உங்களில் யாராகிலும் காணப்பட்டாலொழிய, மற்றவர்களுக்குச் சற்று ஆழமானதாக இருக்கலாம், வேத பண்டிதர் வேயில், அநேகமாக இங்கே சகோதரன், மற்றும் இங்கே ஆர்கன்சாஸிலிருந்து வந்துள்ள இந்த ஊழியக்காரர்களில் சிலர், மற்றும் சுற்றிலுமுள்ள

என்னுடைய நல்ல நண்பர்களையும், அவர்கள் அநேகமாக அறிந்திருப்பார்கள்.

107 இப்பொழுது, அந்த அக்கினி ஸ்தம்பம் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற *லோகாஸாய்* உள்ளது. *லோகாஸ்,* அது உண்மையாகவே தேவனுடைய பரிபூரணத்தின் தன்மையாயுள்ளது. தேவன் காணக்கூடிய ஒரு ரூபத்திற்குள்ளானபோது, அது புறப்பட்டுச் சென்ற மகத்தான ஆவியின் அபிஷேகமாயிருந்தது, அது தாழ்மையாய், இறங்கி வந்து, தேவன், பிதா, இஸ்ரவேலின் மேல் இருந்த *லோகாஸ்,* அந்த…அவர் பரிசுத்தராயிருந்தார், பாவத்தைச் சுமக்க முடியாது. ஏதேனில் சரியாக ஒரு இரத்த பலி இருக்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது அந்த *லோகாஸ்* மாம்சமாகி, நமக்கு மத்தியில் வாசம்பண்ணினார்; இந்த *லோகாஸ்* ஒரு மானிட சரீரத்தில் வாசம் செய்தது, அது பலியாக…

108 மனிதன் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டபோது… அப்பொழுது தேவன் மனிதனை மீட்கும்படி மனுஷ சாயலில் இறங்கி வந்தார்; அது மனிதனையும் தேவனையும் ஒன்றாகக் கொண்டு வந்தது. வானங்களும் பூமியும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டன; *லோகாஸ்* மாம்சமாகி நம் மத்தியில் வாசம் செய்தபோது, தேவனும் மனிதனும் ஒருவரையொருவர் பிதாத்துவமாகவும், குமாரத்துவமாகவும் தழுவிக் கொண்டனர்.

109 இயேசு, “நான் தேவனிடத்திலிருந்து வந்தேன், நான் தேவனிடத்திற்குப் போகிறேன்” என்றார். அது சரியா? அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறுதலுக்குப் பிறகு, தேவனுடைய வலது பாரிசத்தில் அமரும்படி சரீரம் எடுக்கப்பட்டபோது…இப்பொழுது, தேவனுக்கு வலது கரம் உண்டு என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை, தேவன் ஆவியாயிருக்கிறார். ஆனால் *வலது பாரிசத்தில்* இருப்பது “தேவனுடைய வல்லமையிலும் அதிகாரத்திலும்” என்று பொருள்படுகிறது. அதாவது அந்த நாமத்தில் பரலோகத்திலுள்ள ஒவ்வொரு காரியமும் அதன் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது, அதற்கு உட்பட்டது. பூமியில் உள்ள ஒவ்வொரு காரியமும் அதன் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது, அதற்குக் கீழ்படிகிறது, எல்லா நாமங்களுக்கும் மேலாக ஒரு நாமம், இயேசு கிறிஸ்து.

110 இப்பொழுது, அவருக்குள் இருந்த இந்த *லோகாஸ்,* அது தேவனுடைய ஆவியாய், அபிஷேகமாயிருந்தது, பரிசுத்தமாக்கும் கிருபையின் இரத்தத்தினூடாக, அதே *லோகாஸினால்* அபிஷேகிக்கப்பட்ட தேவனுக்கு அநேக குமாரர்களை கொண்டு வந்தார்.

111 இப்பொழுது, பெந்தெகொஸ்தே நாளில் அது இறங்கி வந்தது, அந்த அக்கினி ஸ்தம்பம், இந்த விதமாகப் பிரிந்து சிதறியது, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அக்கினிமயமான

நாவுகள், அவர்களுடைய நாவுகள் அல்ல, ஆனால் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அக்கினிமயமான நாவுகள் அமர்ந்தது, இந்த அக்கினி ஸ்தம்பத்தினால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட, ஒரு தெரிந்து கொள்ளப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட குழு, தேவன் தம்மை மனிதனுக்குள் பிரித்திருந்தார் என்பதையே காண்பிக்கிறது. உங்களுக்கு அது புரிகிறதா? தேவன், *லோகாஸ்,* தம்மை மனிதனுக்குள் பிரித்துக் கொள்கிறார்! தேவன், ஒரு நபருக்குள்ளாக அல்ல, அவர் உலகளாவிய தம்முடைய சபையில் இருக்கிறார். அந்தக் காரணத்தினால்தான் இயேசு, “நான் செய்கிற கிரியைகளை நீங்களும் அதிகமாகச் செய்வீர்கள்” என்றார். இப்பொழுது, யாக்கோபு அரசன், “பெரிய” என்று கூறுவதை நான் அறிவேன், ஆனால் அங்கே சரியான மொழிபெயர்ப்பானது, “இவைகளைப் பார்க்கிலும் நீங்கள் *அதிகம்* செய்வீர்கள்” என்பதாகும். இயேசு கிறிஸ்து என்னும், ஒரே மனிதனுக்குள் தேவன் அடைக்கப்பட்டிருந்தார். ஆனால் இப்பொழுது அவர் உலகளாவிய ஜீவனுள்ள தேவனுடைய சபை முழுவதிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

112 இப்பொழுது, தேவன் இங்கே நம்முடைய இருதயங்களில் நம்மோடு பேசிக்கொண்டிருக்கையில், அவர் ஆப்பிரிக்காவில் இருக்கிறார், அவர் ஆசியாவில் இருக்கிறார், அவர் ஐரோப்பாவில் இருக்கிறார், அவர் இங்கிலாந்தில் இருக்கிறார். விசுவாசிகள் எங்கெல்லாம் ஒன்று கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் மத்தியில் அவர் இருக்கிறார்.

113 இப்பொழுது, அவருடைய மரணம், அடக்கம், பரமேறுதலுக்குப் பிறகு, பரிசுத்த ஆவியின் வருகைக்குப் பிறகு, பவுல் தமஸ்குவிற்கு சவுலாக இருந்த தன்னுடைய வழியில் இருந்தபோது, அவன் ஒரு அக்கினி ஸ்தம்பத்தினால், *லோகாஸினால்* வீழ்த்தப்பட்டான். அவனுடைய ஜனங்கள் வனாந்திரத்தினூடாகப் பின்தொடர்ந்த அதே *லோகாஸ்* என்பதை அவன் அறிந்திருந்தாலொழிய, அந்த யூதன் அந்த அக்கினி ஸ்தம்பத்தை, “ஆண்டவரே” என்று ஒருபோதும் அழைத்திருக்கமாட்டான். பார்த்தீர்களா? இப்பொழுது, அது மனுஷகுமாரன் அல்ல, அது *லோகாஸாய்* இருந்தது.

114 இப்பொழுது, நாம் இதைப் பயபக்தியோடும், அன்போடும், மரியாதையோடும் கூறுகிறோம். பார்த்தீர்களா? இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருப்பது போல, கடைசி நாட்களில், லோத்தின் காலத்திற்கு முன்பு இருந்தது போல அல்லது லோத்தின் காலத்தில் சோதோமில் இருந்தது போல, மனுஷகுமாரன் தம்மை மீண்டும் வெளிப்படுத்தி, தம்மை வெளிப்படுத்துகிற நாளிலே அது இருக்கும். இப்போது, இந்தக் கடைசி நாட்களில் இயேசுவின் மீது இருந்த *லோகோஸ்,* அதிலிருந்து அவர் மீண்டும் அக்கினி ஸ்தம்பமாக மாறி, பூமிக்கு இறங்கி வந்துவிட்டார் (நான் ஒரு காரியத்தைக் கூறப்போவதாக இருந்தேன், ஆனால் நான்

அந்த ஒலிநாடாவைக் கவனிக்கிறேன். நீர் அதை அவர்களிடம் கூறினால் அவர்கள் நம்பமாட்டார்கள். அது எந்த வித்தியாசத்தையும் உண்டாக்காது. அவர்கள்...ஜனங்கள் அதை நம்பமாட்டார்கள், ஆனால் நான் அதை விட்டுவிட்டேன்), ஆனால் ஒரு விசாரணை தீர்ப்பு வருவது போன்றே வந்துள்ளது.

115 இப்பொழுது, இந்த மகத்தான அக்கினி ஸ்தம்பமானது, விஞ்ஞானப் பூர்வமான புகைப்படக் கருவிகளாலும் முற்றிலுமாக அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு, அது இங்கே பூமியின் மேல் இன்றைக்கு உள்ளது...அதன் புகைப்படம் அங்கே தொங்கிக் கொண்டிருக்கிறது. அது இன்னமும் அங்குள்ளது என்று நான் நினைக்கிறேன், அது சரிதானே? அது அங்கிருக்கிறதா? நாம் பெற்றுள்ள மிகச் சிறந்த முறையில் விஞ்ஞானப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கைரேகை மற்றும் ஆவணங்களுக்கான எப்.பி.ஐ.யின் தலைவரான ஜார்ஜ் ஜே. லேசி, “சங்கை பிரான்ஹாம் அவர்களே, நானே அதை உளவியல் என்று அழைத்தேன், ஆனால்,” என்று கூறி, “அந்த ஒளி ஒளி வில்லையில் பட்டது. நான் அதைத் தீவிர ஒளிக்கதிர் ஒளியின் கீழ் வைத்து, நான்கு அல்லது ஐந்து நாட்கள் இங்கே பரிசோதனை செய்தேன். அப்பொழுது அந்த ஒளி ஒளி வில்லையில் பட்டது. இந்த ஒளி வில்லை உளவியலை எடுத்துக் கொள்ளாது!” என்றார். இப்பொழுது, அது அடையாளங்காட்டப்பட்டுள்ளது.

116 அதன்பின்னர் அதன் கிரியைகளைக் கவனியுங்கள். அது, நம்மிடையே, ஒரு காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அதே இயேசுவையே நிரூபிக்கிறது, அதே ஆவியானவர் அவர்மேல் இருந்து, ஒரு சரீரத்தின் வழியாக வெளிப்பட்டு, மீண்டும் தலைமைத்துவத்திற்குத் திரும்பும் வரை வந்திருக்கிறார். அந்தச் சரீரத்தை உரிமை கோர அவர் சீக்கிரத்தில் வருகிறார். ஆமென்! தலையானது சரீரத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு அது புரிகிறதா? அது தேவனுடைய குமாரனாக, மனுஷகுமாரனாக, தாவீதின் குமாரனாக, **நான் இருக்கிறேன்** என்பவராக, சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி, விடிவெள்ளி நட்சத்திரமாக இருப்பார்.

117 நான் அவர் அல்ல; நான் அவருடைய ஊழியக்காரன். அக்கினி ஸ்தம்பம் அவர் அல்ல; அது ஆவியின் ரூபத்தில் உள்ளது (புரிகிறதா?) மனுஷகுமாரன் மீது இருந்தது, இப்போது மனுஷகுமாரர்களை அபிஷேகம் செய்ய வந்திருக்கிறது. அவர் எப்படி இருக்கும் என்று சொன்னாரோ, அப்படியே ஒரு ஊழியத்தை மீண்டும் கொண்டுவர தலையும், சரீரத்தின் மற்ற பாகங்களும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.

118 ஏனோக்கு கட்டிய கூர்நுனி கோபுரத்தைப் போன்றே—போன்றே. அந்தக் கூர்நுனிக்கோபுரத்தில் அவர்கள் தலைக்கல்லை ஒருபோதும் பதிக்கவில்லை என்பதை நாம் காண்கிறோம். ஏன்? தலைக்கல் இன்னும் வரவேண்டியதாயுள்ளது. கூர்நுனி கோபுரத்தில்

உள்ள ஏழு படிகள்...நாம் என்றோ ஒரு நாள் அதைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம், அது எப்படி உண்மையாகவே வேதத்தோடு பரிபூரணமாக உள்ளது என்பதை நான் உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

119 இப்பொழுது, உங்களுடைய அமெரிக்க டாலர் நோட்டை நீங்கள் கவனிப்பீர்களேயானால், அந்த மகத்தான தலைக்கல், ஒரு கண், "மகத்தான முத்திரை" என்று கூறுகிறது. அது வரும்.

அந்தக் கற்களைக் கவனியுங்கள்...எகிப்தில் உள்ள கூர்நுனி கோபுரக் கற்களை எப்போதாவது இங்கு எவரேனும் பார்த்திருக்கிறீர்களா? பாருங்கள், நீங்கள் கவனிப்பீர்களேயானால்... ஆம், இங்கே, அங்கே பின்னால் உள்ள கரங்கள் அங்கே மேலே இருக்கின்றன. சரி. அந்தக் கற்கள் அங்கே மிகவும் பரிபூரணமாகக் கிடக்கின்றன, அந்த உச்சியில், அதனுடைய உச்சியில் உள்ள குவிமாடம் போன்று, அந்தக் கல் வரும்போது, அது ஒரு பெரிய வைரக்கல்லைப் போன்று அங்கே அதனோடு சரியாகப் பொருந்தியிருக்கும்.

120 இப்பொழுது, அந்தக் கல்லானது அங்கே அந்த அடிவார அஸ்திவாரத்தில் பொருந்தாது, அது இரண்டாம் அஸ்திபாரத்திலோ அல்லது மூன்றாம் அஸ்திபாரத்திலோ பொருந்தாது. முழு கட்டிடமும் கல்லோடு பொருத்தப்பட்டிருக்கும்போது, அது அஸ்திபாரத்தின் மேல் மாத்திரமே பொருந்தும். மேலும் சபையும், விசுவாசிகளின் சரீரமும், அவர் ஒருமுறை விட்டுச்சென்ற ஊழியமும், அப்பொழுது இருந்ததைப் போலவே இருக்கும் வரை இயேசு வர முடியாது... அதன்பின்னர், அது...எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் பவுல், "நம்மையல்லாமல் அவர்கள் பரிபூரணராகமாட்டார்கள்" என்று கூறினான். "நம்மையல்லாமல் அவர்கள் பரிபூரணப்படுத்தப்பட முடியாது." லூத்தரன்கள், வெஸ்லிகள் மற்றும் அவர்கள் எல்லோரையும் அவர்களுடைய காலங்களினூடாக எழுப்ப அவர்கள் இந்த ஊழியத்தை பெற்றிருக்க வேண்டும். அது வரும்போது, கழுகுகள் கூடியிருந்த அந்தப் பகுதி..."பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும்" என்றே கேள்விகள் இருந்தன. ஓ, அது பரிபூரணமாக இருக்கிறது. அது கேள்விக்குப் பதிலளித்தது என்று நான் நம்புகிறேன்.

### 292. சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ள ஒரு நபரில் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்தைச் சாத்தான் உபயோகிக்க முடியுமா?

121 அது ஒரு நல்ல ஒன்று, இல்லையா? ஆம், ஐயா! அப்படியானால்...அது மிக, மிக நெருக்கமாகக் கவனிக்கப்பட வேண்டும். முதலாம் கொரிந்தியர் 14:29-ல் நீங்கள் கவனிப்பீர்களேயானால், அதைக் குறித்துக்கொள்ள விரும்புகிற

நீங்கள்…பார்த்தீர்களா? இதை எழுதின அந்த நபர் தங்களுடைய பெயர்களில் கையெழுத்திடவில்லை; அவர்கள், “தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக” என்றனர். பார்த்தீர்களா? முதலாம் கொரிந்தியர் 14:29-ல், சபையில் உள்ள எந்த வரமும் முதலில் நிதானித்துக் கவனிக்கப்பட வேண்டும் என்று நாம் கண்டறிகிறோம். பார்த்தீர்களா? ஏனெனில் பொல்லாத ஆவிகள் உள்ளே நுழைகின்றன என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏனெனில் மழையானது நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் பொழிகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். கோதுமையை முதிர்வடையச் செய்ய அனுப்பப்பட்ட அதே மழை களையையும் முதிர்ச்சியடையச் செய்கிறது, அதே தண்ணீர். எத்தனை பேருக்கு அது தெரியும்? இப்பொழுது, அது சர்ப்பத்தின் வித்தை உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும், எப்படியாய் இந்தக் குமாரன் வந்தான் என்பதை. என்னுடைய நேரம் முடிவடைவதற்கு முன்னர் நான் அதை இங்கிருந்து எடுத்துப் பார்க்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன், ஆனால் என்னால் அதைக் கண்டறிய முடியவில்லை: ஆகவே, எப்படியாய் அந்தக் குமாரன் சர்ப்பத்தின் வித்தைக் குறித்ததாய் இருந்தான். பார்த்தீர்களா?

122 தேவனுக்கு ஒரு பிரமாணம் உண்டு. இப்பொழுது, இதன் பேரில், இந்த ஜீவ ஆவியின் பிரமாணத்தை நீங்கள் கவனிக்க வேண்டும், ஏனென்றால் சாத்தான் உள்ளே நுழைகிறான்.

123 பவுல், ஒருவருக்கு ஏதோ ஒரு காரியம் வெளிப்படுத்தப்பட்டபோது, அது சபைக்கு முன்பாகக் கூறப்படுவதற்கு முன்னர் குறைந்தது இரண்டு அல்லது மூன்று பேர்களால் நிதானிக்கப்பட வேண்டியதாயிருந்தது.

124 இப்பொழுது, இதையும் கூட இங்கே நான் கொண்டு வரலாம். நான் என்னுடைய…என்னுடைய சகோதரன் இன்றிரவு இங்கு இல்லை என்று நான் நினைக்கிறேன், ஆனால் யாரோ ஒருவர் கூடாரத்தை விட்டு வெளியேறி, சகோதரன் ஜூனியர் ஜாக்ஸனுடைய சபைக்குச் சென்றதைக் குறித்து கேலி செய்தார். மேலும், “அவைகள் ‘செத்த பறவைகளின்’ மத்தியில் போய்விட்டன” என்றார். அந்தவிதமான ஒரு கருத்தைக் கூற நீங்கள் வெட்கப்படவில்லையா? நீங்கள் யாராயிருந்தாலும், நீங்கள் இங்கே கிறிஸ்துவுக்குள் என்னுடைய பிள்ளையாயிருந்தால், நான் உங்களைக் குறித்து வெட்கப்படுகிறேன். அதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்யாதீர்கள். ஜூனியர் ஜாக்சன் என்னுடைய சகோதரர். டான் ரடல் என்னுடைய சகோதரர்.

125 பாருங்கள், அதற்கான காரணம் என்னவெனில், ஏனென்றால் நான் இங்கே சபையை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் அமைக்கும்போது, நான் திரும்பி வரும்போது, நான் வரங்களின் வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க, அவர்களில் பாதி பேர் அதிலிருந்து விலகிச் சென்றுவிட்டனர். ஏனென்றால் நீங்கள்

பேசத் துவங்கும்போது, அல்லது பிரசங்கிக்க அல்லது ஏதோ ஒரு காரியத்தைத் துவங்கும்போது, அது…அந்நிய பாஷைகளில் பேசுபவர், அதற்கு வியாக்கியானம் கொடுப்பவர் என யாராவது ஒருவர் இல்லாவிட்டால் பிரசங்கம் செய்வதே முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது; மேலும், அதில் பாதி கூட ஒருபோதும் நிறைவேறவில்லை.

126 இப்பொழுது, நான் அந்நிய பாஷைகளில் பேசுவதை விசுவாசிக்கிறேன். நான் வியாக்கியானத்தில் விசுவாசங்கொண்டிருக்கிறேன், ஆனால் அது நேரடியாகச் சபைக்கு ஏதோ ஒரு காரியமாய் இருக்க வேண்டும், "கர்த்தர் சீக்கிரம் வரப்போகிறார்" என்று அல்லது அதுபோன்ற ஏதாவது அல்ல—அது சரிதான். ஆனால், "அஞ்ஞானிகள் செய்கிறதுபோல, வீணான வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப உபயோகிக்காதீர்கள்" என்று இயேசு கூறினார்.

127 அது ஏதோ ஒரு காரியமாய் இருக்க வேண்டும்: "சகோதரன் *இன்னார்-இன்னார்* அவர் செய்த ஒரு குறிப்பிட்ட காரியத்தைப் போய்ச் சொல்லுங்கள், மேலும்—மேலும்…" "ஏன், சகோதரனே, சகோதரி *இன்னார்-இன்னார்* அவர்களே அன்றொரு நாள் அங்கே ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்தபோது, அவள் தன் கணவனுடைய…பொருத்தனையின் பிரமாணங்களை மீறினாள். அவள் இதைச் சரியாக—சரி செய்யாவிட்டால், பரிசுத்த ஆவியானவர் அவளைச் சங்கரித்துவிடுவார்" என்றார். அங்கே **கர்த்தர் உரைக்கிறதாவது**! என்பதை நீங்கள் பெற்றுள்ளீர்கள்.

128 அதன்பின்னர் அந்தப் பாவத்தை உள்ளே கொண்டு வாருங்கள். அனனியாவும் சப்பீராளும் உள்ளே வந்தபோது இருந்ததைப் போன்ற ஒரு சபை நமக்கு அப்பொழுது உண்டாயிருந்ததைப் போன்றே இருக்கும். அதன்பின்னர் உறுதியாய் நிற்கும் ஒரு சபையை நாம் பெற்றுள்ளோம்.

"ஓ," நீங்கள், "சகோதரன் பிரான்ஹாம்…" என்று கூறலாம். ஒரு நபரிடம், நான் அதை அவனிடம் கூறினேன்; அதற்கு அவன், "பாருங்கள், நீங்கள் எங்களை மிகவும் சிக்கலில் ஆழ்த்திவிட்டீர்கள்" என்றான்.

129 மேலும் நான், "நான் என்னுடைய வாழ்க்கையில் ஒருபோதும் கண்டிராத அந்நியர்களிடம் சிரமமான சூழ்நிலையில் நான் இருக்கவில்லையா? ஆனால் இதைச் செய்ய என்னை அனுப்பின என் தேவனில் எனக்கு விசுவாசமும், நம்பிக்கையும் உண்டு, ஒரு முறை கூட அது தவறாக இருந்ததில்லை அல்லது அது தேவனாக இருக்கும் வரை அது ஒருபோதும் தவறாக இருக்காது" என்று கூறினேன். அது உண்மை.

130 அந்நிய பாஷைகளில் பேசுவது போன்ற காரியங்கள் அல்ல… அந்த அந்நிய பாஷைகளும், அந்த வரங்களைப் பெற்ற மக்களும்,

அவர்கள் உண்மையான அசலான கிறிஸ்தவர்களாயிருந்து, அதில் ஆர்வங்கொண்டிருந்தால், அவர்கள் தங்களை ஒன்று சேர்த்து, ஏனென்றால்...தேவனுடைய இராஜ்ஜியத்தை உயர்த்த அவர்கள் என்ன செய்ய முடியும் என்று பார்க்கும்போது, தங்களுடைய பாஷைகளையும், வியாக்கியானங்களையும் கூறுவார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் தங்களுக்கென ஒரு ஊழியத்தை வைத்துள்ளனர், ஆனால் அது இங்கே பாவிகளோடு இடைபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கிற, அது போன்ற கூட்டத்தின் மத்தியில் அல்ல. வேதம், "நீங்கள் படிப்பறியாதவர்கள் என்று அவர்கள் கூறுவார்கள்" என்று கூறியுள்ளது.

131 சில சமயங்களில் அவர்கள் அதை மிகவும் மரியாதையற்ற முறையில் கையாளுகிறார்கள், மற்றும்—மேலும் பல... எங்களுடைய குழு அவ்வாறு செய்யவில்லை, ஆனால் நான் அவர்களைச் சிறிது நேரம் செல்ல அனுமதித்தேன். நான், "அதைக் கவனியுங்கள்" என்றேன்.

132 இப்பொழுது, நான் சகோதரர்களிடத்தில் கூறினேன் (இங்கே இதைச் சாட்சிகள் அறிந்திருக்கிறார்கள்), நான், "அதை விட்டுவிடுங்கள். அது தேவனால் உண்டானதா அல்லது இல்லையா என்பதை சிறிது நேரம் கழித்து நான்—நாம் கண்டறிவேன். அது சிட்சையை சகிக்க முடியவில்லையென்றால், அப்பொழுது அது ஒரு இழிவான பிள்ளையாயிருக்கும்" என்றேன். சரியாக அதைத்தான் வேதம் கூறியுள்ளது. தண்டனை வந்தபோது, என்ன சம்பவித்தது? நான் அதை நீண்ட காலத்திற்கு முன்பே உங்களிடம் கூறினேனா? பார்த்தீர்களா? இங்குள்ள போதகரைக் கேளுங்கள்.

அவர், "*இதை* மற்றும் *அதைக்* குறித்து என்ன?" என்று கேட்டார்.

133 நான், "அதை அப்படியே விட்டுவிடுங்கள்! அவர்கள் குழந்தைகளாயிருக்கிறார்கள். நம்மால் அதை நியாயந்தீர்க்க முடியாது, ஆனால் அது உண்மையாகவே வார்த்தையோடு உறுதியாய் பதிந்து வரும்பொழுது கவனியுங்கள்" என்றேன்.

134 இப்பொழுது, சகோதரன் ஜூனியர் ஜாக்ஸன் அவர்கள் அதனோடு இணங்காமல் இருக்க உரிமை உண்டு. அவர் தன்னுடைய சபையை விரும்புகிறார்...ஜனங்களெல்லாரும் கூட்டத்தில் அந்நிய பாஷைகளில் பேசவும், மற்ற காரியங்களையும் விரும்புகிறார்கள். அதுதான் சகோதரன் ஜூனியரின் தொல்லைகள்; அது—அது அவரைப் பொறுத்ததாகும். ஆனால் ஜூனியர் ஜாக்ஸன் இந்தச் செய்தியை...நம்மில் எவரும் விசுவாசிப்பது போலவே விசுவாசிக்கிறார். அவர் நம்மில் ஒருவர். அங்கே செல்வதற்கு அது ஒரு "செத்த பறவை" அல்ல. ஜூனியர் ஜாக்ஸன் ஒரு தேவனுடைய மனிதன், நான் என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன். இன்றிரவு இங்கில்லை, எனவே நான் விரும்புகிற விதத்தில் அதை உண்மையாகவே வெளிப்படுத்த முடியும்.

135 மேலும்—மேலும் டான் ரடல்…டான் இன்றிரவு இங்கில்லை என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் அவர்கள் தங்களுக்கென ஒரு சபையை வைத்துள்ளனர். ஆனால் இந்தக் கூடாரத்திற்கு வரும் ஒவ்வொரு நபரையும் நான் கண்டால், வெளியே நடந்து சென்று டான் ரடல் அல்லது—அல்லது சகோதரன் ஜே.டி.பார்னெல் அல்லது சகோதரன்…இங்குள்ள நம்முடைய சகோதரர்கள், இராஜ்ஜியத்தின் சக குடிமக்கள், நான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதிருப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியாயிருப்பேன். நான், "கர்த்தாவே, இந்த ஒன்றை மீண்டும் நிரப்பும். நாங்கள் அதை ஊற்றி, மற்றொன்றை நிரப்புவோம்" என்பேன். நான் அதை விரும்புவேன். நான் அந்தப் பையன்களைக் காண விரும்புகிறேன்… அவர்கள் என்னுடைய—அவர்கள் என்னுடைய பிள்ளைகள்.

136 இப்பொழுது, ஜே.டி. அல்லது—அல்லது அவர்களில் எவருமே என்னைப் போல விசுவாசிக்க வேண்டியதில்லை; அவர்கள் அதைச் செய்ய வேண்டியதில்லை. நான் இந்தக் காலையில் உங்களிடம் கூறினதுபோல, நான் என்னுடைய மனைவியோடு கூட இணங்குகிறதில்லை அல்லது அவளும் என்னோடு இணங்குகிறதில்லை. நான் மேஜையண்டை சென்றபோது, ஜூனியர் ஆப்பிள் பணியாரத்தையும், நான் செர்ரி பணியாரத்தையும் வாங்கினால் எப்படியிருக்கும். சகோதரனே, நாங்கள் இருவரும் பணியாரத்தையும் புசித்துக் கொண்டிருக்கிறோம், நாங்கள் அதை ஒப்புக்கொள்வோம், ஆனால்…நாங்கள் இருவரும் ஒரே சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறோம். அவருடைய சபை ஒழுங்குமுறை…

137 நீங்கள் அறிவீர்கள், பேதுருவுக்கும் பவுலுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தன, அது அவர்களின் உபதேசங்களில் அல்ல, ஆனால் பேதுரு நடந்துகொண்ட விதத்தில்தான். அவர்களுக்கு அதில் ஒரு—ஒரு சிறிய வித்தியாசம் இருந்தது, ஆனால் அது அவர்களை ஒருபோதும் பிரிக்கவில்லை. அவர்கள் சகோதரர்களாயிருந்தனர். ஏன், நிச்சயமாக நமக்கு வேறுபாடுகள் இருக்கப் போகிறது, வேறுபாடுகள் அல்ல…நான் அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபையுடன் இணங்கவில்லை. நான் அவர்களுடைய முறைமைகளோடு இணங்கவில்லை, ஆனால் அசெம்ப்ளிஸ் ஆஃப் காட் சபையில் விலையேறப்பெற்ற சகோதரர்கள் அநேகர் இருகிறார்கள். ஒருத்துவக் கோட்பாட்டோடு நான் உடன்படவில்லை, ஆனால் அந்த மனிதர்களில் அநேகர் விலையேறப்பெற்ற மனிதர்களாயிருக்கிறார்கள்.

138 நான் உடன்படுகிறேன்…பாப்டிஸ்டுகளுடனும், பிரஸ்பிடேரியன்களுடனும், அவர்களுடைய முறைமைகளுடனும் இணங்கவில்லை, ஆனால் அங்கே, உண்மையான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

139 எப்படியோ இந்தப் பிற்பகல் எனக்கு ஒரு தந்தி வந்தது. நான்

அதைத் தவற விட்டுவிட்டேன். பாப்டிஸ்ட் போதகரான, ஒரு சகோதரர், மனிதர்கள் ஒருவரையொருவர் மதிப்பதற்குப் பதிலாக, தேவனை மதிக்கும் ஓர் இடத்திற்கு வர...அல்லது அந்த இடத்தை அடைய...தான் நீண்ட காலமாகத் தேடிக்கொண்டிருப்பதாகக் கூறினார்.

140 ஒரு விலையேறப்பெற்ற சகோதரன் இந்தச் சபைக்கு வந்து, “நான் உங்களை அப்படிப்பட்ட ஒரு இடத்திற்கு கொண்டு செல்வேன்” என்றார். ஒரு பாப்டிஸ்ட், அவர் இங்கு வர ஏங்கிக்கொண்டிருந்தார். நீங்கள் பாருங்கள், அவர்கள் எங்கும் சிதறியிருக்கிறார்கள். நான் அவர்களுடைய முறைமையோடு இணங்கமாட்டேன், ஆனால் நான் நிச்சயமாக நேசிக்கிறேன்...?...எனவே சகோதரர்களைக் குறித்து அப்படிக் கூறாதீர்கள்.

141 இப்பொழுது இங்கே, இந்த வரங்கள்...கவனிக்கப்பட வேண்டும். எந்த வெகுமதியும் இல்லை...அதைக் கவனிக்க வேண்டும். சாத்தான் போலியான எந்த வரத்தையும் பாவனை செய்ய முடியும். இப்பொழுது இந்தப் பீட்டில்ஸ் பாடல்கள் தெய்வீக சுகமளித்தலை பாவனை செய்யப்போவதைப் பாருங்கள்: அசுத்தமான, அழுக்கான, அழுகிப்போன, நரகத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டன. பார்த்தீர்களா? சரி.

**293. தானியேல் அக்கினி சூளையில் நான்காவது மனிதனாயிருந்தானா, ஏனென்றால் அவன் அக்காலத்தில் தீர்க்கதரிசியாயிருந்தானா?**

142 இல்லை, அது இயேசுவாயிருந்தது. நான்காவது மனிதன்... தேவனுடைய குமாரனைப் போன்றிருந்தார். அது தீர்க்கதரிசி என்று நான் நினைக்கவில்லை, ஏனென்றால் அவன் சிங்கங்களின் கெபியில் இருந்தான்; ஆனால் தானியேல் அக்கினிச் சூளையில் இருந்தான் என்பதை என்னால்—நான் நம்பமாட்டேன். என்னால்—என்னால் முடியவில்லை...இப்பொழுது, நீங்கள் சரியாக இருக்கலாம், ஆனால் அது என்னுடைய கருத்தாகும்.

**294. சகோதரன் பிரான்ஹாம், ஆதியாகமம் 6-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில், மாம்சமான யாவரும் அவர்களுடைய வழியைக் கெடுத்துக்கொண்டர் என்று தேவன் கூறினார். இது விவாகரத்து மற்றும் விவாகத்தை குறிப்பிடுகிறதா? அப்படியென்றால், மத்தேயு 24, வசனம் 38 மற்றும், 39-ல், “நோவாவின் நாட்களில் இருந்தது போலவே, மனுஷகுமாரன் வெளிப்படும்போது இருக்கும்” என்று இயேசு கூறியபோது, இதே காரியத்தைத்தான் குறிப்பிட்டாரா?**

**295. சகோதரர் பிரன்ஹாம், இந்தப் பூமியில் கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியின்போது...அதாவது, அந்த ஆயிர வருட ஆட்சியின்போது பிள்ளைகள் பிறப்பார்களா? அல்லது அந்தக் காலத்தில் பூமியில் ஏதேனும் அடையாளம்...ஏதேனும்**

**பாவம்** (என்னை மன்னிக்கவும்) **இருக்குமா; அந்த நேரத்தில் மாம்சப்பிரகாரமான சரீரங்களை உடைய ஜனங்கள் பூமியில் இருப்பார்களா?**

143 நான் அவைகளின் மூலம் துரிதமாக ஆராய முயற்சிப்பேன். இப்பொழுது, ஆதியாகமம் 6-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில், மாம்சமான யாவரும் கெடுத்துக் கொண்டிருந்ததாகத் தேவன் கூறினார்...ஆம், அது விவாகம், விவாகரத்து மற்றும் மற்ற காரியமாயிருந்தது. வேதம், “நோவாவின் நாட்களில் நடந்தது போல, அவர்கள் எப்படி விவாகம் செய்து, பெண் கொடுத்தனர்” என்று அது போன்ற பலவற்றைக் கூறியுள்ளது. அது கடைசி காலத்தின் அடையாளங்களில் ஒன்றாகும், வெறும் ஒரு அடையாளம் மட்டுமே.

144 இப்பொழுது, உலகம் இதை மட்டுமே செய்து கொண்டிருந்தால், அந்நிய பாஷைகளில் பேசுவதை பரிசுத்த ஆவியின் அத்தாட்சி என்று என்னால் கூற முடியாததைப் போல, அதையும் கடைசி காலத்தின் அத்தாட்சி என்று என்னால் கூற முடியாது. விவாகமும், விவாகரத்தும் நோவாவின் காலத்தில் இருந்தது போன்றே மாறும் ஒரு காலம் வரும் என்பது உண்மைதான், ஆனால் அதனுடன் தொடர்புடைய வேறுபல காரியங்களும் உள்ளன; இது அடையாளங்களில் ஒன்று மட்டுமே.

145 அந்நிய பாஷைகளில் பேசுதல் பரிசுத்த ஆவியின் அடையாளங்களில் ஒன்றாகும், ஆனால் பரிசுத்த ஆவியின் பிழையற்ற அடையாளம் அல்ல, ஸ்திரீகளும், புருஷர்களும் விவாகம் செய்துகொண்டு, விவாகரத்து செய்துகொண்டு, மறுபடியும் விவாகம் செய்துகொள்வதைக் காட்டிலும் அதிகமாக இல்லை. அது மாத்திரம் அடையாளமாயிருக்காது. அந்த ஒன்று மாத்திரம் இருந்திருந்தால், என்னால் அதை அவ்வாறு அழைக்க முடியாது. பார்த்தீர்களா? அந்நிய பாஷைகளில் பேசுதல் அல்லது அதைத் தேவனாக்குவதற்கு மற்றெந்த வரத்தோடும் மற்ற காரியங்களும் பொருந்த வேண்டும்.

146 இப்பொழுது, “ஆயிர வருட அரசாட்சியின்போது பிள்ளைகள் பிறக்குமா?” அன்றொரு நாள் நான் உங்களிடம் கூறினேன், என் மனதில் இருந்த அந்தக் கேள்விதான் அது. எனக்குத் தெரியாது. அது முழுவதுமாக அது இருக்கக் கூடியதைப் போன்றே காணப்படுகிறது; அது முழுவதுமாக அது இருக்க முடியாதது போன்றே காணப்படுகிறது. எப்படி இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்தவரை நான் உங்களுடன் நேர்மையாக இருக்கப் போகிறேன். இதுவரைக்கும் எனக்குத் தெரியாது. தேவன் அதை எப்போதாவது வெளிப்படுத்துவாரானால், நான் உங்களுக்குக் கூறுவேன். ஆனால் காத்திருங்கள்; அது தேவனிடத்திலிருந்து வர வேண்டும். நீங்கள் என்னுடைய பிள்ளைகள். நான் உங்களிடம்

கூறமாட்டேன். இருக்குமா அல்லது இருக்காதா என்று எனக்குத் தெரியாது. என்னால் சொல்ல முடியாது.

147 "அல்லது அந்த நேரத்தில் பூமியில் பாவம் இருக்குமா?" இல்லை! பூமியில் பாவமே இருக்காது. சாத்தான் கட்டப்பட்டிருக்கிறான்.

148 "அந்த நேரத்தில் ஜனங்கள் மாம்ச சரீரங்களை உடையவர்களாயிருப்பார்களா?" ஆம், ஐயா! ஆயிரம் ஆண்டுகளுக்கு, நமது மகிமைப்படுத்தப்பட்ட சரீரம் இங்கேயே பூமியில் இருக்கும், நாம் இப்போது வாழ்வதைப் போலவே உண்டு, குடித்து, வீடுகளைக் கட்டி, மற்றும்—மற்றும்—மற்றும் இன்னும் வாழ்ந்துகொண்டிருப்போம். அது—அது மணவாளனுக்கும், மணவாட்டிக்குமான தேனிலவு.

**296. சகோதரன் பிரான்ஹாம், இயேசு சொன்ன மத்தேயு 12, வசனம் 32-ல் இயேசு என்ன அர்த்தப்படுத்தினார், "பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசுகிறவன் எவனுக்கும் இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை" என்று கூறினீர்களா? இந்த வேத வசனங்களை எனக்காகத் தயவு கூர்ந்து விளக்கிக் கூறுங்கள். உங்களுக்கு நன்றி**. அதில் புருஷனுடைய பெயர் உள்ளது; அவர் ஒரு ஊழியக்காரர். சரி.

149 சகோதரனே, நான்...நீங்கள் ஒரு வேத பண்டிதர், நான் ஒரு வேத பண்டிதர் அல்ல. ஆனால் நான் இதைக் கூற விரும்புகிறேன், அதாவது இயேசு, "பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறவன் எவனோ, அது அவனுக்கு மன்னிக்கப்படமாட்டாது" என்றார். வேறு வார்த்தைகளில் கூறினால், மற்ற வேதவாக்கியங்களுடன் இதைக் கூறினால், "மனுஷனுக்கு எல்லாவிதமான பாவமும் மன்னிக்கப்படும், ஆனால் பரிசுத்த ஆவியைத் தூஷிக்கிறதோ மனுஷருக்கு மன்னிக்கப்படாது." பரிசுத்த ஆவியைத் தூஷித்தல் என்பது பரிகாசம் செய்வதும், பேசுவதும், பரிகசிப்பதும், நீங்கள் சரியானதற்கும் தவறானதற்கும் இடையேயுள்ள கோட்டைக் கடக்கும்போது, அதைப் போன்ற ஒரு காரியத்தை நீங்கள் செய்கிறீர்கள்.

150 இப்பொழுது, நீங்கள் பரிசுத்த ஆவியைக் கண்டால்... உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, தமக்கே உரிய விதத்தில் பகுத்தறிந்தால் என்ன, அது பரிசுத்த ஆவியாக இருந்து, அது பரிசுத்த ஆவி என்று நீங்கள் விசுவாசிக்கவில்லையென்றால், நீங்கள் வெளியே சென்று அதைக் குறித்து பரிகசித்து, அதைக் குறித்து பேசினீர்கள்; நீங்கள் என்ன செய்தாலும் எனக்குக் கவலையில்லை, நீங்கள் முடிந்துவிட்டீர்கள். உங்களால் அதைச் செய்ய முடியாது. நீங்கள் தேவனால் உண்டானவர்கள் அல்ல என்பதையே அது நிரூபிக்கிறது, ஏனென்றால் தேவனுடைய வித்து மனிதனுக்குள் தரித்திருக்கிறது, அவனால் பாவம் செய்ய முடியாது. பாவம்

என்றால் என்ன? அவிசுவாசம். வார்த்தை வெளிப்படுவதை அவன் காணும்போது, அவன் அதை விசுவாசிப்பான். அவனால் மாத்திரமே முடியும்…

151 பாருங்கள், ஒரே ஒரு பாவம், ஒரே ஒரு பாவம் தான் உண்டு. எத்தனை பேருக்கு அது தெரியும்? அது அவிசுவாசம். அது உண்மை. விபச்சாரம் செய்வது ஒரு பாவமல்ல. சிகரெட் புகைப்பது, பொய் சொல்வது, அசிங்கமான வார்த்தைகளைப் பேசுவது இவை பாவமல்ல. அவைகள் அவிசுவாசத்தின் தன்மைகளாகும். நீங்கள் அதைச் செய்கிறீர்கள், ஏனென்றால் நீங்கள் ஒரு விசுவாசி அல்ல. அது உண்மை. எனவே, பாருங்கள், ஒரே ஒரு பாவம் மாத்திரமே உண்டு, அது அவிசுவாசமாயுள்ளது. "விசுவாசியாதவனோ ஏற்கனவே ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று." அவன் என்ன செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் சரி, அவன் துவக்கத்திலேயே ஆக்கினைக்குட்படுத்தப்படுகிறான். சரி.

**297. சகோதரன் பிரான்ஹாம், ஒரு வாலிப விவாகமாகாத— விவாகமாகாத (என்னவென்று கூறவில்லை) பெண்** (யார் என்று சொல்லவில்லை) **அவளுடைய…அவர்களுடைய தலைமுடியை வெட்டிக்கொள்வது தவறா?** அது ஒரு பெண்ணாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

152 ஆம்! ஆம், எந்த ஒரு ஸ்திரீயும் தன்னுடைய தலைமுடியை கத்தரித்துக் கொள்வது தவறானது.

அது ஒரு சிறிய குறுகிய கேள்வி. உங்களுக்கு—உங்களுக்குத் தூக்கம் வந்துகொண்டிருக்கிறதா? சரி, நம்மால் முடிந்தளவு துரிதமாக நாம்—நாம் பார்ப்போம். நான் அந்தச் சர்ப்பத்தின் வித்தை பெற மிக ஆவலாக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

**எங்களுடைய மகனுக்காக ஜெபியுங்கள்…**

அது ஒரு ஜெப வேண்டுகோள். நான் இவைகளை எடுத்துக்கொண்டு ஓடினேன், அவ்வளவுதான்…

**298. சகோதரன் பிரான்ஹாம், பெண்கள் ஆரோக்கியமான கணவனும், பிள்ளைகளும் இருக்கும்போது, பொது விவகாரங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்களா? நான் இந்தக் கேள்வியை வேறு யாரோ ஒருவருக்காகக் கேட்கிறேன்.**

153 பாருங்கள், அதைக் குறித்து எனக்குத்—எனக்கு—எனக்குத்— எனக்குத் தெரியாது. என்னால் கூற முடியாது. ஆனால் எனக்கு— எனக்கு இந்த உணர்வு உண்டு. நான் இதைக் கூறட்டும்: நான் ஒரு—ஒரு ஸ்திரீயாக இருந்து, என்னுடைய கணவர் ஆரோக்கியமாகவும், ஒரு நல்ல வேலையில் வேலைசெய்து கொண்டிருக்கிறார் என்று எனக்குத் தெரிந்திருந்தால், வீட்டிலேயே தங்கியிருப்பது, என் பிள்ளைகளைக் கவனித்து…மேலும்— மேலும்—மேலும் என் பிள்ளைகளைக் கவனித்து அவர்களை வளர்த்து, கர்த்தரிடத்தில் அன்பு கூரச் செய்வது எனக்கு ஒரு—

ஒரு மகத்தான மகிழ்ச்சியாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் துவைக்க வேண்டியதிலிருந்தும், செய்ய வேண்டிய காரியங்களிலிருந்தும் எனக்குச் சிறிது நேரம் கிடைத்தால், என் பிள்ளைகளுக்குக் கர்த்தருக்கு எப்படிச் சேவை செய்வது என்று கற்றுக் கொடுப்பேன் என நான் நினைக்கிறேன்.

154 இப்பொழுது, நீங்கள் ஒரு—ஒரு கடனைப் பெற்றிருந்தால் அல்லது உங்களுடைய கணவருக்கு அதைச் செலுத்த நீங்கள் உதவி செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தால், அல்லது ஏதோ ஒன்று நீங்கள் அதைச் செய்ய வேண்டியதாயிருக்கும்…பாருங்கள், நீங்கள் அவருக்கு உதவி செய்ய முயற்சித்தால் அது அருமையானது என்று நான் நினைக்கிறேன். மேலும்—மேலும் நீங்கள் ஒரு பெண்மணியாக ஜீவிக்கிறீர்கள். அது கடினமானது என்று நான்—நான் நினைக்கிறேன். நல்ல புரிந்துகொள்ளுதலைக் கொண்ட எந்த மனிதனும் தன்னுடைய மனைவி ஒரு கூட்டத்திற்குள் நுழைவதை விரும்புவதில்லை, அங்கே ஒரு கூட்ட இழிவான, அசுத்தமான மனிதர்கள் மற்றும் அதைப் போன்ற காரியங்கள் உள்ளன. ஆனால் அந்தப் பெண் அதில் ஈடுபட வேண்டியிருந்தால், அவள் ஒரு உண்மையான, நம்பகமான கிறிஸ்தவப் பெண் என்பதையும், நம்பிக்கைக்குரிய பெண் என்பதையும் அவளுடைய கணவர் தெரிந்துகொள்ள வேண்டும்…என்று நான் நினைக்கிறேன்.

155 ஆனால் இப்பொழுது, அவள் வேலை செய்யக் கூடாது என்று கூறுவது, எனக்குத்—எனக்குத் தெரியாது. பாருங்கள், அதை ஆதரிக்க எந்த வேதவாக்கியமும் இல்லை. நான்—நான் அந்தக் கருத்தை அப்படியே கூறிக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு பெண் வேலை செய்ய விரும்பினால், அவள் வேலை செய்ய விரும்பினால்…

156 இப்பொழுது, இந்த எல்லா வர்த்தக புருஷர்களும் உள்ள இந்த அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள்…அவர்கள் தொடர்ந்து அசுத்தமான கேலிப் பேச்சுகளைக் கூறிக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு அருமையான, சுத்தமான ஸ்திரீ அங்கே உட்கார்ந்து கொண்டிருக்க, இந்தவிதமான அருவருப்பான அசுத்தமான காரியங்கள் எல்லாம் கூறப்படுகின்றன, நான்—நான் அதற்கு எதிரானவன். அப்படிப்பட்ட காரியங்களிலிருந்து நீங்கள் வெளியே வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

157 ஆனால் இப்பொழுது, ஒரு பெண் தன்னை ஒரு—உண்மையான பெண்மணியாக வைத்திருக்க முடிந்து பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதற்காகச் சில ஆடைகளை வாங்குவதற்கு அவளுடைய கணவருக்கு ஏதாவது உதவி செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தால், அல்லது—அல்லது ஒரு கட்டணத்தைச் செலுத்த, அல்லது அதைப் போன்ற ஏதோ ஒரு காரியம், அது முடியும் வரை அவள் வேலை செய்ய விரும்பினால்…இப்பொழுது, இது கர்த்தர் அல்ல, ஏனெனில் இதற்கான வேதவாக்கியம் என்னிடம் இல்லை. அது என்னுடைய

கருத்தாய் இருக்கும் என்று நான் கூறிக்கொண்டிருக்கிறேன்; ஆனால் மற்றபடி, அவள் சும்மா சுற்றித் திரிவதற்காகவோ, அல்லது செலவு செய்ய அதிகப் பணம் சம்பாதிப்பதற்காகவோ, மதுக்கூடங்களுக்கு ஓடித் திரிவதற்காகவோ, அல்லது குடித்து, புகைத்து, அட்டூழியம் செய்வதற்காகவோ வேலை செய்ய விரும்புகிறாள் என்பதற்காக மட்டும் அவள் அதைச் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கமாட்டேன். அவள் வீட்டில் தரித்திருந்து, ஒரு பெண்மணியாக இருக்க முயற்சிக்க வேண்டும், அவளுடைய வீட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**299. இயேசு ஒரு நொடியில்...**(இல்லை!) **இயேசு...இரண்டாம் விவாகத்தில் இரு சாரரும் விவாகரத்து செய்து கொண்டால்...அது...(ம-ன-ந்- தி-ரு-ம்...) மனந்திரும்புதல்... மனந்திரும்புதல் போதுமா, அல்லது நீங்கள் முடிவுகட்ட வேண்டுமா, அல்லது, நீங்கள் சொல்வது சரி என்று நிரூபிக்க உங்கள் திருமண உறவை முறித்துக் கொள்ள வேண்டுமா?**

"ஒருவேளை—ஒருவேளை நீங்கள் இரண்டாவது திருமணம் செய்துகொண்டு, அதில் இருவருமே விவாகரத்து பெற்றிருந்தால்..." அதற்கு நான் ஏற்கனவே பதிலளித்துவிட்டேன் என்று நினைக்கிறேன். பார்த்தீர்களா? ஆம், அதற்கு ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் இருக்கும்போது—இருக்கும்போது...எனக்கு...

158 ஜனங்களே, நாம் இந்தக் காரியங்களினூடாகச் செல்லாமல் இருந்திருக்கலாம் என்று நான்—நான் விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த சில நண்பர்கள் இங்கே, இந்தக் கூட்டத்தில் அமர்ந்துள்ளனர்...அதைக் கூறுவது கிட்டத்தட்ட என்னைக் கொல்லுகிறது, ஆனால் நான்—நான் அதைக் கூற வேண்டும். பார்த்தீர்களா? உலகம் அப்படிப்பட்ட ஒரு மிகவும் சீரழிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

159 ஏதோவொரு பரிதாபகரமான, வயதான பெண்மணி தவறுதலாக ஒரு குடிகாரனைத் திருமணம் செய்து கொள்கிறாள்—அவர்கள் அந்த வழியில் செல்கிறார்கள், அல்லது ஏதோவொரு பரிதாபகரமான ஆண், தனக்குத் தெரியாமலேயே ஒரு விபச்சாரப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான், பின்னர் அவன் வாழும் காலம் முழுவதும் அந்தப் பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ கட்டுப்பட்டிருக்க வேண்டும். அது ஒரு பயங்கரமான காரியம். விவாகம் என்பது ஒரு புனிதமான காரியம்.

அநேக சமயங்களில் பாவியான பிள்ளைகள் ஓடி வந்து, அந்தக் காரியங்களைச் செய்கிறார்கள், அப்பொழுது அவர்கள் அதைக் குறித்த எல்லாவற்றையும் குறித்து ஆச்சரியப்படுகிறார்கள். நான்—அது...இந்த விவாகம் மற்றும் விவாகரத்து எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கக் கர்த்தர் என்னை அனுமதிப்பாரானால், அது

அநேக காரியங்களைத் தெளிவாக்கிவிடும் என்று நான் நம்புகிறேன். இவை யாவும்…[ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]

**300. நாங்கள் பார்க்கிறோம்…நாங்கள் ஏன் எங்களுடைய வீட்டை விற்க முடியவில்லை? உங்களுக்கு நன்றி. நாங்கள்…பி.கு. நாங்கள் அதை விற்க, ஜெபித்து, உபவாசம் இருந்துள்ளோம், ஆனாலும் எந்தப் பலனும் இல்லை.**

160 சரி இப்பொழுது, சகோதரனோ அல்லது சகோதரியோ (அவர்கள் தங்களுடைய பெயரைக் கையொப்பமிடுவதில்லை), ஆனால் அது யாராயிருந்தாலும், இப்பொழுது, நீங்கள் உங்களுடைய சொத்தை விற்க முயற்சித்துக் கொண்டிருந்தால், நீங்கள் அதைச் செய்திருந்தால்…நீங்கள் அதை விற்க விரும்புகிறீர்கள், ஒருவேளை மேலும் சிலவற்றை வாங்கவோ, அல்லது நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ எனக்குத் தெரியவில்லை. உங்களுடைய குறிக்கோள் சரியாக இருக்குமானால், நீங்கள் ஒரு வீட்டை வாங்க முயற்சிக்கிறீர்கள்…உங்களுக்குப் பிள்ளைகளோ அல்லது அதைப் போன்ற ஏதோ ஒரு காரியமோ இருந்தால், நீங்கள் அவர்களுக்கு ஒரு மேலான வீட்டை அல்லது ஏதோ ஒன்றை…அது எதைக் குறித்தது என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் இதைக் கூறுவேன்: நீங்கள் அதை விற்க முயற்சித்து, உபவாசித்து, அதை விற்க முயற்சித்துக்கொண்டிருந்தால், அப்பொழுது அதைக் கர்த்தரிடத்தில் அர்ப்பணித்து, அதைக் குறித்து மறந்துவிடுங்கள். பார்த்தீர்களா? ஏனென்றால் அது தேவனாக இருக்கலாம்…நீங்கள் வேறு எங்காவது குடிபெயர்ந்து செல்லலாம், அது சரியானதாயிராமல் இருக்கலாம். பார்த்தீர்களா?

161 நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து, கர்த்தரில் நம்பிக்கைக் கொண்டிருந்தால், ஏனெனில் நீங்கள் நிச்சயமாக அவ்வாறே இருக்க வேண்டும், இல்லையென்றால் நீங்கள் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருக்கமாட்டீர்கள். பார்த்தீர்களா? எனவே நான் அதைக் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிடுவேன். “இப்பொழுது, கர்த்தாவே, நாங்கள் அதை விற்பதற்கான உமது வேளை வரும்போது, நீர் வாங்குபவரை அனுப்பும்” என்று கூறுங்கள். அதன்பின்னர் அது கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, அதிலிருந்து உங்களுடைய முயற்சியை விட்டுவிட்டு, தொடர்ந்து செல்லுங்கள். அது கிரியை செய்யும் என்று நான் நம்புகிறேன். நான் இங்கே ஒருவிதமாக வேகத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறேன், ஏனென்றால் எனக்கு நேரமில்லை.

**301. சகோதரன் பிரான்ஹாம், ஒரு பெண் தன்னுடைய தலைமுடியை சுருட்டுவது தவறா?**

162 நான் அதற்குப் பதில் கூறிவிட்டேன். நிச்சயமாக, நான் கவலைப்படவில்லை, அதை நீளமாக வைத்திருந்தால் போதும். புரிகிறதா? நான்…உங்களுக்குத் தெரியும்…

பெண்களாகிய உங்களுடன் “கேலியாக” இருக்க வேண்டும் என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை. பார்த்தீர்களா? அது உத்தமமாயுள்ளது. நீங்கள்—நீங்கள்—நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்கள், நீங்கள் என்னிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் என்மேல் நம்பிக்கை வைத்திருங்கள், இல்லையென்றால் நீங்கள் அதை என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கமாட்டீர்கள். இப்பொழுது, சகோதரியே, நான் உங்களிடம் கூறுவதை, நீங்கள் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன் என்று, உங்கள்மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

163 அதை என்னால் வேதத்தோடு ஆதரிக்க முடியாது. நீங்கள் விரும்பினால்…நீங்கள் அழகான, சுருள் முடியை உடையவராயிராமல், நீங்கள் ஒரு பெண்ணாயிருந்தால், நீ உன்னுடைய கணவனுக்காகவோ, உன்னுடைய ஆண் நண்பனுக்காகவோ அல்லது அதைப் போன்ற ஏதோ ஒரு காரியத்திற்காகவோ அழகாக இருக்க விரும்புகிறீர்கள், உங்களுடைய தலைமுடியை சுருட்டிக் கொள்வது அல்லது—அல்லது அதற்கு அவர்கள் என்ன பெயர் வைத்துள்ளனர்? அதற்குச் சாயம் பூசுவது அல்லது வேறு ஏதோ ஒன்றைக் குறித்து நான்—நான் உங்களிடம் கூற முடியாது. நான்—நான் அதைக் குறித்து கூறுவதற்கு ஒன்றுமில்லை; அது உங்களைப் பொறுத்தது. நீங்கள் பார்த்தீர்களா? நான்—நான்…நீங்கள், இடையில்…என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கர்த்தரிடத்தில் கேளுங்கள், அவர்—அவர் அதை உங்களுக்குக் கூறுவார், ஏனென்றால் நான்—நான் வேதவாக்கியங்களைக் கொண்டு காரியங்களை விளக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். பார்த்தீர்களா?

### 302. முதலாம் கொரிந்தியர் 13:8-12 வசனங்களைத் தயவு கூர்ந்து விளக்கிக் கூறுங்கள். இப்பொழுது சபைக்குப் பரிபூரண வார்த்தை திரும்ப அளிக்கப்பட்டிருக்கும் இந்த வசனங்கள் நிறைவேறியுள்ளனவா?

164 இப்பொழுது, நான் அதைக் குறித்துக் கூறினேன் என்று நான் நினைக்கிறேன், நான் அவ்வாறு கூறவில்லையா? “நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.” பவுல், “நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும், இவை அனைத்தையும் நான் செய்தாலும்… ஆனால் நிறைவானது வரும்போது…” என்றான். இப்பொழுது, தேவனைத் தவிர வேறு நிறைவு உண்டா? இல்லை, ஐயா! தேவன் பரிபூரணமானவரா? *ஆதியிலே இருந்தது* [சபையோர், *“வார்த்தை”* என்கின்றனர்.—ஆசி.] *அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.* வார்த்தை இன்னமும் தேவனாய் இருக்கிறது. பார்த்தீர்களா? சரி. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

**303. சகோதரன் பிரான்ஹாம், தட்டையான தலைமுடியைக் கத்தரித்துக் கொள்வது தவறா?**

165 இது ஒரு மனிதன் என்று நான் யூகிக்கிறேன்—நான் யூகிக்கிறேன்; அப்படித்தான் இருக்கும் என்று நான்—நான் நம்புகிறேன். சரி இப்பொழுது, சில பெண்கள் அதைச் செய்கிறார்கள். நிச்சயமாக. நான் இங்கே மாநில விளையாட்டு கண்காணிப்பாளராக இருந்தபோது, ஒரு சமயம் நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். இங்கே மேலே போகிறது…நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன், ஒரு மனிதன் அந்தவிதமாக ஒரு பற்றவைப்பாளரின் தொப்பியை அணிந்திருந்தான், நான் அவனிடத்தில் பேசிக்கொண்டிருந்தேன். மேலும் அவன் ஒரு பற்றவைப்பாளரின் கண்ணாடியை அப்படி மேலே தள்ளியபடி, சிகரெட் புகைத்துக்கொண்டிருந்தான். செல்லர்ஸ்பர்க் சுற்றுப்புறத்தில் இங்கேயேதான் இருந்தது. நான் அங்கே அமர்ந்து அந்த நபரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவன் அங்கே ஏதோ ஒன்றைக் கூறினான், நாங்கள் எல்லோரும் சிரித்தோம்; நான் அவனுடைய காலில் தட்டினேன்; நான், “பையனே, அது—அது உண்மையாகவே எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது, இல்லையா?” என்று கேட்டேன்.

நான் அங்கே அப்படி உட்கார்ந்திருந்தேன், அப்போது நேராக எதிரே உட்கார்ந்திருந்த ஏதோ—ஒரு பெண், “ரூத், நீ என்ன செய்யப் போகிறாய்…?” என்று கேட்டாள்.

166 மேலாடை அணிந்து, ஒரு ஆணைப் போலவே பெரிய, திடமான உடலமைப்புடன் இருந்தாள், அங்கே அமர்ந்து சிகரெட் புகைத்து, அதை மூக்கின் வழியாக ஊதிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், நான் அவளை ஒரு ஆண் என்று நினைத்தேன். அசிட்டிலீன் பற்றவைப்பைக் கீழே போட்டுவிட்டு, யாரோ ஒருவரின் தலையில் அடித்து, *நீங்கள்-அதை-என்னவென்று அழைக்கிறீர்களோ,* அதைத் தட்டிவிட்டதைப் பற்றி ஏதோ சொல்லிவிட்டுச் சிரிக்க ஆரம்பித்தார்கள். நானும் கூடச் சிரித்தேன், அது ஒரு மனிதன் என்று எண்ணி, அவளுடைய காலில் தட்டினேன். எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. நீங்கள் அவர்களிடம் கூற முடியாது. வேதம், “ஒரு புருஷனின் உடையை அணிந்திருக்கிற எந்த ஒரு ஸ்திரீயும், அது ஒரு அருவருப்பாயிருக்கிறது” என்று கூறியுள்ளது. அங்குதான் நாம் இருக்கிறோம்.

167 இல்லை, சகோதரனே, நீங்கள் தட்டையாகச் சிகை அலங்காரம் செய்ய விரும்பினால், நான் உங்களுக்குச் சொல்லுவேன்: நீங்கள் ஏறக்குறைய என்னுடைய வயதை அடையும் வரை நீங்கள் காத்திருங்கள், உங்களுக்கு ஒன்று கிடைக்கும். எனவே…அது சரிதான். நண்பனே, நான் அந்தவிதமாகக் கூறவில்லை. சகோதரன் பிரான்ஹாம் உங்களிடம் உண்மையைக் கூறுவதாக நீங்கள் விசுவாசித்தால், உங்களுடைய இருதயம் ஆசீர்வதிக்கப்படுவதாக. தேவன் மனிதனைக் குறித்து எந்தக் காரியத்தையும் கூறுகிறதில்லை

என்று நான் நினைக்கிறேன், அவன் தன் தலைமுடியை வெட்டிக்கொள்ளும் வரைதான் அவனது—அவனது முக்காடு நீடிக்கும். அவன் தன்னுடைய தலைமுடியை ஒரு ஸ்திரீயைப் போல நீளமாக வளரச் செய்தால், அதைச் செய்வது ஒரு மனிதனுக்கு ஒரு அவமானம் என்று வேதம் கூறுகிறது.

168 ஆனால் இப்பொழுது, நீங்கள்—நீங்கள் உங்களுடைய தலைமுடியை வைத்துக் கொண்டு, நீங்கள் ஒரு சிறு பையனாயிருந்தால்…நான் அதைக் குறித்து நிறையவே கூறியிருக்கிறேன் என்பதை நான் அறிவேன்: "ரிக்கிஸ், நீங்கள் அந்தத் தட்டையான சிகை அலங்காரத்தோடு," அதைப் போன்ற யாவற்றையும், அதைப் போன்ற காரியங்களையும், ஆனால் நான்—நான் அதைக் கூறுகிறேன். பார்த்தீர்களா?

169 ஒரு மனிதன் தன்னுடைய தலைமுடியை எப்படி கத்தரித்துக் கொண்டாலும் அதைக் குறித்து தேவன் கவலைப்படுகிறதில்லை என்று நான்—நான் நினைக்கிறேன், ஏனென்றால் அவனுடைய தலை தேவனாயிருக்கிறது. ஆனால் ஒரு ஸ்திரீயின் தலை ஒரு புருஷன்; ஆகையால், அவள்…அவள் தன்னுடைய தலைமுடியைக் கத்தரித்துக் கொண்டால், அவள் தன்னுடைய தலையைக் கனவீனப்படுத்துகிறாள். அப்படியானால் ஒரு கனவீனமற்ற ஸ்திரீ விவாகரத்து செய்யப்பட்டு, விலகிச் செல்ல வேண்டும். அது சரியா? எனவே ஒரு ஸ்திரீ தன்னுடைய தலைமுடியை வெட்டிக்கொண்டால், அவள்—அவளுடைய கணவனுக்கு அவளைத் தவறான வாழ்க்கையிலிருந்து—ஒரு கனமற்ற நபராகத் தள்ளிவிட முற்றிலும் வேதாகம உரிமை உண்டு. அது சத்தியம் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்? அதைத்தான் வேதம் கூறியுள்ளது, ஏனென்றால் அவள் தன்னுடைய தலையைக் கனவீனப்படுத்துகிறாள். எந்த ஒரு கனவீனமான ஸ்திரீயோடும் வாழக் கூடாது.

**304. சகோதரன் பிரான்ஹாம், ஏசாயா சீயோன் குமாரத்திகளிடத்தில் பேசினபோது** (அல்லது பேசினான், நான் சொல்வது, அவர்களுடைய கருத்து "பேசப்பட்டது" என்பதுதான்) **சீயோன் குமாரத்திகளைக் குறித்து மொறுமொறுப்பான ஊசிகள், தலைமுடியை சுருட்டிக் கொண்டு, நன்கு அமைக்கப்பட்ட தலைமுடிக்கு பதிலாக வழுக்கையாகி; அதற்குப் பதிலாக…அது இன்றைக்கும் பொருந்துமா அல்லது சிலர் கூறுவதுபோலப் பழைய வேதாகமம் பயனற்றதாயிருக்கிறதா?**

170 பண்டைய வேதாகமம் எப்பொழுதுமே செயலில் உள்ளது, தேவன் கூறுகிற ஒவ்வொரு வார்த்தையும் செயலில் உள்ளது. ஆம், ஐயா! புதிய வேதாகமத்திலிருந்து பழைய வேதாகமத்திற்கு அது செய்யும் ஒரே காரியம், அது பெரிதாக்கப்பட்டது. இயேசு, "'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறீர்கள், (அது செயலில் ஈடுபட்டிருக்கும்போதுதான்); ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு ஸ்திரீயை

இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று" என்றார். இவை என்ன மகத்தான தலைசிறந்தக் காரியங்கள்!

இப்பொழுது, நண்பர்களே, நான் முடிக்க வேண்டும். இது சற்று காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது, அது மிகவும் நீளமான ஒன்று. நான் வேறெதையாவது பெற்றுக்கொள்ள முடியுமா என்று பார்ப்போம். நாம் பார்ப்போம்.

### 305. சகோதரன் பிரான்ஹாம், பெண்கள் எப்படி (ஓ, என்னே!) தங்களுடைய தலைமுடியை அலங்கரிக்க வேண்டும்?

171 மீண்டும், நீங்கள் விரும்புகிற எந்த வழியிலும் அப்படியே செய்யுங்கள். முதலாம் தீமோத்தேயு 2:9 பார்த்தீர்களா? "ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தினால் தங்களை அலங்கரிக்க வேண்டும்." **நான்—நான் தேவனுக்கு பிரீதியாக என்னுடைய ஆடையை அணிய விரும்புகிறேன்.** (அருமையான சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.) **உங்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. எங்களுக்காக ஜெபியுங்கள்.** அந்த நபர் அவளுடைய பெயரைக் கையொப்பமிடுகிறார்.

172 சாரோன், நிச்சயமாக, சகோதரியே! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, அது நீளமாக இருக்கும் வரை அதை அணியுங்கள். அது ஒரு சிறு பெண். தேனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. பரவாயில்லை, நீ தொடர்ந்து செல்.

### 306. மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, புத்தியில்லாத கன்னிகைகளில் யாராவது ஒருவர் இரட்சிக்கப்படுவார்களா அல்லது அவர்கள் யாவரும் இழக்கப்படுவார்களா?

173 இல்லை! பாருங்கள், மணவாட்டி பூமியிலிருந்து எடுக்கப்படும்போது, புறஜாதி சபைக்கான ஒவ்வொரு காரியமும் முடிவடையும். தேவனுடைய ஆவியானவர் பூமியை விட்டுச் செல்கிறார்: "அசுத்தமாயிருக்கிறவன் இன்னமும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." வேறுவிதமாகக் கூறினால், பரிசுத்த ஸ்தலமானது புகைமண்டலமாகிறது, அங்கே வழக்குரைஞர் வழக்காட நிற்கிறார். கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தை விட்டுச் செல்கிறார்; அவருடைய மத்தியஸ்த ஊழியம் முடிந்துவிட்டது. எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது; அவர் பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டு, மீட்பின் புஸ்தகத்தை எடுத்து, அவர் மீட்டுக்கொண்ட ஒவ்வொரு காரியத்தையும் உரிமை கோருகிறார். மத்தியஸ்த ஊழியம் இனிமேல் கிடையாது. எத்தனை பேர் அதைப் புரிந்து கொள்கிறீர்கள்? நான் அதை முத்திரைகளில் ஒன்றில் கூறியுள்ளேன்—அல்லது ஒன்றில்...ஆம், இந்த முத்திரைகள், கிறிஸ்து தம்முடைய மத்தியஸ்த ஊழியத்திற்கு உரிமை கோர வருகிறார் என்று நான் நினைக்கிறேன்.

174 இப்பொழுது, ஒரு நிமிடம். "புத்தியில்லாத கன்னிகைகள் இரட்சிக்கப்படுவார்களா?" இல்லை! அவளுக்கு என்ன சம்பவிக்கிறதோ அது—இப்பொழுது சம்பவிக்கிறது. அந்த நேரத்திற்குப் பிறகு அவள் அந்த நிலையில் இருக்கிறாள்... இப்பொழுது, அவள் உபத்திரவ காலத்தினூடாகச் செல்ல வேண்டியதாயிருக்கும். அதற்கான காரணம் என்னவெனில், அவள் பாவநிவிர்த்தியின் பரிபூரணத்தை புறக்கணித்துவிட்டாள். அவள் ஒரு விசுவாசி, ஒரு விசுவாசி என்று உரிமை கோருகிறவள், ஆனால் அவள் உபத்திரவ காலத்தினூடாகச் செல்ல வேண்டியவளாயிருக்கிறாள். வேதம், "மற்றவர்கள், வலுசர்ப்பமானது யுத்தம்பண்ணும்படி தன் வாயிலிருந்து தண்ணீரை ஊற்றினது..." என்று கூறியுள்ளது. அது என்னே ஒரு வேளையாயிருக்கிறது. அந்த...

175 பெயரளவிலான சபைகள் சரித்திரத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கண்டறிய மிகவும் பசியாயிருந்த ஒரு காலம் இருந்ததில்லை. நான்—நான் கிறிஸ்தவ வர்த்தக புருஷர்களுக்காகப் பேசுகிறேன். எப்பொழுதுமே அது பிரஸ்பிடேரியன், லூத்தரன், கத்தோலிக்க சபை, மற்றும் யாவரும், நூற்றுக்கணக்கான பாப்டிஸ்டுகள், கிறிஸ்துவின் சபை, நசரேயன்கள், யாத்திரீக பரிசுத்தர், ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர், அவர்கள் ஒவ்வொருவரும் கண்டுபிடிக்க—கண்டுபிடிக்கும் முயற்சியில் மந்தையாக வந்துகொண்டிருக்கின்றனர்...புரிகிறதா?

176 இப்பொழுது, இது ஒரு குறிப்பிடத் தக்க காரியமாகும். தயவு செய்து அதை ஒரு உபதேசமாக எடுத்துக்கொள்ளாதீர்கள், ஆனால் அது நடந்தபோது, வேத வாக்கியங்கள் என்ன சம்பவிக்கும் என்று கூறியுள்ளதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? நேரம் முடிந்து விட்டது. பாருங்கள், அங்கே ஏழு கன்னிகைகள், இல்லை, பத்து கன்னிகைகள் மணவாளனை சந்திக்க புறப்பட்டுச் சென்று, அவர்களில் பாதிபேர் தங்களுடைய தீவட்டியில் எண்ணெய் வைத்திருந்தனர், அவர்களில் பாதிபேர் இல்லாதிருந்தனர். அதுதான் சரீரத்தின் பாகம் மரித்ததும், உயிரோடிருக்கிற பாகமாயுள்ளது. ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள், "இதோ மணவாளன்..." என்ற சத்தம் உண்டானது. அவர்கள் யாவரும் ஆயத்தப்படுத்திக் கொண்டனர், அல்லது, கலியாண விருந்துக்குச் செல்வதற்காக எழுந்து அவர்கள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்திக் கொண்டனர். ஆனால் புத்தியில்லாத கன்னிகைகள், "உங்களுடைய எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள், எங்களுடைய தீவட்டிகள் அணைந்து போய்விட்டன. (புரிகிறதா?) உங்களுடைய எண்ணெயில் எங்களுக்குக் கொடுங்கள்" என்றனர். அவர்கள், "அப்படியில்லை, நாங்கள் எங்களுக்காக போதுமான அளவு வைத்துள்ளோம். போய் அதை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றனர். அவர்கள் அதை வாங்கச் சென்றபோது, மணவாளன் வந்தார்.

177 அறிவிப்பு வெளிவந்தபோது, “மணவாளன் வருகிறார்” என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது, ஒவ்வொருவரும் சரியாக, துரிதமாகச் செயல்பட விரும்பினர். சுவற்றின் மேல் கையெழுத்து எழுதப்பட்டிருக்கும் நேரம் அதுவல்லவா?

178 “ஓ, எங்களுக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வேண்டும்.” “எங்களுக்கு *இது, அது* அல்லது *மற்றது* வேண்டும்!” ஆனால் அவர்கள் அதை வாங்கச் சென்றபோது, மணவாளன் வந்தார். புத்தியுள்ளவர்கள் உள்ளே பிரவேசித்தனர், அவர்கள் வெளியே விடப்பட்டிருந்தனர், அங்கே அழுகையும், புலம்பலும், பற்கடிப்பும் இருக்கும்.

179 அதனோடு செல்ல இங்கே எனக்கு அழகான கேள்விகள் உள்ளன: “கலியாண வஸ்திரம் தரிக்காமல், அங்கி அணிந்து உள்ளே வந்த அந்த மனிதன் யார்?” அந்தக் கேள்விகள் யாவும் அதற்குள்ளே இணைகின்றன.

**307. ஒரு நபர் தனிப்பட்ட நபருக்குத் தசமபாகம் கொடுக்க வேண்டுமா அல்லது ஒரு கிறிஸ்தவன் வேலை செய்ய வேண்டுமா?**

180 நிச்சயமாக அவன் செய்ய வேண்டும். வேலை செய்யும் ஒரு மனிதன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறான்.

181 “தனிப்பட்ட ஒருவருக்கு தசமபாகம் கொடுக்கலாமா?” அது தனிப்பட்ட நபர் யார் என்பதைப் பொறுத்தது. பார்த்தீர்களா? அது உண்மை. எபிரெயர் 7-ம் அதிகாரத்தில், முதன்முறையாகத் தசமபாகத்தைப் பற்றிப் பேசப்பட்டது—நாம்…ஒரு நிமிடம் பொறுங்கள், கேள்வி எண் இரண்டு என்று நான் நினைக்கிறேன். இல்லை! ஊ-ஊ. இல்லை! ஏனென்றால் சகோதரன்…“சகோதரன் பிரான்ஹாமுக்கான இரண்டு கேள்விகள்” என்றார்.

182 எப்போது…எபிரேயர் 7-ம் அதிகாரத்தில், ஆபிரகாம் இராஜாக்களை முறியடித்துவிட்டு திரும்பி வந்தபோது, மெல்கிசேதேக்கை சந்தித்தபோது, அவன் அவருக்குத் தசமபாகம் கொடுத்தான். அதுதான் மெல்கிசேதேக்கு, சாலேமின் ராஜா, அவர் சமாதான ராஜா, நீதியின் இராஜாவாகவும், தேவன் தாமேயல்லாமல் வேறு யாருமல்ல. பார்த்தீர்களா?

183 ஆனால் நீங்கள் தசமபாகத்தை செலுத்தும்போது… உண்மையாகவே, நீங்கள் எங்கே தசமபாகம் கொடுக்க வேண்டியிருக்கிறீர்களோ, அங்குதான் நீங்கள் உங்களுடைய ஆகாரத்தைப் பெறுகிறீர்கள். “உங்களுடைய எல்லா தசமபாகங்களையும் என்னுடைய பண்டகசாலைக்குள் கொண்டு வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (அது சரிதானே?) தேவன், நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று பாருங்கள்.” தசமபாகத்தை

செலுத்தாத எந்த மனிதனும் அல்லது பெண்ணும் அதை ஏற்றுக்கொள்ளும்படி நான் சவாலிடுகிறேன்.

184 நான் அதைப் பார்த்தபோது என்ன நடந்தது என்பதையும், நான் என்ன நிலையில் இருந்தேன் என்பதையும் உங்களுக்குச் சொல்லிக்கொண்டு, விடியும் வரை இங்கே நிற்க முடியும். ஆனால், என்னால் முடிந்தவரை உண்மையுள்ளவனாக, நான் தசமபாகம் செலுத்தினேன். நான் இங்குள்ள சபையிலிருந்து அல்லது என்னுடைய தொடர் கூட்டங்களிலிருந்து என்னுடைய சொந்த பணத்தை எடுக்கும்போது, நான் இன்னும் அதிகமாக... நான் பத்தில் ஒரு பங்கைக் கொடுப்பேன். அதன்பின்னர் நான் அதை ஊழியக்காரர்களுக்கு கொடுத்துவிட்டு, மற்றதை ஊழியக்காரர்களுக்கு கொடுப்பேன். அதன்பின்னர், என்னால் அதைச் செய்ய முடியாதபோது, அப்பொழுது நான் செய்த காரியம், நான் பத்து சதவிகிதம் வைத்துத் தேவனுக்கு தொண்ணூறு கொடுத்தேன். அதன்பின்னர், என்னால் அதைச் செய்ய முடியாது என்று நியாயப்பிரமாணம் என்னிடத்தில் கூறியபோது, நான்... மேலும் நான் அப்படிச் செய்திருந்தால், அதற்கெல்லாம் அதற்கான கட்டணம் அனைத்தும் அதில் சேர்க்கப்பட வேண்டியிருக்கும், பிறகு நான் அதை எடுத்து, வெளிநாட்டு ஊழியங்கள் போன்றவற்றிற்குள் திசை திருப்பிவிட வேண்டியிருந்தது, அதன்பின்னர் ஒரு வாரத்திற்கு நூறு டாலர்களை கூலியாக எடுத்துக் கொள்ளுகிறேன்; அதிலிருந்து என்னுடைய தசமபாகத்தை செலுத்துகிறேன்.

185 ஆம், ஐயா! நான் தசமபாகம் செலுத்துவதில் விசுவாசங்கொண்டிருக்கிறேன். அது தேவனுடைய ஆசீர்வாதங்களில் ஒன்றாய் நிரூபிக்கப்பட்டுள்ளது. நீங்களோ, “அது பழைய ஏற்பாட்டிற்குரியது” என்று கூறலாம். அது புதிய ஏற்பாட்டிலும் கூட! ஆம், ஐயா!

### 308. அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், ஒரு குழந்தை...விவாகம் செய்யாததினால் பிறந்தால், இந்தக் குழந்தை எப்போதாவது இரட்சிக்கப்பட முடியுமா அல்லது எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்ல முடியுமா?

186 இரட்சிக்கப்படுமா? ஏன் நிச்சயமாக, அந்தக் குழந்தை... இருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அந்தக் குழந்தை ஏற்கனவே நடந்ததை மாற்றிவிட முடியாது. அது உண்மை. ஆனால் நான்...எடுத்துக் கொள்ளப்படுதலில்...இரட்சிக்கப்படுவதைக் குறித்து, நான், “ஆம்” என்று கூறுவேன். ஆனால் எடுத்துக் கொள்ளப்படுதலில் ஒரு முன்குறிக்கப்பட்ட வித்து எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்கிறது. ஒரு முன்குறிக்கப்பட்ட வித்து விபச்சாரத்தால் உருவாகும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. உங்களுக்குப் புரிகிறதா? பார்த்தீர்களா? ஜனங்கள்—அந்தக் குழந்தை இரட்சிக்கப்பட முடியும் என்று நான் நம்புகிறேன்; அதற்கு

அதனுடைய சொந்த உரிமைகள் கிடையாது. இது ஒரு மோசமான செயல் மற்றும் மற்ற காரியங்கள்.

187 ஆனால் இப்பொழுது, பழைய ஏற்பாட்டில் ஒரு குழந்தை ஒரு இழிவான பிள்ளையாகப் பிறந்தபோது, பத்து தலைமுறைகளாக, நானூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக, அதனால் கர்த்தருடைய சபைக்குள் பிரவேசிக்கக் கூட முடியவில்லை, அந்தச் சாபம் மிகவும் மோசமாக இருந்தது. அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு அப்பாவி குழந்தை, அதன் கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளுப் பேரக்குழந்தைகள், சற்று யோசித்துப் பாருங்கள், அந்தக் குழந்தையின் குழந்தையின் கொள்ளு, கொள்ளு, கொள்ளு, பத்து கொள்ளுப் பேரக்குழந்தைகளால் கூடத் தேவனுடைய சபைக்குள் வர முடியவில்லை. அது சரிதான்.

188 ஆனால் நீங்கள் பாருங்கள், அந்தப் பாவத்தை மன்னிக்கப் போதுமான பலமுள்ள ஒன்றும் அங்கே இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டின் இரத்தம் பாவங்களை மன்னிக்கவில்லை; அது பாவங்களை மூடியது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அதை நிராகரிக்கிறது. அது இப்பொழுது வித்தியாசமானது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உள்ளே வரும்போது, அது வித்தியாசமாக இருக்கிறது.

### 309. சகோதரன் பிரான்ஹாமே, நாங்கள் கூடுமானவரை உங்களுடைய செய்திக்கு நெருக்கமாக இருக்க விரும்புகிறோம். நாங்கள் அரிசோனாவிற்கு அல்லது ஜெபர்ஸன்வில்லுக்கு குடிபெயர்ந்து செல்லலாமா?

189 உங்கள் விருப்பம், இரண்டில் ஒன்று. நான் உங்களை உறுதியாக நேசிக்கிறேன், நீங்கள் எங்குச் சென்றாலும், என்ன செய்தாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் இப்பொழுது, ஆலோசனையாக, நான் ஜெபர்ஸன்வில்லுக்கு வருவேன் என்று நான் நம்புகிறேன். நீங்கள் எப்படியும் இடம் பெயர்ந்து செல்ல விரும்பினால், நான் ஜெப்பிடம் வருவேன். நான் அரிசோனாவில் இருப்பதைக் காட்டிலும் இங்கு அதிகமாக இருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். அது பரவாயில்லை.

### 310. சகோதரன் பிரான்ஹாம், பாவிகளுக்குப் பிரசங்கிக்க இன்னும் காலதாமதமாகிவிட்டதா?

190 இல்லை! இல்லை! சகோதரனே, அதை உங்களுடைய மனதில் நினைக்காதீர்கள். தொடர்ந்து வீட்டைக் கட்டிக் கொண்டேயிருங்கள். உங்களால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் தொடர்ந்து செய்யுங்கள். நீங்கள் அழைக்கப்படும் வரைக்கும் சென்று கொண்டேயிருங்கள். பார்த்தீர்களா?

### 311. கேள்வி எண் இரண்டு. இரட்சிக்கப்பட்டவர்கள் ஆராதனையில் பாவிகளிடமிருந்து தங்களை பிரித்துக் கொள்ள வேண்டுமா?

**ஆராதிப்பதற்காக, இரட்சிக்கப்பட்டவர்கள் பாவிகளிலிருந்து தங்களைப் பிரித்துக்கொள்ள வேண்டுமா?**

191 அதனால் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. நீங்கள் வெளியே உள்ள பாவிகளைப் பற்றிச் சொல்கிறீர்கள் என்றால்...நீங்கள் எங்கும் தேவனை ஆராதிக்கிறீர்கள். ஆனால் நாம் அப்படி செய்தால், நாம் எப்படி சபையைக் கொண்டிருக்கப் போகிறோம் என்று நான் நினைக்கிறேன், ஏனெனில் பாவிகள் சபைக்குள்ளாக வந்து, கிறிஸ்தவர்களின் பக்கத்தில் அமர்ந்துவிடுகிறார்கள். உங்களை ஒருபோதும் வேறு எதிலிருந்தும் பிரித்துக் கொள்ளாதீர்கள், பாவியினிடத்திலிருந்து அல்ல, ஆனால் பாவத்திலிருந்தே. உங்களால் முடிந்தால் பாவியை அழைத்துக் கொள்ளுங்கள், ஆனால் அவனுடைய பாவத்தில் பங்கு கொள்ளாதீர்கள்.

**312. இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன்னுடைய கணவன் ஒரு பாவியாயிருந்தால், அவனிடமிருந்து விலகி இருக்க வேண்டுமா?**

192 இல்லை, ஐயா! இல்லை, ஐயா! அது உங்களுடைய கணவர். நீங்கள் அதைச் செய்வதன் மூலம் அவனை முன்பைக் காட்டிலும் அதிக தூரம் தேவனிடத்திலிருந்து தள்ளிவிடுவீர்கள். பார்த்தீர்களா? அது உண்மை, சகோதரன், சகோதரி. நீ அவனை மணந்து கொண்டாய்; அவன் உன்னுடையவன், நீ அவனுடையவள்.

**313. சகோதரன் பிரான்ஹாம், திருமண ரத்து என்பதன் பொருள் என்ன? ஜனங்கள் விவாகம் செய்துகொள்ள சுதந்திரமாக இருக்கிறார்களா அல்லது விவாகரத்து என்பதன் மற்றொரு வார்த்தையா? நான் இதைக் குறித்து சில தகவல்களை அறிய விரும்புகிறேன்.**

193 நிச்சயமாக அவர்கள் திருமணமானவர்கள். அவர்கள் அந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டால், அவர்கள் விவாகம் செய்து கொள்வார்கள். ஒரு பையனைப் போல, ஒரு பையன் ஒரு பெண்ணை நல்லெண்ணத்தின் பேரில் விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்தால், அவன் அந்தப் பெண்ணுக்குக் கடமைப்பட்டவனாயிருக்கிறான். அவன் அவளை மணந்து கொண்டதைப் போன்றே உள்ளது. சட்டம் செய்கிற ஒரே காரியம், பொதுச் சட்டப்படி கணவன் மனைவியாக மாறுவதைத் தவிர்ப்பதற்காக, ஒன்றாக வாழ உங்களுக்கு ஒரு உரிமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால் ஒரு மனிதன் ஒரு பெண்ணிடம், "தேனே, நான் உன்னை மணந்து கொள்வேன் என்று சொல்லும்போது; நான் உன்னை என் மனைவியாக எற்றுக் கொள்வேன். நீங்கள் எற்றுக் கொள்வீர்களா...?" அவன் திருமணமானவன்.

194 உங்களுடைய வாக்குறுதி புனிதமானது; அதுதான்

எப்படியாயினும் உங்களைத் மணந்து கொள்ள வைக்கிறது. எந்தப் போதகராலும், எந்த நீதிபதியாலும், அல்லது வேறு எதனாலும் உங்களுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது; அது தேவனுக்கும், இந்த மனிதனுக்கும் உள்ள உங்களுடைய சொந்த உறுதிமொழியாகும். நீங்கள் வாக்குப்பண்ணும்போது, நீங்கள் விவாகம் செய்து கொண்டீர்கள்.

195 பாருங்கள். நீங்கள், "சகோதரன் பிரான்ஹாம், அது...? நீர் கூறுகிறீர்...வேதாகமத்தின் மூலம் மாத்திரமே நீர் அதற்குப் பதிலளிப்பதாகக் கூறினீர்" எனலாம். அதன் பேரிலான வேதாகமத்தை நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால் உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். இப்பொழுது நமக்கு ஆறு அல்லது எட்டு நிமிடங்கள் உள்ளன. சரி.

196 "அவளுடைய கணவனான யோசேப்பு, ஒரு நீதிமானாயிருந்தபடியால் (அவளுடைய நியமிக்கப்பட்ட கணவன், ஏற்கனவே அவளுடைய கணவன் என்று அழைக்கப்பட்டான்)... அவளுடைய கணவனான யோசேப்பு நீதிமானாயிருந்தபடியால், அவளை இரகசியமாய் தள்ளிவிட 'மனமுள்ளவனாயிருந்தான்' ஆனால் அவர்கள் கூடி வருவதற்கு முன்பே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று கண்டறியப்பட்டது. (பார்த்தீர்களா?) கர்த்தருடைய தூதன் அவனுக்கு சொப்பனத்தில் தோன்றி, 'தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள பயப்படாதே'" என்றான். அவன் ஏற்கனவே அவளுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தபடியால், ஏற்கனவே விவாகம் செய்யப்பட்டு விட்டது.

197 மேலும்...சிறு பெண்மணியே, நீ அந்தப் பையனை மணந்து கொள்வதாக வாக்களித்திருந்தால், நீ அதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய். அந்தக் கடமைக்குப் பிறகு நீங்கள் வேறொருவரை விவாகம் செய்து கொண்டால், அது முதற்கொண்டு, நீங்கள் விபச்சாரத்தில் ஜீவிப்பீர்கள். கவனியுங்கள், ஒரு பையனுக்கு ஒரு பெண்ணை விவாகம் செய்வதாக வாக்களிக்கும் அதே காரியம்...

198 நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற எண்ணினால் அன்றி, வேறு யாருக்கும் அதைச் செய்யாதீர்கள். நினைவில் கொள்ளுங்கள், அதற்காக வேதாகமம் இருக்கிறது. யோசேப்பு மரியாளை விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்தான். தேவன் அதைக் கூறினார்...

199 அதன் பேரிலான பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணங்களைப் படியுங்கள். பார்த்தீர்களா? பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம், நீங்கள் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொள்வதாக வாக்குப்பண்ணியிருந்து, நீங்கள் வேறொரு பெண்ணை விவாகம் செய்தால், நீங்கள் விபச்சாரம் செய்தீர்கள்; அது உங்களைப்

பாளையத்திலிருந்து வெளியேற்றிவிட்டது. ஆம், ஐயா! நீங்கள் ஒரு ஸ்திரீக்கு அதை வாக்குப்பண்ணும்போது, நீங்கள் உங்களுடைய வாக்குறுதிகளைக் காத்துக் கொள்ள வேண்டும். அவள் ஒரு புனிதமான சிறு பாத்திரமாயிருக்கிறாள், அது குழந்தை ஜீவனை மீண்டும் உலகத்திற்கு கொண்டு வருவதற்காக உள்ளது. எனவே நீங்கள் அவளுக்கு வாக்குப்பண்ணும்போது, நீங்கள் அவளை மணந்து கொள்ள வேண்டும்.

**314. சிறைச்சாலை ஆராதனைகளுக்கும், ஆத்துமாக்களை இரட்சிக்க முயற்சிக்கும் ஒரு சாட்சியைப் பெறுவதற்கும் இது மிகவும் காலதாமதமாகிவிட்டதா? கர்த்தர் அவ்வளவு சீக்கிரத்தில் வரவிருப்பதால், ஒருவர் தன்னிடம் உள்ள அனைத்தையும் இப்போது விற்றுவிட வேண்டுமா?**

200 பாருங்கள், எப்படி—எப்படி நீங்கள்…அதைப் போன்ற அப்படிப்பட்ட எண்ணத்தை ஏற்படுத்தும்படியான எந்தக் காரியத்தையும் நான் கூறவில்லை என்று நான் நம்புகிறேன். நான் கூறினேனா? நான் அப்படி செய்திருந்தால், என்னை மன்னியுங்கள்! நான் அதைப் பொருட்படுத்திக் கூறவில்லை…புரிகிறதா? அந்தக் காரியங்களை வெறுமனே ஊகிக்காதீர்கள். தொடர்ந்து பிரசங்கம் செய்து, சிறை ஊழியம் செய்து, எல்லோரையும் அழைத்துக் கொண்டே செல்லுங்கள்…

201 இங்கே பாருங்கள். ஏறக்குறைய ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர்கள் நான் அதை *கூரியர்-ஜேர்னல்* என்ற பத்திரிக்கையில் கண்டேன் (நான் அதை எங்கோ ஒரு பெட்டியில் வைத்துள்ளேன்), ஒரு பெரிய துண்டு *கூரியர்-ஜேர்னல்* பத்திரிக்கை செய்தித்தாளில், அங்கே அவர்கள் பழைய சிறகுகளை வெளியே எறிந்த இடம், அவர்கள் ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர்களாக ஆவதற்கு முன்பு, அவர்கள் மில்லரைட்டுகள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் இங்கே கென்டக்கியில் உள்ள பிராங்க்ளினில் உள்ள *கூரியர்* செய்தித்தாளில் ஒரு பெரிய தாள் ஒன்றை வைத்திருந்தனர், அவர்கள் யாவரும் தங்களுடைய சொத்துக்களை விற்றுவிட்டு…அவர்கள் ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்துக் கொண்டனர், அதை வேத வாக்கியத்தின் மூலம் நிரூபித்து, இயேசு அந்தத் தேதியில் வருவார் என்றும், அங்கே சென்று அவர்களுடைய வீணைகளையும் மற்றவைகளையும் எடுத்துக்கொண்டு, மலையின் உச்சியில் அமர்ந்திருந்தனர். அடுத்த நாள் காலை வந்தபோது, பனியானது எல்லா சிறகுகளையும் நனைத்திருந்தது, அவர்கள் சோர்வடைந்து கீழே இறங்கினர். பார்த்தீர்களா? அது தனிக் கொள்கை மற்றும் மற்ற காரியங்கள்.

202 நீங்கள் அதை நம்ப வேண்டாம். இயேசு இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வராமல் இருக்கலாம். அவர் எப்பொழுது வருவார் என்று எனக்குத் தெரியாது. அவர் எப்பொழுது வருவார் என்பதை எந்த மனிதனும் அறியான்! ஆனால் நான்

தொடர்ந்து பிரசங்கம் செய்து, அவர் வரும் வரை என்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்ய முயற்சிக்கப் போகிறேன். அவர் இன்றைக்கு இங்கிருக்கவில்லையென்றால், நாளை நான் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன். அவர் இந்த வாரம்... இங்கிருக்கவில்லையென்றால், நான் அடுத்த வாரம் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன். அடுத்த பத்து ஆண்டுகளில் அவர் இல்லாமற்போனால், நான் உயிரோடிருந்தால், நான் அடுத்த முப்பது ஆண்டுகளில் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன். பார்த்தீர்களா? நான் இன்னமும் தேடிக்கொண்டேயிருப்பேன். அவர் எப்பொழுது வருவார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் அவருடைய வார்த்தைக்கு உண்மையாய் வாழ்ந்து, அவருடைய ஜனங்களுக்கு உண்மையாய் வாழ்ந்து, ஒரு கிறிஸ்தவனைப் போல வாழ்ந்து, அவருடைய வருகைக்காகக் காத்திருக்க விரும்புகிறேன். பார்த்தீர்களா?

203 சிறைச்சாலை ஆராதனைகளைத் தொடர்ந்து பிரசங்கித்து, உங்களால் முடிந்தவரை ஒவ்வொருவரையும் இரட்சிக்கச் செய்யுங்கள். அவர் எப்பொழுது வருவார் என்று எனக்குத் தெரியாது; யாருக்கும் தெரியாது. ஆனால் நான் இந்த ஒரு காரியத்தைக் கூறுவேன். இதைத்தான் நான் உங்களுக்குக் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள் உங்களுடைய சொந்த வியாக்கியானத்தை அளிக்க முயற்சிக்கவில்லை என்று நான் நம்புகிறேன்...இந்த நபரைக் கடுமையாகத் திட்டவில்லை. சகோதரனே, சகோதரியே, நீங்கள் யாராயிருந்தாலும் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது ஊருக்கு வெளியிலிருந்து வந்த யாரோ ஒருவரைப் போன்றிருந்தது. ஏனென்றால் அது ஒரு— ஒரு அஞ்சல் அட்டையில் இருந்தது என்று நான் நினைக்கிறேன், டென்வர், கொலராடோ, மற்றும்...ஆம், கொலராடோவில் உள்ள பைக்ஸ் சிகரத்திலிருந்து. எனவே அது யாரோ ஒருவர் அதைத் தபால் மூலம் அனுப்பியிருக்கலாம். ஆனால் அது—அது முற்றிலும் சரிதான். அந்த ஒலிநாடாவை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

204 ஆனால் நாம் நினைவில் கொள்வோமாக, நீங்கள் எதையும் மாற்ற வேண்டாம், பாவத்திலிருந்து நீதிக்கு உங்களுடைய வழிகளை மாத்திரமே மாற்ற வேண்டும். உங்களுடைய பணியில் தொடர்ந்து இருங்கள், அதேவிதமாகவே தொடர்ந்து செய்யுங்கள். அதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட யாவரும், "ஆமென்" என்று கூறுங்கள், [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] பாருங்கள்? அதை இப்பொழுது செய்யுங்கள்!

**315. சகோதரன் பிரான்ஹாம், மத்தேயு 12:40-ல், "யோனா மூன்று பகலும் மூன்று இரவும் மீனின் வயிற்றில் இருந்தபடியால், அப்படியே மனுஷகுமாரன் மூன்று பகலும் மூன்று இரவும் பூமியின் இருதயத்தில் இருப்பார்." வெள்ளிக்கிழமை மாலையில் அவர் கல்லறையில் வைக்கப்பட்டு,**

**ஞாயிற்றுக்கிழமை காலையில் உயிர்த்தெழுந்தார் என்று அவர்கள் சொல்லும் அந்த நாள்...அதாவது, இரண்டு இரவுகளும் ஒரு பகலும் மட்டுமே ஆன அந்த நாள் எப்படி இருக்க முடியும்?**

205 இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களேயானால், யோனா மூன்று பகலும் மூன்று இரவும் வயிற்றில் இருந்த நாட்களில், "இருந்தது போல" என்று அது சொல்லியிருக்கிறது (உங்களுக்குப் புரிகிறதா?). அது மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகளுக்குள், அந்த மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகளுக்குள், ஏனென்றால் நீங்கள் வேதவாக்கியத்தைப் பொய்யுரைக்க முடியாது. தீர்க்கதரிசி, "நான் என்னுடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டேன், அவருடைய ஆத்துமாவை பாதாளத்தில் விடமாட்டேன்" என்று கூறினார். மனித சரீரத்தில் சீர்கேடு எழுபத்திரண்டு மணி நேரத்தில் ஏற்படுகிறது, அது மூன்று பகலும் மூன்று இரவும் ஆகும். அந்த மூன்று பகலும் மூன்று இரவும் அவர் கல்லறையிலிருந்து வெளியே வர வேண்டும்.

206 எனவே மூன்று பகலும் மூன்று இரவும் என்பது சரியாக அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல; அது அந்த மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகளுக்குள் ஏதோ ஒரு நேரத்தில் நடக்கும். அவர் வெளியே வர வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் இருக்க முடியாது, அதாவது...அவரால் அழிவைக் காண முடியவில்லை, அவர் சரியாக அந்த நேரத்தில் தரித்திருந்திருந்தால், அது அழிந்து போயிருக்கும்.

**316. சகோதரன் பிரான்ஹாம், ஒரு மனிதன் விவாகம் செய்து, விவாகரத்து செய்திருந்தால்** (அது பயங்கரமானது, பாருங்கள், அநேகர் அல்லவா? இப்பொழுது, நான் ஜனங்களுக்கு எதிராக எதையும் கூறவில்லை; அது தான் ஜனங்களுடைய சிந்தையில் உள்ளது. நிச்சயமாகவே, அவர்கள் கலக்கமடைந்துள்ளனர். எடுத்துக் கொள்ளப்படுதலைக் குறித்து ஜனங்கள் அதிகமாகச் சிந்திப்பதில்லை; அது அவ்வளவாகப் பேசப்படவில்லை. ஆனால் இப்பொழுது, அது உலகத்தில் பூசப்பட்டிருக்கிறது. ஜனங்கள் இந்தக் காரியங்களை வேதத்தில் வாசிக்கிறார்கள். ஜனங்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அதைக் காண அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைக் காண்கிறார்கள், அவர்கள் உத்தமமாய் இருக்கிறார்கள். அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். அந்தக் காரணத்தினால்தான், என்னால் முடிந்தளவு அதை உங்களுக்கு அளிக்க முடிந்தளவு புத்தியோடு பதிலளிக்க விரும்புகிறேன்.) **—அதாவது, திருமணம் செய்து விவாகரத்து பெற்று, பின்னர் அவனை மணந்த ஒரு பெண்ணை மறுமணம் செய்துகொண்டால், அந்தப் பெண்ணும் ஏற்கனவே திருமணம் செய்து விவாகரத்து பெற்று, பின்னர் அவனை மணந்திருந்தால், இந்த இருவரும்—முடியுமானால்...தேவனுடைய பார்வையில்**

**திருமணமானவர்களாக...அவர்கள் தேவனுடைய பார்வையில் திருமணமானவர்களா? எப்படி இருவரும் அல்லது அவர்களில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுதலில் இருக்க முடியும்?**

207 எப்படி? எனக்குத் தெரியாது. என்னால் உங்களிடம் கூற முடியவில்லை. “அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் இருக்க முடியுமா?” என்பதே கேள்வி. விவாகரத்து செய்யப்பட்டவர்கள், அவர்கள் ஒவ்வொருவரும் விவாகரத்து செய்யப்பட்டனர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உயிரோடுள்ள ஒரு துணை உண்டு, அதன்பின்னர் அவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொண்டனர், அவர்கள் இருவரும் மீண்டும் திருமணம் செய்து கொண்டனர். இப்பொழுது, ஒரு...இந்த ஸ்திரீக்கு உயிரோடுள்ள ஒரு கணவன் உண்டு; இந்த மனிதனுக்கு உயிரோடுள்ள ஒரு மனைவி இருக்கிறாள். இப்பொழுது, அவர்கள் பிள்ளைகள் போன்றோரை உடையவர்களாயிருந்து, தேவனண்டை வர விரும்புகிறார்கள். அவர்களால் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்ல முடியுமா? அது பரலோகப் பிதாவைச் சார்ந்ததாயிருக்கும். என்னால் அதற்குப் பதிலளிக்க முடியவில்லை. புரிகிறதா?

208 நான்—நான் ஒரு காரியத்தைக் கண்டேன். அவர்கள் விபச்சாரக்காரர் என்று அழைக்கப்படுவார்கள் என்று வேதம் உரைத்துள்ளது. வேதமும் கூட, “விபசாரக்காரன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்” என்று கூறியுள்ளது. அவ்வளவுதான் என்னால் கூற முடியும். நான்—எனக்குத் தெரியும், அதைக் கூறுவது என்னைக் கொல்லுகிறது, ஆனால் வார்த்தை என்ன கூறுகிறதோ அதைத் தவிர என்னால் வேறு எதையும் கூற முடியாது. நான் அதனோடு தரித்திருக்க வேண்டும். அது தவறு என்று நான் நம்புகிறேன். வேதத்தில் சில இடங்கள் உள்ளன...

209 நான் உங்களுக்கு ஆலோசனை கூறிக் கொண்டிருக்கவில்லை. தயவு செய்து, நான் உங்களுக்கு ஒரு சிறு வேதவாக்கியத்தை அளிக்கட்டும். தயவு செய்து, வேண்டாம்—வேண்டாம்—வேண்டாம்...நீங்கள் உங்களுடைய கணவரோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தால், உங்களுடைய மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தால், தயவு செய்து அந்த விதமாகவே இருங்கள். நீங்கள் அவ்வாறு செய்வீர்களா? நான் அதை உங்களிடம் கூறியுள்ளபடியால், சிறு பிள்ளைகளை வீடில்லாமல், அதைப் போன்ற காரியங்களை விட்டுவிடாதீர்கள். தவறான காரியங்களைச் செய்த அந்த—அந்த—அந்த ஜனங்களுக்காகத் தேவன் சில இடங்களில் ஈடுசெய்யும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். உங்களுக்கு நினைவிருக்கட்டும், தாவீது பசியாயிருந்தபோது, அவன் தேவனுடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து, சமுகத்தப்பத்தைப் புசித்ததைக் குறித்து இயேசு கூறினார், இது ஆசாரியனுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டதும், குற்றமற்றதாயும் காணப்படுகிறதாயும் இருக்கிறது. ஆசாரியன்

ஓய்வுநாளில் செய்யத் தகாததை செய்து குற்றமற்றவனாகக் காணப்படுகிறான், ஓய்வு நாளிலும் பெரியவர் இங்கே இருந்தார். புரிகிறதா? அங்கே...நான்...நாம்—நாம் அதைத் தேவனிடம் விட்டுவிட்டு, தொடர்ந்து சென்று, நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற விதமாகவே...இப்பொழுது கிறிஸ்துவுக்காக ஜீவிப்போமாக.

210 நீங்கள் உள்ளே நுழைவதற்கான ஒரு வாய்ப்பு உண்டாகக்கூடும் என்பதை நாம் பார்ப்போம். செய்யாதீர்கள்...இரண்டு தவறுகளும் ஒன்றை ஒருபோதும் சரிப்படுத்தாது. நீங்கள்—நீங்கள் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாயிருந்தால், நீங்கள் இருக்கிறவிதமாகவே தொடர்ந்து வாழுங்கள். உங்களுக்குத் தவறான துணை இருக்கலாம். நான் இந்த ஒரு காரியத்தைக் கூறுவேன்: நீங்கள் இந்த மனைவியிலும், இந்த ஜீவியத்திலும் தவறான துணையைப் பெற்றிருந்தால், நீங்கள் அதை மற்ற ஒன்றில் ஒருபோதும் கொண்டிருக்கமாட்டீர்கள். எல்லா தவறுகளும் சரி செய்யப்படும்.

### 317. மீண்டும் பிறந்த விசுவாசிகள் யாவரும் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வார்களா?

211 இல்லை, வெறும் மீதமுள்ளவர்கள் மட்டும், மீதமுள்ளவர்கள் மட்டும் தான், மீண்டும் பிறந்த அனைத்து விசுவாசிகளும் அல்ல. வேதம், “மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை” என்று கூறியுள்ளது, அதன்பின்னர் அவர்கள் உயிரோடெழுப்பப்பட்டு, செம்மறியாடுகளை வெள்ளாடுகளிலிருந்து பிரித்தெடுத்தனர். வேதவாக்கியத்தின்படி...மறுபடியும் பிறந்த யாவரும் உள்ளே போகமாட்டார்கள்.

### 318. ஒரு நபர் உண்மையாகவே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறார் என்பதற்கு என்ன அத்தாட்சி?

212 யோவான் 14:26: அவர்...“பரிசுத்த ஆவியானவர் வரும்போது (பார்த்தீர்களா?), அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.” பார்த்தீர்களா? அவர் ஒரு...அவர் அதைப் பூரணப்படுத்துவார்; “மனிதனால் உண்டாக்கப்பட்டவை” அதைச் செய்யாது; அவர் வார்த்தையாயிருக்கிறார். பரிசுத்த ஆவியாகிய அவர் வரும்போது, அவர் தம்மை வேதத்தைக் கொண்டு உங்களுக்குள் அடையாளங்கண்டு கொள்வார். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார் என்பதற்கு அதுவே உண்மையான அடையாளம், ஏனென்றால் அது வார்த்தையாயுள்ளது.

213 இப்பொழுது பாருங்கள்! நீங்கள் அந்நிய பாஷையில் பேசினால் என்னவாகும்? நான் அதை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவர் என்ன செய்வார் என்று இயேசு கூறினார். நீங்கள் அந்நிய பாஷையில் பேசி, மேலும் கீழும் குதித்து, சத்தமிட்டாலும், மற்றவை எல்லாவற்றையும் செய்தாலும்,

பின்னர் வார்த்தைக்கு வந்தால்; நான் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைக் குறித்து…என்னிடத்தில் உள்ள வேதவாக்கியத்தைக் கொண்டு நிரூபிப்பேன், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் முற்றிலும் வேதத்தில் உள்ள ஒரு தவறான புரிந்து கொள்ளுதலாகும், அந்தவிதமாக எவருமே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கவில்லை, நீங்களோ அதையே தொடர்ந்து பின்பற்றுகிறீர்களா? உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் அதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்வார் என்று உங்களால் என்னிடம் கூற முடியுமா? அதனுடைய சொந்த வார்த்தையை அது எப்படி மறுதலிக்க முடியும்?

214 இந்த நாளில் என்ன நடக்க வேண்டுமோ, அதாவது மனுஷ குமாரன் தம்மை எப்படி வெளிப்படுத்தப் போகிறார், அவர் என்ன செய்யப் போகிறார் என்பதையும், இப்பொழுது இருந்து வந்துள்ள இந்த எல்லா வேதவாக்கியங்களையும், அதன்பின்னர் அவர் இறங்கி வந்து அதை அடையாளங்காட்டி, நீங்கள் ஒரு ஸ்தாபனத்தை பற்றிக்கொண்டு, நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள் என்று கூறுகிறீர்களா? அதிலிருந்து உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?

215 நான் என்னுடைய மனைவியை நான் நேசிக்கிறேன் என்று கூறி, வேறொரு பெண்ணுடன் ஒரு சல்லாபம் வைத்துக்கொண்டு, சுற்றித் திரிந்து, நான் அவளை நேசிக்கிறேன் என்று என் இருதயத்திலிருந்து அவளிடம் கூற முடியுமா? அது உண்மையான அன்பாய் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவள் என்னை நேசிப்பதாக என்னிடம் சொல்லிவிட்டு, நான் இல்லாத நேரத்தில் வேறொரு ஒரு ஆணுடன் சுற்றித் திரிய முடியுமா?

216 அதைத்தான் இஸ்ரவேல் செய்தது…அங்குள்ள வேதாகமத்தை நீங்கள் அறிவீர்கள், அவர் எப்படி கூறினார், பேச…இஸ்ரவேல், "நீ உன் கால்களை விரித்து, வழியில் வந்த ஒவ்வொரு ஆணையும் ஏற்றுக்கொண்டு, என்னுடன் வேசித்தனத்தில் ஈடுபட்டீர்கள்; ஆகையால், நான் உன்னைத் தள்ளிவிடுவேன்" என்றார். சரியாக! அது என்ன? நீங்கள் உங்களுடைய சொந்த சரீரத்திற்கு விரோதமாக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு பெண் வெளியே சென்று மற்றொரு மனிதனோடு அல்லது ஒரு மனிதன் வேறொரு ஸ்திரீயோடு வாழும்போது, அவர்கள் விவாகம் செய்து கொள்ளும்போது, அவர்கள் தங்களுடைய சொந்த மாம்சத்தை கறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஒருவன் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டு, வேதாகமம் சரியானது என்பதை முற்றிலும் மறுக்கும்போது, அவன் தான் இருப்பதாகக் கூறும் சரீரத்திற்கு எதிராக விபசாரம் செய்கிறான். பார்த்தீர்களா? எனவே அது அந்திக்கிறிஸ்துவின் ஒரு அடையாளமாயுள்ளது, அது கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கும்.

**319. சகோதரன் பிரான்ஹாம், ஒரு—ஒரு வாலிபப் பிள்ளை தளர் கால் சட்டைகளையும் மற்றும் குட்டை கால்சட்டைகளை**

**அணிவது சரியா?**

217 எவ்வளவு வயது? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால்; நீங்கள் அதைக் குறித்து நிதானித்தறியட்டும். ஒரு சிறு பெண்ணோ அல்லது எந்த ஒரு சிறு பிள்ளையோ, நான் யூகிக்கிறேன், எனக்குத் தெரியாது, நான்...எனக்குத் தெரிந்த ஒரே காரியம், ஒரு புருஷனுடைய ஆடையை ஒரு ஸ்திரீ அணிவது அருவருப்பானது என்று வேதம் கூறுகிறது. பார்த்தீர்களா? "ஒரு ஸ்திரீ", "ஒரு குழந்தை" என்று கூறவில்லை. ஆனால் இப்பொழுது, நான்... நீங்கள் அதைக் குறித்து உங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளுங்கள், நான்...என்னைப் பொறுத்தவரை, நான்கு அல்லது ஐந்து வயதுச் சின்னஞ்சிறு குழந்தையிடம் ஒரு...இருப்பதில் எனக்கு எந்தத் தவறும் தெரிவதில்லை. அவர்கள் சிறு பிள்ளைகளாயிருக்கும்போது, நான் எப்படி கூறுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள், அவர்கள் அங்கே வெளியே முற்றத்தில் சுற்றித் திரிவார்கள். அவள் அணிந்திருப்பாள், நீங்கள் தளர்கால் சட்டைகள் அல்லது வேறு என்னவென்று அழைக்கிறீர்கள், அவள் ஒரு சின்னஞ்சிறு பிள்ளையாயிருக்கிறாள், நான்—நான் அதில் எந்தத் தவறையும் காணவில்லை. ஒரு வேளை...

218 பாருங்கள், வார்த்தை என்ன கூறுகிறது என்பதை நான் உங்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறேன். ஒரு புருஷனுடைய உடையை ஒரு ஸ்திரீ அணிவது ஒரு அருவருப்பாயுள்ளது.

**320. நாம் எங்கே ஒன்றுகூட வேண்டும்? மேலும், எக்காளங்கள் ஊதும்போது ஒன்றுகூடுங்கள் என்று நீங்கள் சொன்னீர்கள்.**

219 என் நண்பரே, சகோதரியே, அல்லது யாராக இருந்தாலும் சரி, நீங்கள்—நீங்கள் சொல்வது தவறு என்று நான் நம்புகிறேன். நீங்கள் எக்காள சத்தத்தில் கூடுங்கள் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. இஸ்ரவேலர் எக்காளங்களின் பேரில் கூடினர் என்று நான் கூறினேன், புறஜாதி மணவாட்டி அல்ல. இல்லை, இல்லை! எக்காளங்கள், ஏழு எக்காளங்கள் தொனிக்கப்படுதல் இஸ்ரவேலரை கூட்டிச்சேர்ப்பதாயிருந்தது (எத்தனை பேர்கள் அதை அறிவீர்கள்?) எல்லா இடங்களிலிருந்தும்...ஆம், இல்லை...இல்லை, இல்லை! ஊ-ஊ! இல்லை, இல்லை—இல்லை இஸ்ரேல் இல்லை. எனவே, அது அதுவல்ல...நாம் எக்காளங்களின் பேரில் மணவாட்டியோடு கூடுகிறதில்லை. எக்காளங்கள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்குப் பிறகு வருகிறது. பார்த்தீர்களா? எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது...அது...இந்தக் கேள்வி இப்பொழுது அல்ல.

**321. சகோதரன் பிரான்ஹாம், உங்களுக்கு நேரம் இருந்தால், மத்தேயு 10:41-ஐ விளக்கிக் கூறுங்கள். ஒரு தீர்க்கதரிசியின் பலன் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.**

220 இப்பொழுது சரி, இயேசு, "ஒரு தீர்க்கதரிசியை ஒரு தீர்க்கதரிசியின் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் ஒரு தீர்க்கதரிசியின் பலனைப் பெறுகிறான்" என்றார். ஒரு தீர்க்கதரிசியின்

பலன் ஒரு தீர்க்கதரிசியுடன் நண்பனாயிருப்பதாகும். நீதிமான் என்னும் நாமத்தினாலே நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்குரிய பலனைப் பெறுகிறான். அது சரியா? ஒரு தீர்க்கதரிசியின் பலன் என்னவென்பதை அவர்கள் அறிந்துகொள்ள விரும்பினால், தீர்க்கதரிசிக்கு ஒரு நண்பனாய் இருப்பதேயாகும். பார்த்தீர்களா? அது ஒரு பலன். அவர் உங்களுடைய நண்பர்.

221 சூனேமிய ஸ்திரீயைப் போல, அது சில சமயங்களில் உபயோகமாக வரலாம். பார்த்தீர்களா? அவளுக்கு அது பயனுள்ளதாக இருந்தது. பார்த்தீர்களா? தேவனுடைய ஊழியக்காரர்களைக் கவனியுங்கள்.

ஓ, என்னே! இப்பொழுது, நாம்...நான்—நான் முடிக்க வேண்டும், நண்பனே, நான்—நான் அதைச் செய்ய வெறுக்கிறேன், ஆனால் இங்கே பாருங்கள், என்னவென்று பாருங்கள், நூற்றுக்கணக்கானவர்கள். [ஒரு சகோதரன், “சகோதரனே, தொடர்ந்து செல்லுங்கள்” என்கிறார்.—ஆசி.] இல்லை! ஆனால்—எனக்குத் தெரியும், ஆனால்...நீங்கள் அதைக் கூறுவதை நான்—நான் விரும்புகிறேன், ஆனால் இந்தப் பரிதாபமான ஜனங்கள் இன்றிரவு இன்னும் நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் காரோட்டிச் செல்கின்றனர் என்பதை நான் நினைக்கிறேன். என்னே, அவர்கள் தான்...அங்கே அநேகர் இருக்கிறார்கள், நான்...

**322. சகோதரன் பிரான்ஹாம் அவர்களே, நான் ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது கலியாண விருந்துக்குப் பின்னரா அல்லது—அல்லது அது பூமியில் உள்ளதா? அதைக் குறித்த எல்லாவற்றையும். எனக்கு அதைக் குறித்து புரியவில்லை.**

222 சரி, சகோதரனோ அல்லது சகோதரியோ, எனக்கே, அதைப் புரிந்துகொள்வது கடினமாயுள்ளது. ஆனால் என்னால் கூறக்கூடிய ஒரே காரியம் இதுதான்: கலியாண விருந்து ஆயிர வருட அரசாட்சிக்கு முன்னர் வருகிறது.

223 இப்பொழுது, பாருங்கள், யாரோ ஒருவர், இங்கே எங்கோ அதன் பேரில் ஒரு கேள்வி உண்டு என்பதை நான் அறிவேன், அதாவது, “சகோதரன் பிரான்ஹாம், தானியேலின் எழுபது வாரங்களைக் குறித்து நீங்கள்—நீங்கள் தவறாக இருக்கிறீர்கள். இன்னும் எழுபது வாரங்கள் இருக்கும்” என்றார். இல்லை, மேசியா வந்து தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டியதாயிருந்தது, எழுபது வாரங்களின் மத்தியில், எழுபது வாரங்களின் மத்தியில், அதாவது ஏழு வருடங்கள், அவர்—அவர் ஜீவனுள்ளவர்கள் மத்தியிலிருந்து சங்கரிக்கப்பட்டு ஒரு பலி செலுத்தப்பட வேண்டியவராயிருந்தார். எத்தனை பேருக்கு அது நினைவிருக்கிறது? சரி. எத்தனை ஆண்டுகள் மேசியாவான இயேசு பிரசங்கித்தார்? மூன்றரை. அதன்பின்னர் இன்னும் மூன்றரை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

224 வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்தில் இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும், அவர்கள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். புறஜாதி மணவாட்டி போய்விடும்போது இஸ்ரவேலருக்கு இன்னும் மூன்றரை வருடங்கள் உள்ளன. அதை இப்பொழுது எத்தனை பேர் புரிந்து கொள்கிறீர்கள்? பார்த்தீர்களா? சரி, சரி.

**323. இது ஒரு...நான் ஒரு மதிய உணவுக் கடையை வைத்திருக்கிறேன், அதில் பெரும்பாலும் உயர்நிலைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிமாறுகிறேன். வெளிச்சத்திற்குள்ளாக வந்தது முதற்கொண்டு, நான் மேஜைப் பந்தாட்ட இயந்திரத்தையும்,** (அவர்கள் வைத்துள்ள ஜூக் இசைப்பெட்டி;) **ஜே-இசைப்பெட்டியையும் வெளியே எடுத்துவிட்டேன். வாலிபர்கள் புகைப்பிடிக்கிறார்கள், அவர்கள் வானொலியில் ராக் அண்ட் ரோல் இசையை விரும்புகின்றனர். நான் ஒரு நாளில் நான்கு மணி நேரம் மட்டுமே திறந்திருப்பேன். நான்—நான் புகைப்பிடிப்பதையோ மது அருந்துவதையோ ஆதரிப்பதில்லை, ஆனால் அந்த இடத்தைத் தக்கவைத்துக் கொள்வது குறித்து கவலைப்படுகிறேன்.**

225 உங்களுக்குத் தெரியும், அது ஒரு பிரச்சனை. பார்த்தீர்களா? அதைக் குறித்த காரியம் என்னவெனில், நீங்கள்—நீங்கள்...ஒருகால் ஜீவனம் செய்ய வேண்டியிருக்கலாம். ஆனால் அது எனக்கு என்ன செய்யும் என்று உங்களுக்குத் தெரியுமா? அது என்னை மிகவும் பதட்டப்படுத்தி, என்னால் முடியாதபடி செய்துவிடும்... நான்—நான்—அதாவது...நீங்கள் அதைச் சகித்துக்கொள்ள முடியலாம், ஆனால், உள்ளே இருக்கும் அந்த "ரிக்கிகள்" மற்றும் "ரிகெட்டாக்கள்" கூட்டமாக அப்படிச் செய்து கொண்டிருந்தால், நான்—நான—எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். புரிகிறதா?

226 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான்—நான்...அது என்னுடையதாக இருக்குமானால், நான் என்ன செய்வேன் என்பதை நான் அறிவேன். நான், "நீங்கள் அதை நிறுத்துங்கள் அல்லது இங்கிருந்து வெளியேறுங்கள்" என்று கூறுவேன். பார்த்தீர்களா? நான் சரியான ஒரு இடத்தில் நடத்துவேன் அல்லது நடத்தவே மாட்டேன். ஆனால் நீங்கள், நீங்கள் அதை ஒரு ஜீவனத்துக்காகச் செய்ய வேண்டியதாயிருந்தால், சகோதரனே அல்லது சகோதரியே, நான் உங்களை அவமதிக்க விரும்பவில்லை. இந்தக் காரியங்களைக் கூறுவது கடினமாயுள்ளது என்பதை நான்—நான் அறிவேன்; ஆனால் அது—அது...அது சரியல்ல (நீங்கள் பாருங்கள்?), ஏனென்றால் அது ஒருவிதமான...

227 நம்முடைய ஸ்திரீகள் தங்களுடைய ஆடைகளை மிகக் குட்டையாக அணிவதைக் குறித்து இன்று காலை யாரோ ஒருவர் கூறினது போல, நம்முடைய வயோதிக ஸ்திரீகள், வாலிபப்

பெண்களுக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாயிருந்தது. அது சரிதான் என்று நானும் நினைக்கிறேன். நீங்கள் பார்த்தீர்களா?

228 நானும் அதேக் காரியத்தைத்தான் நினைக்கிறேன். அங்கே அவர்கள் உங்களை இந்த எல்லாவிதமான புகைபிடித்தலையும், தொடர்ந்து செய்துகொண்டிருப்பதையும் கண்டு, உங்களுடைய சாட்சியை அறிந்துகொள்ளும்போது, இந்த எல்லா சபித்தல்களையும், சிறு பிள்ளைகளைச் சுற்றி அணி திரள்வதும், அவர்கள் இந்தவிதமாகத் தொடர்ந்து அப்படி நடந்துகொள்ள, நீங்கள் அதைக் குறித்து ஒன்றுமே கூறவில்லையென்றால், அது உங்களுடைய சாட்சியில் ஒரு மோசமான காரியமாகும். கர்த்தர் உங்களை வழிநடத்துகிற யாவையும் நீங்கள் செய்யுங்கள். தேவன் உங்களைச் சரியான வழிக்கு வழி நடத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

**324.** (நி-ற்-ப-து-...) **சபைக்குள் செல்ல வரிசையில் நிற்பது ஒரு நினைவாக மாத்திரமே இருக்கப் போகிறது, நாம் உபத்திரவத்தினூடாகச் செல்லவில்லையென்றால் என்ன சம்பவிக்கப் போகிறது? நாம் இருக்க வேண்டுமா—இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமா...ஒரே...சில துன்பங்கள்?** நாம் பார்க்கக் கூடாதென்றால்...

பார்த்தீர்களா? நான்...இந்தக் கேள்வி அநேகமாக இதுதான். நான் துரிதமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்; நான்—நான்—நான் இதைச் செய்யக் கூடாது. இவைகளை திரும்பவும் வைக்க வேண்டும், ஏனென்றால் நீங்கள் ஒரு மணி நேரம் தரித்திருக்க ஒரு இடம் உண்டு (புரிகிறதா?) அதை—அதை இடித்துப் போடுங்கள். நான்—நான் நிறுத்துவேன்.

229 பாருங்கள். ஜனங்கள் அதைக் கூற விரும்பி, அவர்கள்—சபை உபத்திரவ காலத்தைச் சந்திக்கப் போகிறது என்றே எண்ணுகின்றனர். பார்த்தீர்களா? அது முடியாது; அது (புரிகிறதா?) முடியாது, ஏனென்றால் அது ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்டது.

230 இப்பொழுது, சபை, லோத்தைப் போன்ற பெயரளவிலான விசுவாசிகள், அவன் உபத்திரவ காலத்தினூடாகக் கடந்து சென்று கொண்டிருக்கிறான் (புரிகிறதா?) அக்கினியால் இரட்சிக்கப்படுவது போல. நோவா உபத்திரவக் காலத்தினூடாகச் சென்று, அதன் மேலாகக் கொண்டு செல்லப்பட்டு, பூமியை மீண்டும் மாசுபடுத்திய காமுடன் வெளியே வந்தான். பார்த்தீர்களா? லோத்து வெளியே வந்தான், அவனுடைய சொந்த குமாரத்திகள் அவனோடு உறங்கி, தன்னுடைய சொந்த குமாரத்திகள் மூலம் பிள்ளைகளைப் பெற்றான். பார்த்தீர்களா? ஆனால் ஆபிரகாம் ராஜரீக வித்தை பிறப்பித்தான், வாக்குத்தத்தத்தின் வித்தை பிறப்பித்தான். ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுதலில் மகிமைக்குச் சென்று, அப்படியே நடந்து வீட்டிற்குச் சென்றான். அவன் ஒருபோதும் உபத்திரவ காலத்தினூடாகச் செல்லவேயில்லை. உங்களுக்குப் புரிகிறதா?

[231] அங்குதான் காரியம். பார்த்தீர்களா? அது அவ்வாறு இல்லை, வேதம் ஒரு மாதிரியைக் கொண்டு…அந்த மாதிரிகள் தவறிப்போக முடியாது. பார்த்தீர்களா? அது மணவாட்டி…இப்பொழுது, சபையானது உபத்திரவ காலத்தினூடாகச் செல்லும் என்று முன்னுரைக்கவில்லை.

[232] இப்பொழுது, ஜனங்கள், "ஆதி பரிசுத்தவான்களைக் குறித்து என்ன?" என்று கேட்கின்றனர். அதுவே யுகங்களின் மாற்றமாயிருந்தது. அது துன்புறுத்தலின் கீழ் இருந்தது, நீங்கள் இந்தச் *சபைக் காலங்களைப்* பற்றிக் கேட்க இங்கே இருந்திருந்தால், அவர்கள் எப்படி அந்த இருளுக்குள் சென்று அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது என்பதைப் பார்க்கவும், அப்படியானால் அவர்கள் அந்தத் துன்புறுத்தலை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது என்பதை அது காண்பிக்கிறது, ஏனென்றால் சபையின் ஒவ்வொரு காலகட்டமும், எல்லாமும் அவர்கள் மேலும் மேலும் இருளடைந்ததைக் காட்டத் தொடங்கின, இறுதியில், அவர்கள் அவருடைய நாமத்தை மறுதலித்து, தாங்கள் வாழ்ந்து மரித்த சர்தை என்ற வேறொரு பெயரைச் சூட்டிக்கொண்ட ஒரு முழுமையான நிலைக்குச் சென்றார்கள். பின்னர், தியத்தீரா மற்றும் சர்தை வெளிப்பட்டன, அதன்பிறகு, பிலதெல்பியா மற்றும் அதுபோன்ற இடங்களுக்கு அது வெளிப்படத் தொடங்கியது, பின்னர் எல்லா அழிவுகளிலிருந்தும் தப்பிக்கவிருந்த மணவாட்டியின் அழைப்புக் காலம் வந்தது. பூமியின் மீது வரவிருக்கும் இந்த எல்லா அழிவு மற்றும் கோபத்திலிருந்தும் தப்பிப்பது தகுதியுடையதாகக் கருதப்பட்டது, அதிலிருந்து தப்பிப்பதற்கு, நீங்கள் அதன் வழியாகச் செல்லாமல், அதிலிருந்து தப்பிக்கத் தகுதியுடையவர்களாகக் கருதப்பட வேண்டும் என்பதற்காகவே இது. பார்த்தீர்களா? இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டீர்களா? பார்த்தீர்களா?

[233] சபையானது, வெதுவெதுப்பானதாய், தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டிக்குப் புறம்பேயுள்ள எந்தக் காரியமும் உபத்திரவ காலத்தினூடாகச் செல்லும். முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்கள் உயிர்த்தெழுப்பப்பட மாட்டார்கள்: "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை," முன்நியமிக்கப்பட்ட, முன்குறிக்கப்பட்ட, தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டி, தேவனுடைய சொந்த தெரிந்துகொள்ளுதல். "சகோதரன் பிரான்ஹாம், அது யார்?" எனக்குத் தெரியாது. அது யாரென்று என்னால் உங்களுக்குச் சொல்ல முடியாது, ஆனால் அது அங்கே இருக்கப்போகிறது என்பதை நான் அறிவேன், ஏனென்றால் அவர்கள் அவ்வாறு இருப்பார்கள் என்று கர்த்தர் கூறினார். பார்த்தீர்களா? அவர்கள்தான் உபத்திரவத்திலிருந்து எழும்பி மேலே செல்வார்கள், ஆனால் மற்றவர்களோ உபத்திரவ காலத்திற்குள் சென்று, கீழே சென்று, ஆயிர வருட அரசாட்சிக்கு முன்னர் யாவரும்

கொல்லப்படுவார்கள். அப்பொழுது—நீதிமான்கள் ஆயிரம் வருட அரசாட்சியில் தோன்றி ஆயிரவருட காலம் உயிரோடிருப்பார்கள்.

234 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது, அதன்பின்னர் மரித்து, நன்மை செய்தவர்களும் தீமை செய்தவர்களும் இருவருமே உயிரோடெழுப்பப்படுகின்றனர். புத்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவ புத்தகம் திறக்கப்பட்டது; பரிசுத்தவான்கள், மனைவியும் கணவனும் அமர்ந்து உலகத்தை நியாயந்தீர்க்கிறார்கள். “அவர் எல்லா ஜாதிகளையும் இருப்புக் கோலால் நியாயந்தீர்ப்பார்” என்ற வார்த்தை நிறைவேறியது. எல்லா ஜாதிகளும் அங்கே அவருக்கு முன்பாக நிற்பார்கள், அவர் அவர்களை இருப்புக் கோலால் நியாயந்தீர்ப்பார். அவர் செம்மறியாடுகளை வெள்ளாடுகளிலிருந்து பிரித்து, வெள்ளாடுகளை நோக்கி, “போங்கள்” என்றும், செம்மறியாடுகளை, “என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்” என்றும் கூறுவார்.

235 இப்பொழுது, பூமி முழுவதும் பரிசுத்தவான்களின் ஒரு பாளயக் கூட்டம் நடைபெறும். சாத்தான் தன்னுடைய சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, பரிசுத்தவான்களோடு மீண்டும் யுத்தம் செய்யச் செல்கிறான், அவன் துவக்கத்தில் மகிமையில் சரியாகச் செய்தது இதுதான். அதன்பின்னர் தேவன் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் பொழியச் செய்கிறார், மேலும் முழு பூமியும் அகற்றப்படுவது போல...அது அப்படியே எரிந்து அழிக்கப்படுகிறது. இனிமேல் சமுத்திரமும், தண்ணீர்களும் இனிமேல் பூமியின் மேல் ஒன்றுமே விடப்பட்டிருக்காது. எரிமலைச் சீறிப் பாய்ந்து, வெடித்து, பிளந்து, இந்த முழு காரியமும்...

236 “நான் புதிய வானங்களையும், புதிய பூமியையும் கண்டேன்: முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; அங்கே சமுத்திரமே இல்லாதிருந்தது. யோவானாகிய நான், பரிசுத்த நகரமானது தன்னுடைய கணவனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியாகப் பரலோகத்திலிருந்து தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதைக் கண்டேன்.” அது நினைவிருக்கிறதா? இந்த மணவாட்டியில்...“இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது,” ஆயிரத்து ஐநூறு சதுர மைல்கள் பரப்பளவுள்ள கூர்நுனி கோபுர வடிவிலான இந்த நகரத்தில் தேவன் அவர்களோடு வாசம் பண்ணுவார். நகரத்தின் உச்சியில் ஒரு வெளிச்சம் இருக்கும். ஆமென்!

ஓ, சீயோன் மலையின் மேல் உள்ள அந்த நகரம்,
ஒரு அந்நியன் என்ற முறையில், அதே சமயத்தில்
நான் அதை இன்னமும் விரும்புகிறேன்.
நான் மலையின் மேல் உள்ள அந்த நகரத்தை
அடையும்போது,
நான் உங்களை அந்தக் காலங்களில் சந்திப்பேன்.

237 சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவர் அமர்வார். நகரத்திற்கு வெளிச்சம் தேவைப்படாது, ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவரே அதற்கு வெளிச்சம். ஆட்டுக்குட்டியானவருக்கு மேலாகப் பிதாவானவர், *லோகாஸாக* இருக்கிறார். தேவன், மகத்தான ஒளி, நித்திய ஒளி சிங்காசனத்திற்கு மேலே பிரகாசிக்கும். இயேசு தம்முடைய பிதாவின் சிங்காசனத்தில் இருப்பதில்லை, அவர் தம்முடைய சிங்காசனத்தில் இருப்பார். பிதாவும் குமாரனும் ஒன்றாக இருப்பார்கள், பிதா குமாரனின் மேல் வட்டமிடுவார். “அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன். அவர்கள் சிந்திப்பதற்கு முன்பே, நான் அவர்களுக்காகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.” அது உண்மை.

238 பரிபூரணமான, பரிபூரணமான காலத்தை ஒரு…பரிபூரண ஜீவனுள்ள தேவனுக்கு இயேசு ஒப்புவிப்பார், அதாவது அவர் மீட்டு பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். அது சரியா? ஆவியாகிய பிதாவாகிய தேவனிடத்திற்குத் திரும்புவார், ஒரு மனிதனிடம் அல்ல, ஆவியினிடத்திற்கு திரும்புவார். நன்மையின் சுபாவமெல்லாம் ஒன்று சேர்ந்தால், அதுவே தேவன். நன்மையில்… இப்பொழுது, நன்மையிலிருந்து தாறுமாறான எந்தக் காரியமும் தீமையாகும்; அது சாத்தானின் இராஜ்ஜியம். எல்லா நன்மையும் தேவனுக்கு சொந்தமானது. எல்லா தீமையும்…

239 அதன்பின்னர் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனில் திடமான பொருளானார். தேவன் எல்லாவற்றிலும் எல்லாவற்றிலும் கிரியை செய்யும் ஒரு புலனாகும் நபராக மாறுவதற்காகவும், இந்தக் குமாரன் மற்ற குமாரர்களை அவர் கொண்டு வரும்படியாகவும் தம்முடைய ஜீவனை அளித்தார். “நான் பிதா என்னிலும், நான் உங்களிலும், நீங்கள் என்னிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.”

240 ஓ, சகோதரனே, அது ஒரு உண்மையான நாளாக இருக்கும். செய்தியைக் கேட்க நீங்கள் பர்மிங்காமிலிருந்து காரோட்டிச் வர வேண்டியதில்லை; அப்பொழுது செய்தி நம்மோடு சரியாக இருக்கும், அது சரியில்லையா? ஓ, அது ஒரு—அது ஒரு அற்புதமான, அற்புதமான நேரமாய் இருக்கும். நாம் அந்த நாளுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்; தேவன் அதை விரைந்து வரச்செய்யட்டும்.

241 அங்கே அமைந்துள்ள அந்த மகத்தான நகரம் (இப்பொழுது, பார்த்தீர்களா?), அது…நீங்கள், “ஆயிரத்து ஐநூறு மைல்கள் உயரமா?” என்று நினைக்கிறீர்கள். அதைத்தான் வேதம் கூறியுள்ளது. இப்பொழுது, அது அந்தவிதமாக நேராக ஆயிரத்து ஐநூறு மைல்களாக இருக்காது. பார்த்தீர்களா? எல்லா பக்கங்களும் சமம் என்ற மற்றொரு புவியியல் அளவுகோலை நாம்

உடையவர்களாயிருக்கிறோம்; அது ஒரு கூர்நுனி கோபுரம். பார்த்தீர்களா?

242 நகரமானது ஏறக்குறைய ஒரு அறுபது பாகையாகத் தொடங்கும். அது துவங்குமானால், ஆயிரத்து ஐநூறு மைல் தூரத்தில், அது எவ்வளவு உயரத்தில் இருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள், ஆனால் அது அங்கு இருக்க எவ்வளவு காலம் பிடிக்கும். நீங்கள் மலையின் மேல் நடந்து கொண்டிருப்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். ஆயிரத்து ஐநூறு மைல்கள் உயரத்தில் ஒரு அறுபது பாகையில், நீங்கள் கிட்டத்தட்ட *இந்த* விதமாக இருக்கிறீர்கள். பார்த்தீர்களா? நகரம் முழுவதும் இந்த மலையின் மேல் உள்ளது. அது எவ்வளவு உயரமாக நீண்டதோ; அது அகலமாயிருக்கும் வரை அது நீண்டது. உயரம், ஆழம், அகலம், அது—அது சமம்; எல்லா சுவர்களும் சமமானவை. ஒரு கூர்நுனிக்கோபுரத்திற்கு நான்கு சுவர்கள் உள்ளன, இந்த நான்கு சுவர்கள்…

243 இப்பொழுது, நகரத்தைச் சுற்றிலும் சுவர்கள் இருநூற்று பதினாறு அடி உயரமும், நூற்று நாற்பத்து நான்கு முழமும், அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கல்லாகும். நண்பர்களே, அந்த நகரத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஓ, என்னே! இங்கே இந்த உஷ்ணமான இடத்தில் நாம் என்ன—என்ன செய்கிறோம்? நாம் இந்தக் காரியங்களை என்ன செய்கிறோம்? நாம் ஏன் அந்தவிதமாக ஓட்டுகிறோம்? நாம் ஏன்—ஏன் பாடுபடுகிறோம்? வழியின் ஒவ்வொரு அங்குலத்திற்கும் மதிப்புள்ளது.

> நான் பாதையின் முடிவை அடையும்போது,
> ஓ, வீதியின் பாடுகளும் ஒன்றுமற்றதாகத் தென்படும்.

அது உண்மை. மேலும், ஓ, அது என்ன ஒரு நேரமாய் இருக்கும்.

244 அங்கே இயேசுவானவர் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். மேலும் சிம்மாசனத்தின் அடியிலிருந்து ஜீவ நதி பாய்ந்து, இந்த நான்கு சுவர்களின் வழியே சிறு பிளவுகளிலும், சிறு கிளைகளாகப் வழிந்தோடி, மேலிருந்து ஒரு நதியாக உருவாகி, நகரத்தின் வழியே கீழ்நோக்கிப் பாயும். அது அந்தவிதமாக வீதிகளினூடாகச் செல்லும், ஒவ்வொரு பக்கத்திலும், முப்பது நாட்களுக்கு ஒருமுறை—ஒருமுறை தங்களுடைய கனிகளை அளிக்கும் அல்லது மாற்றும் ஜீவ விருட்சங்கள் நிற்கின்றன. ஓ, என்ன ஒரு நகரம்!

245 வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த சிருஷ்டிகராகிய தேவன் இப்பொழுது மகிமையில் அந்த நகரத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆபிரகாம் அதை எதிர்நோக்கியிருந்தான். அவன் தன்னுடைய வீட்டை விட்டுச் சென்றான்; அவன் தனக்குப் பிரியமாயிருந்த, எதிர்நோக்கியிருந்த எல்லாவற்றையும் பிரித்துவிட்டான்… ஏன்? அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அவன் ஒரு

தீர்க்கதரிசியாயிருந்தபடியால், அவன் ஆவியோடும், ஆவியின் ஒரு பாகத்தோடும் இணைக்கப்பட்டிருந்தான். அவனுக்குள்ளாக ஏதோ ஒன்று, “ஒரு நகரம் உண்டு” என்று கூறினது, அவன் அதைத் தேடத் துவங்கினான். மேலும், “நான் ஒரு பரதேசி, ஒரு அந்நியன். தேவன் தாமே கட்டி உண்டாக்கின ஒரு நகரத்தை நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்” என்றான். அந்த நகரம் எங்கோ இருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். ஓ, என்னே! நான் நினைக்கிறேன், அவன் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே இடத்தில், அதாவது பாலஸ்தீனத்தில், அங்கேதான் அது எழும்பும், ஏனென்றால் அது சீயோன் மலையின் மேல் உள்ளது. அங்கேதான் அவள் இருப்பாள்.

246 அவள் ஒரு சமுத்திரத்திலிருந்து சமுத்திரத்திற்கு, ஒரு சமுத்திரத்திற்குள்ளாக எப்படி நீண்டு செல்கிறாள் என்று பாருங்கள். ஆயிரத்து ஐநூறு மைல் தூரமுள்ள அந்த நகரத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், அங்கே கர்த்தருடைய மலைகளின் மேல் அமைந்திருந்தது. ஓ, அது அற்புதமாயிருக்கும்!

247 சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து படுத்துக் கிடக்கும். சிங்கம் காளையைப் போல வைக்கோலைத் தின்னும். கரடி சாந்தமாயும், ஓநாய் அடக்கமாயும் இருக்கும். அது என்ன ஒரு நேரமாயிருக்கும்! ஒன்றும் சேதப்படுத்தாது, அழிக்காது; எல்லாமே சமாதானத்திலும், அன்பிலும் இருக்கும். இனி வயோதிகமே இருக்காது; இனிமேல் சுகவீனமே இருக்காது, இனி ஒருபோதும் மரணமே இருக்காது.

248 மக்களே, இது ஏதோ சாண்டா கிளாஸ் கதையல்ல, ஏதோ ஒரு கட்டுக்கதை அல்ல, இது வார்த்தையில் எழுதப்பட்டுள்ளது. வார்த்தை ஒருபோதும் தவறியதில்லை. அந்த வாக்குத்தத்தத்தைக் குறித்து சிந்திக்க...வேதாகம நாளில் அல்ல, ஆனால் இந்த நாளில், தேவன் இன்றைக்கு, அவருடைய வார்த்தையில் ஒரு சிறு துண்டு கூடத் தவறியதில்லை. ஓ, நான் அந்த நகரத்திற்குச் செல்வேன். நான் அதை விரும்புகிறேன், நீங்கள் விரும்பவில்லையா?

249 இல்லை! இப்பொழுது, சகோதரனே, சகோதரியே, அது ஒன்பது மணி இருபது நிமிடங்கள் என்று சொல்கிறது. எனக்குத் தெரியும், கென்டக்கியிலிருந்து இங்கே சில நண்பர்கள் வந்திருக்கிறார்கள். நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இங்கு எனக்கு நண்பர்கள் உள்ளனர் என்பதை நான் அறிவேன். நீங்கள் முழு இரவும் தங்க விரும்பினால், நான் உங்களுடைய அறைக்கான கட்டணத்தைச் செலுத்துவேன். நீங்கள் உங்களுக்கான இரவு ஆகாரத்தையும், நீங்கள் தங்க விரும்பினால் உங்கள் விடுதிக்கான கட்டணத்தையும் நான் செலுத்துவேன் என்று உங்களுக்குக் கூறினேன். நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் அங்கே பின்னால் உள்ள அவனைப் பார்ப்பதேயாகும், நான் நிச்சயமாக அதைச் செய்வேன். உங்களுக்கு

உதவி செய்ய என்னால் முடிந்த எதையும் நான் செய்வேன். நான் உங்களை நேசிக்கிறேன்.

250 நான் இந்தக் கேள்விகளுக்குச் சில சமயங்களில் முரண்பாடாய் பதிலளிக்க வேண்டும் என்று கருதவில்லை. நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையென்றால், அது முற்றிலும் சரிதான். நீங்களும் அதே விதமாக என்னில் அன்பு கூர வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஏனென்றால் நான் அந்தவிதமாகவே உங்களுக்குச் செய்கிறேன் என்பதை தேவன் அறிவார். எனக்குத் தெரிந்த வரையில் இந்தக் கேள்விகளுக்கு மாத்திரமே நான் பதிலளிக்கிறேன்...நண்பரே, அவைகளில் சிலவற்றில் நான் தவறாக இருக்கலாம், ஆனால் அது வேண்டுமென்றே தவறாகக் கூறவில்லை. எனக்கு ஆறு அல்லது எட்டு கேள்விகள் இருந்தால், அதனால் நான் அவர்களுடன் அப்படியே இருந்து, அதை முழுமையாக விளக்கிச் சொல்லியிருக்கலாம், ஆனால் நான், இப்போது அவர்கள் அனைவரையும் கடந்து ஓடுவதற்குப் பதிலாக...விவாகம் மற்றும் விவாகரத்து பற்றிய சில அவைகள் என்னிடம் உள்ளன. எனக்கு இப்போதுதான்...நான் அவைகளில் சிலவற்றிற்கு பதிலளிப்பேன் என்று எண்ணினேன். இங்கே கிடந்த வேறு எதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை, அவற்றை எடுத்துப் பார்த்தேன், ஆனால் எனக்கு இங்கே சில மிக முக்கியமான கேள்விகள் உள்ளன, மிக முக்கியமான கேள்விகள். என்னால் முடிந்தால் அவைகளுக்கு உங்களுக்காகப் பதில் கூற விரும்புகிறேன்.

251 நீங்கள் இந்தப் பகுதிக்கு அருகில் வசித்தால், புதன்கிழமை பில்லியை அழையுங்கள்; அதற்குள் நான் திரும்பி வருவேனா இல்லையா என்று எனக்குத் தெரிந்துவிடும். நான் இந்த வாரம் ஜெபிப்பேன். ஆனால் நான் நிறைய தனிப்பட்ட நேர்காணல்களைப் பெற்றுள்ளேன், ஓ, *அதைப்* போன்ற ஒரு குவியலாக உள்ளது. என்னால் முடிந்தவரை இந்நாட்களில் ஒன்றை நடத்த அரிசோனாவில் கிட்டத்தட்ட *அநேகர்* உள்ளனர். ஜனங்கள் உண்மையாகவே சுகவீனமாயிருக்கின்றனர். அவர்களில் சிலருக்கு பிரச்சனைகள் உள்ளன, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அறியாதிருக்கிறார்கள்: கணவனும் மனைவியும் பிரச்சனைகளோடு இருக்கிறார்கள்.

252 இங்குள்ள இவைகளில் சில தனிப்பட்ட நேர்காணல்களுக்கு மாற்றப்பட வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் என்னால் அதைச் வெளிப்படையாக வாசிக்க முடியவில்லை, ஜனங்கள் தங்களுடைய விவாக விவகாரம் மற்றும் அதைப் போன்ற காரியங்களைக் குறித்து இங்குக் கூறியதை. மேலும் அவர்கள் யார் என்பதைக் கண்டறிய நான் பில்லியைத் திரும்பிச் செல்லச் சொன்னேன், மேலும்—மேலும் அவர்களை அழைத்து, அவர்களைக் குறித்து நான் பேசும்படியாக, நாம் அவர்களை நேர்காணலுக்கு அழைப்போம் என்று அவர்களிடம் கூறுகிறேன். சில மிக முக்கியமான கேள்விகள்,

அவைகள் பதிலளிக்கப்பட வேண்டும்.

253 நான் உங்களை நேசிக்கிறபடியால், உங்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கவே நான் இங்கு வந்துள்ளேன். நீங்கள் கிறிஸ்துவுக்கு நான் பெற்றுள்ள என்னுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். நான் உங்கள் ஒவ்வொருவரையும் உரிமை கோருகிறேன். இன்றிரவு நான் உங்களை உரிமை கோருகிறேன்; நான் எல்லா நேரத்திலும் உங்களை உரிமை கோருகிறேன்; நான் உங்களை எப்பொழுதுமே உரிமை கோருகிறேன், அது என்னுடைய சகோதரனும் சகோதரியுமாகும். நீங்கள் என்னுடைய பிள்ளைகள்; சுவிசேஷத்தில் நான்—நான் உங்களுடைய தகப்பன், ஒரு குருவானவரைப் போன்ற தகப்பன் அல்ல, பவுல் அங்கே கூறினதுபோல, நான்—நான் சுவிசேஷத்தில் உங்களுடைய தகப்பன். நான் கிறிஸ்துவுக்கு உங்களைப் பெற்றெடுத்துள்ளேன், இப்பொழுது நான்—நான் உங்களைக் கிறிஸ்துவுக்கு நியமிக்கிறேன்; அதாவது உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்துவுக்கு நிச்சயதார்த்தம் செய்கிறேன். என்னை ஏமாற்றி விடாதீர்கள்! என்னை ஏமாற்றி விடாதீர்கள்! நீங்கள் ஒரு கற்புள்ள கன்னிகையாக நிலைத்திருங்கள்.

254 "சகோதரன் பிரான்ஹாம், நான் அதை எப்படி செய்வேன்?" வார்த்தையோடு சரியாக நிலைத்திருங்கள்; தூய்மையாகவும், சுத்தமாகவும் ஜீவிக்க வேண்டும்; உலகத்தின் காரியங்களோடு எந்தத் தொடர்பும் கொள்ளாதீர்கள். அதைக் குறித்த அன்பு உங்களுடைய இருதயத்தில் இருக்குமானால், "ஓ, இயேசுவே, தயவு கூர்ந்து அதை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும். நான் அந்தவிதமாக இருக்க விரும்பவில்லை" என்று கூறுங்கள்.

இப்பொழுது இதைக் கூறிக்கொண்டிருக்கிற—அந்த ஒரு நபராய் இருக்க வேண்டும் என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை. நான்—நான் ஒரு உண்மையான விசுவாசியாயிருக்க வேண்டும் என்று பொருட்படுத்திக் கூறுகிறேன். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, ஒவ்வொரு நாளும் அவருக்காக வாழுங்கள். எந்தத் தீமையும் செய்யாதிருங்கள்.

255 இப்பொழுது, அநேக சமயங்களில் நான் கால்வீனிய நம்பிக்கையைக் குறித்து பேசுகிறேன். இப்பொழுது, நீங்கள் விரும்புகிற எந்தக் காரியத்தையும் செய்ய அது உங்களைத் தளர்வுறச் செய்கிறது என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். அன்றொரு நாள் ஒரு நபர்...நான், "நீங்கள் சபைக்குச் சென்றீர்களா?" என்று கேட்டேன்.

அவர், "நான் வேட்டைக்குச் சென்றிருந்தேன்" என்றார்.

அந்த மனிதனுடைய மனைவி ஞாயிற்றுக் கிழமையன்று சலவை கடையிலிருந்து வந்துகொண்டிருந்தாள். நான், "நீங்கள் ஏன் சபைக்குச் செல்லவில்லை?" என்று கேட்டேன்.

அவள், "நான் என்னுடைய துவைப்பை முடித்துவிட்டேன்" என்றாள்.

நான், “நீங்கள் அதைச் செய்திருக்கக் கூடாது” என்றேன்.

“பாருங்கள்,” அவள், “நான் ஒரு பழைய பிரமாணத்தை கடைபிடிப்பவள் அல்ல” என்றாள்.

நான், “ஆனால் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று நான் நினைத்தேன்” என்றேன். பார்த்தீர்களா? நான், “யாரோ ஒருவருடைய வழியில் நீ ஒரு தடைக்கல்லை வைத்துக்கொண்டிருக்கிறாய் என்பதை நீ அறிவாயா?” என்று கேட்டேன். பார்த்தீர்களா? நான், “அது…” என்றேன்.

“ சரி, ஆஹா, நான்—நான் *இதை* விசுவாசிக்கிறேன். நான் அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டியதில்லை. நான் பிரமாணத்தை கடைபிடிப்பவன் அல்ல.”

256 சரி, என் சகோதரனே, சகோதரியே பாருங்கள், இங்கே பாருங்கள். பவுல், “ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்” என்றான். மேலும் இது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்…

257 இப்பொழுது, “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் வேட்டையாடுகிறீர்கள். நீங்கள் எப்போதாவது ஞாயிற்றுக்கிழமை வேட்டையாடவில்லையா?” என்று கேட்கலாம். நான் உங்களுக்கு ஒன்றைக் கூறட்டும். இல்லை…இதன் பின்னால் நான் என்னையே பாராட்டிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் நான்…நான் இப்பொழுது ஒரு ஓய்வுநாள் ஆராதனைக்காரன் அல்ல, பரிசுத்த ஆவியானவரே நம்முடைய ஓய்வுநாள் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன், ஆனால் நாம் அந்த உயிர்த்தெழுதலை ஒரு நினைவுச் சின்னமாகக் கனப்படுத்த வேண்டும் என்று நான் நம்புகிறேன். அது ஒரு நினைவுச் சின்னமாயுள்ளது…நீங்கள் எந்த நாளையாவது கனப்படுத்தினால், அந்த உயிர்த்தெழுதலை கனப்படுத்துங்கள்.

258 இப்பொழுது, எந்தச் ஒரு குறிப்பிட்ட நாளையும் ஆசரிப்பதன் பேரில் எந்தச் சட்டமும் கிடையாது, ஏனென்றால் நீங்கள் அவருக்குள் பிரவேசிக்கும்போது, நீங்கள் ஓய்வுநாளுக்குள் பிரவேசிக்கிறீர்கள், சமாதானம். கர்த்தருக்குச் சித்தமானால், எப்படியாயினும் சீக்கிரத்தில் பதிலளிக்கும்படியான அந்தக் கேள்வியை நான் இங்கே வைத்திருக்கிறேன், ஓய்வு நாள் என்றால் என்ன என்பதைக் குறித்து. தேவனுக்கு சித்தமானால், நான் அதை விளக்கிக் கூறுவேன்.

இப்பொழுது கவனியுங்கள், இதை நினைவில் கொள்ளுங்கள். பார்த்தீர்களா? நான் ஒரு சிறு பையனாய் இருந்தபோது, சரியாக இங்கே எய்க்ஸ் சாலையில் வசித்து வந்தபோது, எனக்குச் சுமார் பதினான்கு வயது; நான் ஒரு ஜீவனத்திற்காகக் கண்ணி வைத்துக்கொண்டிருந்தேன். எங்களுடைய வீட்டில் ரொட்டிகளை

வாங்குவதற்கு நான் உதவி செய்ய வேண்டிய ஒரே காரியம் ஸ்கங்க்ஸ்கள், நீர்கஸ்தூரிகள், ஆப்ஸம் போன்றவை.

நான் கண்ணி வைப்பதை விரும்பினேன், நான் அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. நான் ஒரு ஸ்கங்க்கைப் போல நாற்றத்துடன் பள்ளிக்குச் செல்வேன், நான்—என்னிடம் ஒரே ஒரு ஜோடி ஆடைகள் மாத்திரமே இருந்தன, என்னால் உடுத்த முடிந்ததெல்லாம் அவ்வளவுதான். என்னிடம் இருந்தது அவ்வளவுதான். அம்மா அவற்றைக் கழற்றித் துவைத்து, மீண்டும் அணிவிப்பாள்; இப்போது, அப்படித்தான் குட்டிப் பையனாக, நான் பள்ளிக்கூடம் சென்றேன். ஆனால் ஒரு நாள் இரவு நான் அங்கே மேலே நின்று கொண்டிருந்தேன்; நான், "வாத்தனின் இடத்தைச் சுற்றி, அதற்கு மேலே நான் அந்தக் கண்ணிகளை அமைத்திருக்கிறேன்" என்று சொன்னேன். நான் ஒவ்வொரு நாள் காலையும் சுமார் இரண்டு மணிக்கு இந்தக் கண்ணிகளை இயக்க ஒரு விளக்கை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் செல்வேன், அதன்பின்னர் பள்ளிக்குச் செல்லச் சரியான நேரத்திற்குத் திரும்பி வந்துவிடுவேன். நான் ஒரு முயலைப் பிடிப்பேன்; அதில் எனக்குப் பதினைந்து செண்டுகள் கிடைத்துள்ளன. அதிலிருந்து எனக்கு ஒரு பெட்டி தோட்டாக்கள் கிடைக்கும், ஒருவேளை அதைக் கொண்டு மூன்று அல்லது நான்கு முயல்களைக் கொல்லலாம். நாங்கள் சில மாப்பண்டங்களையும், முயல்களையும் செய்ய வேண்டியிருக்கவில்லை—ஏன், இரவு உணவிற்கு குழம்பு கூடச் செய்ய வேண்டியிருந்தது, நான் மற்றதை விற்று, ஒரு வேளை ரொட்டி அல்லது சிறிது மாவு அல்லது குழம்பு தயாரிக்க சிறிது மாவு வாங்குவதற்கு போதுமானதைப் பெறலாம். நீங்கள் அந்தவிதமாக வாழ்ந்துள்ளீர்களா அல்லது இல்லையா என்று எனக்குத் தெரியாது.

259 நான் ஆற்றில் தூண்டில் கயிறுகளை அமைத்து, கீழே சென்று, அந்த மீன்களைப் பிடித்து, ஒரு பவுண்டு பத்து சென்ட்டுக்கு விற்பேன். என்னுடைய தூண்டில் கயிறுகளை அமைப்பேன். எனக்குப் படகு கிடையாது; நான் ஒரு மரக்கட்டையோடு நீந்திச் செல்வேன். ஆற்றில் இறங்கினேன், இன்னும் குளிராக இருந்தது, என் தூண்டில் வாளியை இந்த மரக்கட்டையின் மீது வைத்துவிட்டு, அப்படியே துடுப்பிட்டுச் சென்றேன், என் நிர்வாண உடலை ஆற்றில் நனைத்தபடி, இதை ஓட்டினேன்…இந்தப் பக்கம் ஒரு கயிறு இருந்தது, என் மீனை அதில் கட்டினேன். அந்தப் பெரிய கெளுத்தி மீன்கள் அப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது என் காலில் துடுப்பு குத்த, நான் என் இரையை மாட்டினேன்…

260 ஆனால் பாருங்கள், பல இரவுகளில் நான் பதினொரு மணிக்கு அந்த ஆற்றுக்குச் சென்று, அந்தக் கயிற்றில் இருந்த ஒவ்வொரு தூண்டில் இரையையும் உதறித் தள்ளியிருக்கிறேன். நான் ஆறு நாட்களில் போதுமான அளவு பிடிக்க முடியாவிட்டால், ஏழாவது நாளில் வருவதை நான் விரும்பவில்லை. நான் அங்கே மழையில்

நின்றிருக்கிறேன்.

261 ஒரு நாள் இரவு, நான் இன்னும் நின்றுகொண்டு, சாய்ந்துகொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது…நான் ஒரு பாவியாயிருந்தேன்; ஆனால் நான் நின்றுகொண்டு, இந்தவிதமாக வாசலில் உள்ள கம்பத்தில் சாய்ந்து கொண்டிருந்தேன். ஓ, கிட்டத்தட்ட பதினோரு மணிக்கு மேல் பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. நான், "இன்று இரவு எனக்குத் தாமதமாகும், ஆனாலும் நான் போய் அந்தக் கண்ணிகள் ஒவ்வொன்றையும் அவிழ்த்துவிடப் போகிறேன். ஓய்வுநாளில் நான் அதனைப் பிடிக்கமாட்டேன்" என்றேன். நான், "நான் அவைகளுக்கு கண்ணி வைக்கமாட்டேன்—நான் வைக்கமாட்டேன்" என்றேன். தேவன் அதைக் கனப்படுத்தினார்.

262 நான் எப்பொழுதுமே என் வாழ்நாள் முழுவதும், ஒரு வேட்டைக்காரனாக இருக்க வேண்டும் என்று விரும்பிய அந்த நேரம் எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய தாத்தா அவ்வாறு இருந்தார். உங்களுக்குத் தெரியுமல்லவா, என் பாட்டி பழங்குடியினர் முகாமிலிருந்து வெளியே வந்தவர்; அவர் ஓய்வூதியம் வாங்கினார். நான் வெளியில் இருப்பதை மிகவும் விரும்புகிறேன்.

263 எனக்கு நினைவிருக்கிறது. நான் எப்பொழுதுமே விரும்பினேன்…நான்—நான் என் வாழ்நாள் முழுவதும் விரும்பினேன்…நான் .30-30 துப்பாக்கியைச் சொந்தமாக வைத்திருக்குமளவிற்கு எனக்குப் போதுமான பணம் எப்போதாவது கிடைக்குமா என்று நினைத்தேன்…நான் எப்போதாவது அதைச் செய்ய முடிந்தால், அப்பொழுது நான் ஒரு சில கண்ணிகளைப் பெற்றுக்கொள்வேன். நான் மலைகளுக்குச் செல்வேன்; மற்ற உலகத்தாரை நான் கண்டுகொள்ள மாட்டேன். நான், "எப்போதாவது நான் எனது .22 ஐ எடுத்துப் பயிற்சி செய்து நன்கு சுடும் ஒருவனாக இருந்தால், சில வேட்டைக்காரர்கள் சில சமயங்களில் என்னுடன் செல்ல விரும்புவார்கள். நான் நன்கு சுடும் ஒருவனாக இருந்தால், அவர் தன்னுடைய பாதுகாப்பிற்காக என்னை உடன் செல்ல அனுமதிப்பார்; நான் வேட்டைக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்" என்று நினைத்தேன். நான் பார்க்கிறேன், என் சுவர்களில், பணத்தால் வாங்கக்கூடிய மிகச் சிறந்த துப்பாக்கிகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன, ஜனங்கள் வேட்டைக்குச் செல்லத் துப்பாக்கிகளைக் கடனாக என்னால் கொடுக்கும் வரை.

264 அவர் என்னை மலைகளுக்குச் சென்று பிரசங்கிக்க அனுமதிக்கிறார், உலகத்தில் உள்ள சில சிறந்த வழிகாட்டிகள் வேட்டையாட என்னை இலவசமாக அழைத்துச் செல்கின்றனர். "ஆச்சரியமான கிருபை, எவ்வளவு இனிமையான சத்தம்."

265 நான்…இன்று காலையும் கூட இங்கே எங்கோ ஒரு வயதான மான் வேட்டைக்காரர் ஒரு .35 ரெமிங்டனுடன், எனக்கு அந்தத்

துப்பாக்கி உண்மையாகவே தேவைப்படவில்லை, ஆனால் அவர் தன்னுடைய கரத்தை என்மீது போட்டு, அவர் வேட்டையாட முடியாத அளவுக்கு வயோதிகனாகிவிட்டபடியால், “நான் என்னுடைய துப்பாக்கியை உனக்குக் கொடுக்க விரும்புகிறேன்” என்று கூறினார். நான் ஒரு சிறு பையனாயிருந்தபோது, அதைப் போன்ற ஒரு துப்பாக்கியை நான் உடையவனாயிருப்பேன் என்று நான் எப்போதாவது நினைத்திருந்தால், ஓ, என்னே, அது என்னவாயிருந்திருக்கும். என் சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் அந்த அருமையான துப்பாக்கிகளையும், வேட்டையாடச் செல்லும் இடங்களையும் நினைத்துப் பார்க்கிறேன்.

266 நான் வெளியே செல்வதும், பையன்கள் கூம்பு வடிவ ஐஸ்கிரீம் வாங்குவதும் எனக்கு நினைவிருக்கிறது. மேலும் சில சமயங்களில், அவர்களில் சிலரிடம் கூடுதலாக ஒரு நிக்கல் இருக்கும், அதைக் கொண்டு எனக்கு ஒன்று வாங்கித் தருவார்கள். என்னே, என்னால் அவைகளில் ஒன்றையும் திரும்ப வாங்க முடியவில்லை. நான், “நான்…” என்று எண்ணினேன்.

267 அவர்கள் சில சமயங்களில் இந்தப் பழைய பொருட்களை வாங்குவது வழக்கம், நாம் அதை “மட்லார்க் இறைச்சி இடையீட்டு ரொட்டிகள்” என்று அழைக்கிறோம். உங்கள் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கிறதா அல்லது இல்லையா என்று எனக்குத் தெரியாது, ஆனால் பண்டைய காலத்தவர்களில் சிலருக்கு… அதை ஒரு நிக்கலுக்கு வாங்கலாம், அதோடு நிறைய பொரித்த வெங்காயமும் வரும். ஓ, எனக்கு அவை மிகவும் பிடிக்கும். ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது எங்களுக்கு இருக்கவில்லை…சோள அப்பமும், வெல்லப்பாகும் புசிக்க இருந்தது (அது எப்படியிருக்கும் என்று உங்களுக்குத் தெரியும்).

268 இப்போது, யாராவது எனக்கு அந்த இறைச்சி கலந்த இடையீட்டு ரொட்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தால், பையனே, நான் அதைப் பிடித்திருந்த என் விரல்களை நக்கிக் கொண்டே இருப்பேன். அது—அது…மிகவும் நல்ல ருசி. மேலும் நான், “பையனே, அந்த மனிதனுக்கு, என்னால் அவருக்கு ஒரு இறைச்சி கலந்த இடையீட்டு ரொட்டி மாத்திரம் வாங்கித் தர முடியுமா” என்று எண்ணினேன். இப்பொழுது, ஒரு சபைக்கு அவர்களுடைய இரவு உணவை என்னால் வாங்க முடியும்.

269 அந்தக் காரியங்கள் யாவும் எனக்கு நினைவிருக்கிறது. அது எங்கிருந்து வந்தது? தேவனுடைய கிருபை, நான் ஒன்றுமே செய்யவில்லை.

270 நான் இங்கே தெருவில் நடந்து சென்று, நான் யாரோ ஒருவரிடத்தில் பேசியது எனக்கு நினைவிருக்கிறது. என் தகப்பனை, நீங்கள் யாவரும் அதை அறிவீர்கள், அவர் குடித்தார்; அவர் மதுபானம் தயாரித்ததார். அது…யாருக்கும் என்னோடு எந்தச்

சம்மந்தமும் கிடையாது. நான் வீதியில் சென்று மனிதரிடம் பேச முயற்சிப்பேன்; நான் இன்றைக்கும் அந்த மனிதர்களைச் சந்திக்கிறேன். யாரிடமாவது பேச முயற்சித்தால், வேறு யாருமே பேசவில்லையென்றால், அவர்கள், “ஆம், ஹூ-ஹூ” என்று நிற்பார்கள். பார்த்தீர்களா? நான் ஒரு பிரான்ஹாமாக இருந்தேன்.

271 எனவே, நான் மிகவும் மோசமாக உணர்ந்து, திரும்பி நடந்து சென்று விடுவேன். நான், “நான் அதில் குற்றவாளி அல்ல. என் தந்தை செய்ததை நான் செய்யவில்லை. நான் என் வாழ்க்கையில் ஒருபோதும் மது அருந்தியதேயில்லை. நான் ஏன் அதைச் சகிக்க வேண்டும்?” என்று எண்ணினேன். அண்மையில் இங்கு நான் மனைவியிடம், “நான் ஏறக்குறைய ஊருக்கு வெளியே தங்க வேண்டியதாயுள்ளது” என்று சொல்லிக்கொண்டிருந்தேன். தேவன் எனக்கு நன்மையாய் இருந்து வருகிறார்.

272 ஒரு சமயம் அங்கே அமர்ந்திருந்த நாத்தானிடம் அவர் அங்கே கூறினதை நான் சிந்தித்துப் பார்த்தேன். நாத்தான்…தாவீது, “கேதுரு மரத்தினால் செய்யப்பட்ட ஒரு வீட்டில் நான் குடியிருப்பது சரியாயும், என் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி அங்கே ஒரு கூடாரத்தின் கீழ் மூடப்பட்டிருக்கவும் செய்வது சரியா?” என்று கூறினான். அவன்…

தீர்க்கதரிசியாகிய நாத்தான், “தாவீதே, தேவன் உன்னோடு இருக்கிறபடியால், உன் இருதயத்தில் உள்ள யாவையும் செய்” என்றான். தீர்க்கதரிசி ஒரு தவறு செய்தான், மனப்பூர்வமாய் அல்ல.

அன்றிரவு கர்த்தர் தீர்க்கதரிசியினிடத்தில் வந்து, “என் தாசனாகிய தாவீதை நோக்கி, ‘நான் அங்கே சில ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அவனை ஆட்டுத் தொழுவத்திலிருந்து அழைத்து வந்தேன்; பூமியில் உள்ள பெரிய மனிதர்களைப் போல அவனுக்கு ஒரு பெயரைச் சூட்டுகிறேன். (அவர் அவனுக்கு மகத்தான நாமத்தைக் கொடுத்தார் என்று ஒருபோதும் கூறவில்லை, பூமியில் இருந்த மகத்தான மனிதர்களின் நாமத்தையே அவர் அவனுக்குச் சூட்டினார்.) தாவீது, நான் இந்தக் காரியங்களையெல்லாம் உனக்காகச் செய்திருக்கிறேன். நீ சென்ற இடமெல்லாம் உன் சத்துருக்களை நான் சங்கரித்தேன். நான் உனக்கு அருகில் இருந்திருக்கிறேன். நான் உன்னை ஒருபோதும் தவறவிட்டதேயில்லை, நான் உன்னைத் தவறவிடமாட்டேன். ஆனால் நீ நகரத்தைக் கட்ட என்னால் அனுமதிக்க முடியாது’ என்று போய்ச் சொல்” என்று கூறினார்.

273 நான் அதைப் பற்றி நினைத்தேன், இப்போது தேவன் எனக்கு உதவி, மகத்தான மனிதர்களை அறியச் செய்து, உலகைச் சுற்றி வர அனுமதித்த அந்த இடத்தைப் பற்றியும் நினைத்தேன். உலகம் முழுவதிலுமிருந்து ஜனங்கள் தங்களுக்காகவும், வியாதியஸ்தருக்காகவும் ஜெபிக்கும்படி அழைக்கிறார்கள்,

உங்களுடன் ஒரு சில நிமிடங்கள் இருக்க விரும்புகிறார்கள், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் அதைத் திருப்பிக் கொள்ளக்கூடமாட்டார்கள்…ஆனால் இப்போது தெருவில் என்னைக் கண்டால் தலை திருப்பிக் கொள்கிறார்கள். இப்போது, நான் நகரத்திற்கு அழைத்து வந்து இங்கு வைத்திருக்கும் மக்களின் உணவு, தங்கும் விடுதிக் கட்டணங்கள், தங்கும்…விடுதிகளுக்குச் செல்வது, நகரத்தைச் சுற்றி வருவது போன்றவற்றின் மூலம் அந்த வணிகர்கள் செழிக்கிறார்கள்.

274 ஜனங்கள்…ஜனங்கள் என்னைச் சிறிதளவும் நேசிக்கவில்லை; எனக்கு யாரும் எந்தப் பயனும் கண்டுகொள்ளவில்லை. இப்பொழுது, தேவனுடைய ஒத்தாசையினால், நான் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியை வழிநடத்திக் கொண்டிருக்கிறேன் என்று நான் விசுவாசிக்கிறேன். ஓ. “ஆச்சரியமான கிருபை, எவ்வளவு இனிமையான சத்தம்.”

275 அது எங்கிருந்து வந்தது? என்னுடைய கல்வியா? என்னிடம் ஒன்றுமில்லை. அது எங்கிருந்து வந்தது? என்னுடைய ஆளுமையா? என்னிடம் ஒன்றுமில்லை. அது வேத சாஸ்திரத்தைக் குறித்த என்னுடைய அறிவிலிருந்து வந்ததா? எனக்கு ஒன்றுமே தெரியாது. அது எதனால் வந்தது? தேவனுடைய கிருபை என்னை இரட்சித்தது.

கிருபையே என் இருதயத்தை பயப்படக் கற்றுக் கொடுத்தது,
கிருபையினால் என்னுடைய பயங்கள் நீங்கினது;
அந்தக் கிருபை எவ்வளவு மகிழ்ச்சியாகத் தோன்றியது,
நான் விசுவாசித்த முதல் வேளையில்!

அநேக இடர்களினூடாகவும், கஷ்டங்களினூடாகவும், கண்ணிகளினூடாகவும்,
நான் ஏற்கனவே வந்திருக்கிறேன்;
கிருபையே என்னை இதுவரை பத்திரமாகக் கொண்டு வந்தது,
கிருபை என்னை வீட்டிற்கு கொண்டு செல்லும்.

பத்தாயிரம் ஆண்டுகளாக நாம் அந்த நகரத்தில் இருந்தபோது,
அது சூரியனைக் காட்டிலும் பிரகாசமானது;
நாம் முதலில் துவங்கினதைக் காட்டிலும்,
அவருடைய துதியைப் பாட நமக்குக் குறைவான நேரமே இருக்காது.

ஓ, நான் எப்படியாய் இயேசுவை நேசிக்கிறேன், அந்த அழகான நாமம் நான் ஒரு—ஒரு பாவியாயிருந்தபோது என்னை இரட்சித்து, நான் சுகவீனமாயிருந்தபோது என்னைச் சுகப்படுத்தி, அது எனக்கு

அந்தக் நகரத்தில் ஒரு வீடு என்ற வாக்குறுதியை அளிக்கிறது. அந்தக் கன்மலையில் எனக்கு ஒரு வீடு உண்டு. இப்பொழுது தேவனுடைய பிள்ளைகள் யாவரையும் ஒன்று சேர்த்து, “நாம் போவோம்” என்று கூறுவதைத் தவிர இப்போது வேறு எதுவும் முக்கியமில்லை. நள்ளிரவு நேரமாகிறது; நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகிவிட்டது. நாம் ஜெபிப்போமாக.

276 கர்த்தராகிய இயேசுவே, ஒரு பரிபூரண நாளின் முடிவு… நாங்கள் மலையின் உச்சியில் நின்று சூரியனை கவனிப்பதை போல, அப்பால் உள்ள பெரிய மேற்கு மலைகளில் சிவப்புக் கோடுகள் மேலே வரும்போது, அந்த மகத்தான கண்கள் தன்னை மூடிக்கொள்ளும்போது, பறவைகள் தங்களுடைய கூட்டிற்கு செல்லத் துவங்கும், இரவு வருகிறது. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிற மற்றொரு மகத்தான ஆவிக்குரிய நாளை நாங்கள் கண்டோம். இப்பொழுது, கர்த்தாவே, நாங்கள் எங்களுடைய கூட்டிற்கு செல்லப் போகிறோம். எங்களைக் கவனித்துக் கொள்ளும்; கர்த்தாவே, ஒன்றுமே எங்களைத் தாக்காதிருக்கட்டும். இரவின் சர்ப்பங்களிலிருந்தும் பொல்லாங்கிலிருந்தும் எங்களைக் காத்துக் கொள்ளும். தேவன் எப்பொழுதும் எங்களுக்கு அருகிலிருந்து, எங்களைப் பாதுகாத்து, எங்களுக்கு உதவி செய்வாராக.

277 பரலோகப் பிதாவே, கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரையும், கலந்துகொள்ள முடியாதவர்களையும், அந்த ஒலிநாடாக்களைக் கேட்கும் அனைவரையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். கேள்விகள் மிகவும் கடுமையாக இல்லாதிருக்கட்டும். கர்த்தாவே, நான் ஒரு தவறு செய்திருந்தால், என் இருதயத்தை நீர் அறிந்திருக்கிறீர்; நான் அதைச் செய்ய எண்ணவில்லை. தேவனே, தவறு ஏதாகிலும் இருக்குமானால், நீர் அதை ஒருபோதும், ஒருபோதும் விட்டுவிடாதபடிக்கு; ஒலிநாடா நிறுத்தப்படட்டும் என்று நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, நான் யாரையும் வஞ்சிக்க அனுமதிக்காதேயும். நான் உம்முடைய உண்மையான ஊழியக்காரனாயிருக்கட்டும், ஏனென்றால் அதுவே என்னுடைய முழு இருதயத்தின் வாஞ்சையாயுள்ளது. நான் வாழ்ந்தாலும் அல்லது மரித்தாலும், நான் தாமதித்தாலும் அல்லது நான் தொடர்ந்து சென்றாலும், நான் உறங்கினாலும் அல்லது அவர் வரும்போது நான் விழித்திருந்தாலும், அது எனக்கு ஒரு பொருட்டல்ல, பிதாவே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக. “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாட்களில் இந்தப் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். தோல் புழுக்கள் இந்தச் சரீரத்தை அழித்தபிறகும், நான் என் மாம்சத்திலிருந்து தேவனைக் காண்பேன்.” அது தீர்க்கதரிசியாகிய யோபு கர்த்தருடைய வருகையைக் கண்டபோதாய் இருந்தது.

278 மேலும், கர்த்தாவே, இன்றைக்கு உம்முடைய ஊழியக்காரர்கள்

என்ற முறையில், நாங்கள் உம்முடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எனவே கர்த்தாவே, எப்பொழுது, எப்படி, எங்கே என்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. நாங்கள் உம்மைப் பிரியப்படுத்த மாத்திரமே விரும்புகிறோம். நாங்கள் உம்முடைய கரங்களில் இருக்கிறோம். கர்த்தாவே, சூரியன் உதிக்கும் வரை எங்களைக் காத்துக் கொள்ளும். இதை அருளும், அதன்பின்னர் நாங்கள் யாவரும் சீயோனுக்கு அணிவகுத்துச் செல்வோம், அங்கே ஆட்டுக்குட்டியானவர் ஒளியாயிருக்கிறார்.

279 இங்குள்ள என்னுடைய அருமையான சிறு பிள்ளைகளை, கர்த்தாவே, நான் உமக்கு வேதாகமத்தின் பிணைப்புகளினூடாகப் பிறப்பித்திருக்கிறேன், அவர்கள் இந்த வார்த்தையின் கனிகளாயிருக்கிறார்கள். அவர்கள் என்னை நேசிக்கிறார்கள், நானும் அவர்களை நேசிக்கிறேன். நீர் எங்கள் எல்லோரையும் நேசிக்கிறீர் என்பதை நான் அறிவேன். தேவனே, நாங்கள் அவரை மாத்திரமே காணும்படி நீர் உம்முடைய வார்த்தையினால் எங்களைக் கருத்தரிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தாவே, அதை அருளும். நாங்கள் அவருடைய வார்த்தையால் நிரம்பியிருப்போமாக, அதன் மூலம் ஆவியானவர் தாம் வாக்களித்த எந்தவொரு வார்த்தையையும் வெளிப்படுத்த, எங்களை எங்கும், எந்த இடத்திலும் பயன்படுத்த முடியும். எங்கள் அனைவருக்கும் அதை அருளும். இங்கே இந்தக் கூட்டத்தினர் முன்னிலையில், இவற்றைக் இங்கே…

280 என்னுடைய சகோதரன் ஜாக்ஸன் இப்பொழுது மீண்டும் தென்னாப்பிரிக்காவிற்கு திரும்புகிறார். அவரோடும் அவருடைய மனைவியோடும் செல்லும்; கர்த்தாவே, அவர்களோடே இரும். அவர்களுடைய பயணத்தில் அவர்களை வழிநடத்தும்.

281 இங்கே சகோதரன் லீ வெயில் நான் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்து வைத்து, புத்தகமாக ஆக்க முயற்சிக்கிறார். ஓ, தேவனே, சகோதரன் வெயிலுக்கும், சகோதரி வெயிலுக்கும் உதவி செய்யும்.

282 இதோ ஆர்கன்சாஸில் உள்ள—உள்ள இந்தச் சகோதரர்கள், மார்டின் சகோதரர்கள், இந்தச் மற்ற சகோதரர்கள் யாவரும் உள்ளனர். நீர் அவர்கள் ஒவ்வொருவரோடும் இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

283 சகோதரன் நெவில், சகோதரன் கேப்ஸ், சகோதரன் ரடல், சகோதரன் ஜாக்சன், எல்லோருடனும் இரும். ஓ, தேவனே, அநேகர் உள்ளனர். அவர்கள் ஜார்ஜியாவிலிருந்தும், அலபாமாவிலிருந்தும், மாநிலம் முழுவதும் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ளனர். நாங்கள் அந்தப் பாடலைக் குறித்து சிந்திக்கிறோம்:

ஓ, அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்தும்
அவர்கள் தூர தேசங்களிலிருந்தும்,

நம்முடைய இராஜாவோடு விருந்துண்ண,
அவருடைய விருந்தினராகப் புசிக்க வருகின்றனர்;

அவர் தம்முடன் பங்குகொள்ள அவர்களை அழைத்துள்ளார்.

இந்த யாத்திரிகர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்!
தெய்வீக அன்பினால் கொழுந்துவிட்டெரியும்
அவருடைய பரிசுத்தமான முகத்தைக் கண்டு;
அவருடைய கிருபையில் பங்குபெறும் பாக்கியவான்கள்,
அவருடைய கிரீடத்தில் இரத்தினங்களாகப் பிரகாசிப்பார்கள்.

284 ஓ, தேவனே, மற்றவர்கள் அவரைச் சேவிக்க ஏங்கும்படியாக, அவருடைய கிரீடத்தில் நாங்கள் இரத்தினங்களாகப் பிரகாசிப்போமாக. கர்த்தாவே, அதை அருளும். பாதையில் அவர்களைப் பாதுகாத்தருளும். ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும்.

285 பிதாவே, உம்முடைய குறித்த நேரத்தில்...நான் உம்முடைய ஊழியக்காரனாயிருக்கிறேன். கர்த்தாவே, அடுத்த வாரம் நான் இவற்றைத் தொடர வேண்டுமா அல்லது அந்த நேர்காணல்களை நடத்த வேண்டுமா, அதை எனக்கு வெளிப்படுத்தும், இப்போது முதல் புதன்கிழமைக்குள் இடைப்பட்ட நேரத்தில் நாங்கள் புரிந்து கொள்ளும்படியாக எனக்குத் தெரியப்படுத்தும். பிதாவே, ஜனங்கள் வரும்படி இதை அருளும். நீர் எங்களுக்கு உதவுவீர் என்றும், எங்கள் அடுத்த சந்திப்பின்போது மீண்டும் இங்கே எங்களைச் சந்திப்பீர் என்றும் இந்த ஆசீர்வாதத்தை நான் வேண்டுகிறேன்.

286 சகோதரன் நெவில் அவர்களோடும், டெக்ஸாஸில் வார்த்தையைக் கொண்டு வரும் இந்த மனிதர்களோடும், ஆர்கன்சாஸ் மற்றும் பல்வேறு இடங்களிலும்; பிதாவே, அவர்களோடு இரும். கர்த்தாவே, சகோதரன் பியரி கிரீன் மற்றும் அங்கிருந்த எல்லா குழுவினரும், அவர்கள் எல்லோரோடும் இரும்; அவர்கள் உம்முடைய சிறு பிள்ளைகளாயிருக்கிறார்கள். உலகம் முழுவதிலும் அவர்கள் உம்முடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பிதாவே, நாங்கள் எங்களை உம்மிடத்தில் சமர்ப்பிக்கையில், நாங்கள் ஜெபிக்க எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் எங்களை உபயோகியும். ஆமென்.

287 *அவர்கள் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வருகிறார்கள்* என்ற அந்தப் பாடல் எனக்குப் பிடிக்கும். எத்தனை பேர் அதை அறிவீர்கள்? நான் அறிந்திருக்கிறபடி எனக்குத் தெரியாது, ஆனால் எனக்கு ஒரு சரணம் தெரியும் என்று நான் நினைக்கிறேன். சகோதரியே, நீங்கள் அதை வாசிக்கலாம். அவர்களால் அதைப் பாட முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

ஓ, அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருகின்றனர்,
அவர்கள் தூர தேசத்திலிருந்து வந்து,
நம்முடைய இராஜாவோடு விருந்துண்ண, அவருடைய விருந்தினராகப் புசிக்க வருகின்றனர்;
இந்த யாத்திரிகர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்!
ஓ, தெய்வீக அன்பினால் கொழுந்துவிட்டெரியும்
அவருடைய பரிசுத்தமான முகத்தைக் கண்டு;
அவருடைய கிருபையில் பங்குபெறும் பாக்கியவான்கள்,
அவருடைய கிரீடத்தில் இரத்தினங்களாகப் பிரகாசிப்பார்கள்.

ஓ, இயேசு சீக்கிரமாய் வருகிறார்,
அப்பொழுது நம்முடைய சோதனைகள் முடிவடையும்.
ஓ, பாவத்திலிருந்து விடுதலையாயிருக்கிறவர்களுக்காக
நம்முடைய கர்த்தர் இந்த நொடியில் வருவாரானால் எப்படியிருக்கும்?
ஓ, அப்படியானால் அது உங்களுக்குச் சந்தோஷத்தையா,
அல்லது துக்கத்தையும், ஆழ்ந்த நம்பிக்கையின்மையும் கொண்டு வருமா?
மகிமையில் கர்த்தர் வரும்போது,
நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

நீங்கள் அதை விரும்புகிறீர்களா? நாம் அதை மீண்டும் முயற்சிப்போமாக.

ஓ, அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்தும்,
ஓ, அவர்கள் தூர தேசத்திலிருந்து வந்து,
நம்முடைய இராஜாவோடு விருந்துண்ண, அவருடைய விருந்தினராகப் புசிக்க வருகின்றனர்,
இந்த யாத்திரிகர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்!
தெய்வீக அன்பினால் கொழுந்துவிட்டெரியும்
அவருடைய பரிசுத்தமான முகத்தைக் கண்டு;
ஓ, அவருடைய கிருபையில் பங்குபெறும் பாக்கியவான்கள்
அவருடைய கிரீடத்தில் இரத்தினங்களாகப் பிரகாசிப்பார்கள்.

ஓ, இயேசு சீக்கிரமாய் வருகிறார்,

அப்பொழுது நம்முடைய சோதனைகள் முடிவடையும்.
ஓ, பாவத்திலிருந்து விடுதலையாயிருக்கிறவர்களுக்காக
நம்முடைய கர்த்தர் இந்தநொடியில் வருவாரானால் என்னவாகும்?
ஓ, அப்படியானால் அது உங்களுக்கு சந்தோஷத்தையா,
அல்லது துக்கத்தையா, ஆழ்ந்த நம்பிக்கையின்மையும் கொண்டு வருமா?
மகிமையில் உள்ள நம்முடைய கர்த்தர் வரும்போது,
நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

எத்தனை பேர் அவரை அங்கே சந்திக்க விரும்புகிறீர்கள்? ஓ, என்னே!

ஓ, இயேசு சீக்கிரமாய் வருகிறார்,

உங்களுடைய கண்களை மூடிக்கொண்டு, நீங்கள் எக்காள சத்தத்தைக் கேட்பதாகக் கற்பனை செய்து பாருங்கள்.

அப்பொழுது நம்முடைய தொல்லைகள் முடிவடையும்.
ஓ, பாவத்திலிருந்து விடுதலையாயிருக்கிறவர்களுக்காக
நம்முடைய கர்த்தர் இந்த நொடியில் வருவாரானால் என்னவாகும்?
ஓ, அப்படியானால் அது உங்களுக்கு சந்தோஷத்தையா
அல்லது துக்கத்தையும், ஆழ்ந்த நம்பிக்கையின்மையும் கொண்டு வருமா?
மகிமையில் உள்ள நம்முடைய கர்த்தர் வரும்போது,
நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

288 நீங்கள் அதை விரும்புகிறீர்களா? பேட், நன்கு தைரியமாயிருங்கள்! இந்தக் காலைகளில் ஒன்றில் உங்களுக்கான நாள் விடியப் போகிறது. அது எங்கே சென்றது என்பதை நான் காணவில்லை, ஆனால் அது நன்றாகக் காணப்பட்டது. ஆமென்! சகோதரனே, உங்களுக்கு நீண்ட, நீண்ட காலம் உள்ளது, அது திரும்பி வரும். “தண்ணீரின் மேல் போடப்பட்ட ஆகாரத்தைப் போல என்றோ ஒரு நாள் உங்களிடத்திற்குத் திரும்பும்.” அது உண்மை. சரி.

ஓ, நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?

என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது,
கல்வாரியின் ஆட்டுக்குட்டியே,

ஓ தெய்வீக இரட்சகரே;
இப்பொழுது நான் ஜெபிக்கையில்,
என்னுடைய எல்லா பாவங்களையும் போக்கிவிடும்,
நான் ஒருபோதும் உம்மிடத்திலிருந்து
புறம்பே வழிதவறிச் செல்ல விடாதேயும்.

வாழ்க்கையின் இருண்ட சிக்கலில் நான் மிதிக்கும்போது,
துயரங்கள் என்னைச் சுற்றிலும் சூழும்போது,
நீரே என்னுடைய வழிகாட்டியாயிரும்;
இருளை பகலாக மாற்ற கட்டளையிடும்,
துக்கத்தின் பயங்களைத் துடைத்து,
ஓ இந்நாள் முதற்கொண்டு நான்
முழுவதுமாக உம்முடையவனாய் இருப்பேனாக!

நீங்கள் அதை நேசிக்கவில்லையா?

என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது,
கல்வாரியின் ஆட்டுக்குட்டியே,
ஓ தெய்வீக இரட்சகரே;
இப்பொழுது நான் ஜெபிக்கையில்,
என்னுடைய எல்லா பாவங்களையும் போக்கும்,
நான் ஒருபோதும் உம்மிடத்திலிருந்து புறம்பே
வழிதவறிச் செல்ல அனுமதியாதேயும்.

பிணைக்கும் கட்டு ஆசீர்வதிக்கப்பட்டதாக (ஓ, என்னே!)
நம்முடைய இருதயங்கள் கிறிஸ்தவ அன்பில்;
நெருங்கின சிந்தையின் ஐக்கியம்
அது மேலே உள்ளதைப் போன்றது.

நம்முடைய பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக
நாம் நம்முடைய ஊக்கமான ஜெபத்தை ஊற்றுகிறோம்;
நம்முடைய பயங்களும், நம்முடைய நம்பிக்கைகளும், நம்முடைய நோக்கங்களும் ஒன்றாயிருக்கின்றன,
நம்முடைய ஆறுதல்கள் மற்றும் நம்முடைய கவலைகள்.

ஆனால் நாம் பிரிந்து செல்லும்போது,
அது நமக்கு உள்ளான வேதனையை அளிக்கிறது;
ஆனால் நாம் இன்னமும் இருதயத்தில் இணைந்திருப்போம்,
மீண்டும் சந்திப்போம் என்று நம்புகிறோம்.

289 சகோதரி வில்சன், சுமார் முப்பத்தி மூன்று அல்லது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு உங்களுக்கு நினைவிருக்கும், நாம் ஒருவருடைய கரங்களை மற்றொருவர் பிடித்துக் கொள்வோமா? நீங்கள் அதை நினைவில் வைத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஓ, நாம் இப்பொழுது கையை நீட்டி யாரோ ஒருவரைக் கையைப் பிடித்துக் கொள்வோம்.

கட்டுகிற இணைப்பு ஆசீர்வதிக்கப்படுவதாக,
நம்முடைய இருதயம் கிறிஸ்தவ அன்பில்;
நெருங்கின சிந்தையின் ஐக்கியம்
அது மேலே உள்ளதைப் போன்றது.

நம்முடைய பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக
நாம் நம்முடைய ஊக்கமான ஜெபத்தை ஊற்றுகிறோம்;
நம்முடைய பயங்களும், நம்முடைய நம்பிக்கைகளும், நம்முடைய நோக்கங்களும் ஒன்றாயிருக்கின்றன,
நம்முடைய ஆறுதல்கள் மற்றும் நம்முடைய கவலைகள்.

நாம் பிரிந்து செல்லும்போது,
அது நமக்கு உள்ளான வேதனையை அளிக்கிறது;
ஆனால் நாம் இன்னமும் இருதயத்தில் இணைந்திருப்போம்,
மீண்டும் சந்திப்பேன் என்று நம்புகிறேன்.

நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறீர்களா? “சிறு பிள்ளைகளே, ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்.”

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!
நாம் இயேசுவின் பாதத்தில் சந்திக்கும் வரை;
நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!
நாம் மீண்டும் சந்திக்கும் வரை தேவன் உங்களோடு இருப்பாராக!

290 நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? அவர் அற்புதமானவரல்லவா? நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறீர்களா? ஒருவரோடொருவர் ஏதாவதொன்றைக் கூறுங்கள். “சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, உன்னை ஆசீர்வதிப்பாராக” என்று கூறுங்கள்.

291 அவர்கள் இன்றிரவு ஆற்றங்கரையில் நாங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், சகோதரி வில்சன். வயதான சகோதரன் ஸீவர்ட் தன்னுடைய கரங்களைத் தட்டி தரையில் நடந்து செல்வதை என்னால் காண முடிகிறது. அங்கே பின்னால் உள்ள நம்முடைய சகோதரன் தன்னுடைய முகத்தில் தாடியுடன் தன்னுடைய கரங்களை உயர்த்தி, தேவனைத் துதிப்பதை நான்

கண்டேன்; சகோதரன் ரையன், அவர் எப்படி தன்னுடைய நீண்ட தாடியுடன் அந்தப் பழைய கூடாரத்தில் வழக்கமாக உட்கார்ந்து கொண்டிருப்பார் என்பதை நான் நினைத்துப் பார்த்தேன். இன்று இரவு மகிமையின் வாயில்களுக்கு அப்பாலிருந்து, ஒரு அன்பான வயோதிக பரிசுத்தவான் செவிகொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் எவ்வளவு அற்புதமானவர், இல்லையா?

> இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
> துன்பமும் துயரமுமான பிள்ளையே;
> அது உங்களுக்குச் சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளிக்கும்,
> ஓ, நீங்கள் எங்குச் சென்றாலும் அதைக் கொண்டு செல்லுங்கள்.
>
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமும்,
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமும்.
>
> இப்பொழுது, நீங்கள் இயேசுவின் நாமத்தை உங்களுடன் கொண்டு செல்லுங்கள். (எதற்காக?)
> ஒவ்வொரு கண்ணிக்கும் கேடயமாக; (என்ன நடக்கிறது?)
> சோதனைகள் உங்களைச் சூழும்போது,
> அந்தப் பரிசுத்த நாமத்தை ஜெபத்தில் உச்சரி.
>
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும்…

ஓ, இயேசுவே, அவர்களுக்கு உதவி செய்யும் என்று நான் ஜெபிக்கிறேன்…?…கர்த்தாவே, அவர்களைக் குணப்படுத்தும், இயேசுவுக்குள்…?…இதுவும் உம்முடையதாயிருக்கிறதா…?…

> பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமுமாம்.

அது உங்களுடைய குட்டிப் பெண்ணா? அவள் அழகாக இருக்கிறாள்.

292 நேர்காணல்களைப் பொறுத்தவரை: நேர்காணல்களுக்காக இப்போதிருந்து புதன்கிழமைக்குள் அல்லது வரவிருக்கும் நேர்காணல்களுக்காகப் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை தன்னிடம் சரிபார்க்கும்படி பில்லி கூறினான், அது எதுவாக…

புதன்கிழமைக்குப் பிறகு நமக்குக் கூட்டங்கள் இல்லையென்றால், நேர்காணல் உள்ளவர்கள், அவனோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்களில் சிலரை, உங்களை எப்படித் தொடர்பு கொள்வது என்று அவனுக்குத் தெரியாது. எனவே அவன்...இப்பொழுது நேர்காணல்களை விரும்புகிறவர்கள், பில்லியிடம் தொடர்பு கொள்ளவும்.

293 நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? சரி. இப்பொழுது, நாம் சந்திக்கும் வரை, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் நம்முடைய தலைகளை வணங்க விரும்புகிறோம்; மேலும் நான் ஒரு காலத்தில் கர்த்தரின் நாமத்தில் மிஷனரி ஊழியம் செய்து, இப்போது கடலைக் கடந்து ஆப்பிரிக்காவின் தொலைதூரப் பகுதிக்குச் செல்லும் எனது நல்ல, விசுவாசமான நண்பரான சகோதரர் சிட்னி ஜாக்சனையும், அவரது மனைவியையும் நான் அழைக்கப் போகிறேன்...இந்தக் கடந்த சில ஆராதனைகளில் அவர்கள் எங்களோடு இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எப்படியாய் தேவன் அவரை ஆசீர்வதித்திருக்கிறார். சகோதரன் சிட்னி ஜாக்ஸன் இந்தக் கூட்டத்தை ஜெபத்தில் கலைந்து செல்லச் செய்வாரா என்று நான் கேட்கப் போகிறேன். சகோதரன் ஜாக்ஸன், நீங்கள் விரும்பினால்.

64-0823E கேள்விகளும் பதில்களும் #2
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org